
உ

சிவமயம்


இணுவில் - கோண்டாவில்

# காரைக்கால் சிவாலய வரலாற்றுப் பதிவுகள்





பெரிய சந்நியாசியார்



அம்பலவாணர் சுவாமிகள்

**கலாபூஷணம் மூ.சிவலிங்கம்**

32ஆவது நூல்

வெளியீடு : இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இணுவில் - கோண்டாவில்
# காரைக்கால் சிவாலயம்

# வரலாற்றுப் பதிவுகள்

கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

(32ஆவது நூல்)

வெளியீடு
இணுவில் சைவத்திருநெறிக்கழகம்
2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவாலயம்


| | | |
|---|---|---|
| ஆக்கம் | : | கலாபூஷணம் மூ. சிவலிங்கம்<br>(ஓய்வுநிலை கிராம சேவையாளர்) |
| வெளியீடு | : | இணுவில் சைவத்திருநெறிக்கழகம் |
| முதற்பதிப்பு | : | மார்கழி, 2021 |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கு |
| கணினி வடிவமைப்பும்<br>மலர் அமைப்பும் | : | சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில் |
| பக்கங்கள் | : | xxiv + 136 |
| விலை | : | 400/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"மந்திர கிரியா சுரபி" சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் J.P
அகில இலங்கைச் சமாதான நீதிவான்
பிரதம குரு : ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் (தாவடி)
விசேட குரு : ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயில் (மருதனார்மடம்)
உற்சவ குரு : ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலயம் ( காரைக்கால்)

"Bhava Nivasam"
Karaikkal Road,
Inuvil East,
Chunnakam, SriLanka.
0094 21224 1781

"பவா நிவாசம்"
காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.
0094 776935311



# ஆசிச்செய்தி

தர்மம் பதிதர்மம், பசுதர்மம் என இரு வகைப்படும். ஆலயங்கள் அமைத்து நித்திய நைமித்திக விழாக்களைக் குறைவுபடாது நடாத்துதல் பதிதர்மம் எனவும், ஆன்மாக்களை உன்னி அஃதாவது உயிர்களை ஓம்பிச் செய்யும் தர்மம் பசுதர்மம் எனவும் ஆகமங்களில் கூறப் பட்டுள்ளது.

இவ்விரண்டு வகையான தர்மங்களையும் பேணி நடைமுறையில் கைக்கொண்டு வரும் ஆலயமாக காரைக்கால் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலயம் விளங்குகிறது.

இலங்கையில் எங்குமே காண முடியாத மிக மிக அரிதான மஹாலிங்க வடிவில் புலித்தோல் மீதமர்ந்து நிஷ்டையில் இருக்கும் வடிவம், பிரம்மா, லிங்கோற்பவர், தக்ஷணாமூர்த்தி என ஒரு லிங்கத்திலேயே இவை அனைத்தையும் வடிவமைத்து அருவத்திருமேனி, உருவத்திருமேனி, அருவுருவத் திருமேனி என எல்லாச் சிற்ப சாஸ்திர முறைமைகளையும் உள்ளடக்கியதாக இவ்வடிவம் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆலயத்தில் இருக்கும் விசாலாட்சி அம்பாள், வேணுகோபாலர், வீரஆஞ்சினேயர், நந்தி போன்ற விக்கிரக அமைப்புக்களும் மிக லாவண்யமான அமைப்புடனே காணப் படுகின்றன. அத்தோடு மிக அரிதாக எங்கும் காணக்கிடைக்காத சத்ருசம்ஹார முருகன் வடிவம் பஞ்சலோகத்தில் இவ்வாலயத் தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

நான்கு வாயில்கள் கொண்ட மூலஸ்தான அமைப்பு, மாரி அம்பாள், பைரவர், ஆஞ்சனேயர் தனிச் சந்நிதானங்களாக எழுந்தருளியிருப்பது போல் சிவசக்தி ஐக்கிய அர்த்த நாரீஸ்வ ரூபமாக வாயிலில் அரசு வேம்பு பின்னிப் பிணைந்த தலவிருக்ஷத் தின் கீழ் பக்த லிங்கமும் அமையப் பெற்ற சிறப்பையும் காணலாம்.

சுவாமி நடராசபிள்ளை, "மணியப்பெடியன்" சாமியார் அம்பலவாணர் (காரைக்கால் சாமியார்) ஆகியோரின் சமாதிக் கோயில்களும், ருத்ர பூமியும் ஆலய வளாகத்தில் அமைந் திருப்பதைக் காணலாம்.

பசு தர்மம் எனக் குறிப்பிடப்படும் மக்கள் சேவையாக கூழ் உணவு சமைத்து வழங்கியது, மணிமந்திர, விஷகடி மருத்துவ சேவை, அன்னதானப்பணி என மக்கள் சேவையையும் மகேசன் சேவையையும் இரு கண்களாகப் போற்றி வரும் ஆலயமாக விளங்குகிறது.

இரு மஹோற்சவங்கள் நடைபெறும் இவ் ஆலயத்தில் திருவிழாக் காலங்களிலும், பிரதி வெள்ளிக்கிழமைகளிலும், பிரதோஷ விரத தினங்களிலும் அன்னதானப்பணி சிறப்பாக நடைபெறுகின்றது. விழாக்காலத்தில் சமயபாடப் பரீட்சை நடாத்தி பரிசில் வழங்கும் நிகழ்வும் வருடா வருடம் இடம் பெறுகின்றது.

காரைக்கால் சாமியாரைத் தொடர்ந்து அவரின் வழிவரும் குடும்பத்தினர் அவ்ஆலயத்தில் சிறந்த முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலனம் செய்து வருகின்றனர். ஊர்மக்கள், வெளிநாடுகளில் வசிக்கும் பக்தப் பெருமக்களின் ஆதரவில் பல விழாக்கள், திருப்பணிகள், தொண்டுகள் என தர்மம் தழைத்தோங்குகின்றது.

இளைஞர் திருக்கூட்டம் இயல்பாகச் செயற்பட்டு சிரமதானப் பணிகள் செய்வதோடு ஆலய விழாக்காலங்களில் சரியைத் தொண்டுகள் புரிதல், நேர்த்திக்காவடி, திருப்பணிச் சேவை எனப் பற்பல செயற்பாடுகளில் ஈடுபடுவது போற்றுதலுக் குரியதாகும்.

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் தான் வாழும் கிராமத்தின் சிறப்பை உலகறிய வைத்த "சமூகத் தொண்டர்" உயர்திரு மூ.சிவலிங்கம் அவர்களைப் பாராட்ட வேண்டும். இவ் இக்கட்டான சூழ்நிலையிலும் தமிழர் தம் வரலாற்றையும், சைவசமய பாரம்பரிய வழக்கங்களையும், சேவைகளையும் உலகறியச் செய்யும் வண்ணம் ஆவணமாக்கும் பெருமுயற்சியான புஸ்தக வெளியீடுகளைச் செய்து வருவது யாவரும் அறிந்ததே. சதாசர்வ காலமும் தன்னால் இயன்ற சமூகப்பணி செய்ய வேண்டும் என்பது அவரது கொள்கை. அவரின் புஸ்தக வெளியீட்டிலே **32**ஆவது புஸ்தகமாக காரைக்கால் சிவனின் வரலாற்றுப் புகழ் பாடும் இப்புஸ்தகம் வெளிவருவது சிறப்பாகும்.

இம்மலருக்கும் இதனை வெளியீடு செய்யும் திருவாளர் மூ.சிவலிங்கம் அவர்களுக்கும் எனது ஆசீர்வாதங்கள்.

அன்பே சிவம்.

**சிவஸ்ரீ.குமார சரவணபவக்குருக்கள்**

***30-07-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**இணுவில் கோண்டாவில் பதியிலுறைந்த விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமான் ஆலய நித்திய பூசகர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐயர் வழங்கிய**

# ஆசிச்செய்தி

சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாம் சிவபெருமான் காரைக்கால் பகுதியில் விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமான் என்னும் திருப்பெயருடன் அருளாட்சி செய்வது அற்புதமாகும். இறைவனைப் போல இவ்வாலயமும் தோன்றிய காலமும் அறிய முடியாத சிறப்புடையது. இங்கு குடி கொண்டிருக்கும் மூலலிங்கப் பெருமான் அற்புதமான தோற்ற மும் பேரருளும் மிக்கவர். இவ்வாலயத்தில் நித்திய பூசகராக 1996இல் என் பணியை ஏற்றேன்.

முதன்முதல் பூசை செய்ய வந்தபோது மூலலிங்கம் அமைந்துள்ள கருவறையை நாடினேன். இறைவனின் அணி கலனான அரவங்களே என்னைத் திகைக்க வைத்து வரவேற்றனர். முதலில் சற்றுத் தயங்கினாலும் இறைவனை வேண்டிப் பிரார்த்தித்தேன். அரவங்கள் அவ்விடம் விட்டு அகன்றன. இறையருளை வியந்தேன். ஆலயத்தின் சகல சந்நிதிகளிலும் உளப்பூர்வமாகப் பூசை செய்தேன். நாகதம்பிரானுக்கு (புற்றுச் சந்நிதியில்) தினமும் மதிய பூசையின் போது கூடுதலான பாலை நிவேதனஞ் செய்து பூசித்தேன். சில நாட்களில் அரவங்கள் யாவும் என்னுடன் சகசமாகப் பழகிப் பூசைக்கு ஒத்துழைத்தன.

நான் கருவறையுட் சென்றதும் மூலலிங்கத்தின் மீதும் புறங்களிலும் இணைந்திருந்தவை யாவற்றையும் கையாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிவிடுவேன். அவை விலகி விடும். இதனை இவ்வாலயத்தின் அற்புதமாகவே அறிகிறேன். வேறெந்தச் சிவாலயத்திலும் காண முடியாத இவ்வற்புதத்தைப் பலர் கண்டு வியந்துள்ளனர்.

இவ்வாலயத்தில் பூசைப்பொறுப்பை ஏற்றபோது எனக்குப் பெருவிழாக்கால ஆடி மாதம் தவிர ஏனைய 11 மாதத்திற்கும் ஆயிரம் ரூபாவே ஆலய அறங்காவலர் தந்தனர். அக்காலத்தில் பொதுமக்கள் வரவு குறைவு. அர்ச்சனையும் குறைவு. ஆலயப் பூசைக்கான தீபஎண்ணெய், கர்ப்பூரம் யாவும் நானே வாங்கிப் பூசையும் செய்தேன். எனது சிறப்பான வேண்டுதலால் ஆலயம் சிறப்படைந்தது. எனது செலவில் ஆஞ்சனேயர் சந்நிதியையும் அமைத்தேன். விசுவநாதப் பெருமானின் சிறப்பான வியாழக்கிழமை மற்றும் பிரதோச காலங்களில் வேறெங்கும் காணாத பக்தர்கள் வந்து தரிசிக் கின்றனர். விழாக்களும் சிறப்புடன் நடைபெறுகின்றன. என் வாழ்க்கையில் என்னைச் சிறப்புடன் உய்வித்த விசுவநாதப் பெருமானின் ஆலயச் சிறப்பு யாவராலும் போற்றப்படுகிறது.

இப்புராதன ஆலய வரலாற்றைப் பலர் வந்து என்னிடம் கேட்டார்கள். இவ்விபரங்களை விரிவாக எழுதி நூலாக வெளியிடும் வண்ணம் பலர் கேட்டதால் நூலாசிரியர் சிவலிங்கம் அவர்கள் எழுத முற்பட்டார். இக்கால நோய்ப் பரவல் காரணமாக நூல் வெளியீடு சற்றுப் பிந்தினாலும் இப்போது வெளிவருவதால் நித்திய பூசகர் என்ற வகையில் இவ்வாசிச்செய்தியை வழங்கினேன். நாடு சிறக்க ஆலய வரலாற்று நூல் சிறக்க எம்பெருமானின் கருணையால் இவ் வெளியீடு சிறப்புற வேண்டுமென விசுவநாதப் பெருமானை வேண்டுகிறேன்.

**மூர்த்தி ஐயா**
**நித்திய பூசகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

திருவருள் நிறைந்த திருவூர் இணுவில். சித்தர்கள், மகான்கள், கல்வியியலாளர்கள், கலைஞர்கள் நிறைந்த பூமி. இத்திருவூரில் பரம்பொருளாகிய சிவபெருமானுக்கு முகலிங்க கோவில் அமைத்து பண்டு தொட்டு வழிபாடு செய்வது அனைவரும் அறிந்ததே. சஞ்சீவி மரங்கள் நிறைந்த தெய்வீகச் சோலை காரைக்கால். மருத்துவ மரங்களின் நிழலில் உடற்பிணி போக்கிய உன்னத வரலாற்றை ஆவணமாக்குவதற்கு மூதறிஞர் உயர்திரு.மூ.சிவலிங்கம் ஐயா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக இந்நூல் வெளிவருகிறது. இந்நூல் தலச்சிறப்பு, சித்த வைத்தியச் சிறப்பு, அற்புதங்கள் அனைத்தும் உள்ளடக்கியதாகப் படைக்கப்பட்டுள்ளது.

பல தவஞானிகள் காரைக்கால் பதியில் தவமிருந்து சமாதியடைந்தமை பெருமைக்குரிய விடயமாகும். பாம்புகளும் பற்றைக்காடும், சுடுகாடும் ஒருங்கே அமைந்த மண்ணில் இத்திருக்கோவில் எழுந்த சிறப்பை நூலாசிரியர் மிக அற்புதமாக எடுத்துரைக்கின்றார். பழைமை வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக்களை நாம் ஆவணப்படுத்தத் தவறின் அதனால் வரும் ஆபத்து எல்லையில்லாதது. காசியில் சுடலைக்கு அருகில் விஸ்வநாதர் வீற்றிருப்பது போல், ஈழத்தில் காரைக்காலில் இத்திருக்கோவில் சுடலை அருகே வீற்றிருந்து அருள் பாலிப்பது அதிசயமே!

இந்த ஆலயம் பற்றிய பல்வேறு தகவல்களை ஆயிரம் பிறை கண்ட மூதறிஞர் ஒருவர் நூல் ஊடாகப் பதிவு செய்துள்ளார். இது சாதாரண முயற்சி அல்ல. பெரும் முயற்சி! இப்புண்ணிய கைங்கரியத்தை எல்லோராலும் செய்துவிட முடியாது. இறையருள் துணை இல்லாதுவிட்டால், இத் தகைய கைங்கரியங்களை நிறைவேற்ற முடியாது. என் வாழ்விலும் காரைக்கால் சிவன் கோவிலை மறக்க முடியாது. எனது ஆரம்பகால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்த கோவில். அவ்விடயம் தொடர்பாகவும் நூலாசிரியர் எடுத் துரைத்துள்ளார்.

இந்நூல் ஈழத்து சைவ உலகுக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷம். அனைவரும் படித்து பாதுகாத்து இந்நூலை அடுத்த தலைமுறையினரிடம் கையளிப்போமாக! நூலாசிரி யரின் முயற்சிக்கு என் நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காரைக்கால் சிவன் தந்த கலையூற்று

நாடும் நகரும் நல்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய உள்ளத்தைக் கோயிலாக் கொள்வனே.

என்ற திருமூலர் திருமந்திரத்தைப் படித்த காலம் முதல் எமது சைவசமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் எழுந்தருளி இருக்கின்ற சிவன்கோயில் இருக்கும் இடமெல்லாம் தேடிப் போய் வழிபடுவது என் வழக்கம். இந்த வகையில் நான் சிவபெருமானைப் பாடிப் பணிந்து வழிபடக் கிடைத்த அற்புத சிவாலயம் தான் இணுவில் காரைக்கால் சிவன் கோயில். எங்கள் நாட்டில் நாம் வேறெங்கும் காணக் கிடைக்காத பஞ்சமுக இலிங்கமாகச் சிவன் இங்கு எழுந்தருளியிருப்பது ஒரு அற்புதம் ஆகும்.

கருவறையில் இருக்கும் பஞ்சமுக லிங்கமான சிவ பெருமானைத் தொழும் பேறும் ஆலய முதல்வர் அம்பலவாணர் சுவாமியாருடன் பழகும் பேறும் **1965** முதல் எனக்குக் கிடைத்தது. சிவனருளால் **1967**இல் இணுவில் கிழக்குச் சின்னையா சிவகாமசுந்தரியைத் திருமணம் செய்து வாழும் வாழ்க்கையும் கிடைத்தது. அதனால் காரைக்கால் சிவன் எனக்குக் குலதெய்வம் ஆனார்.

அம்பலவாணர் சுவாமியாரைச் சந்தித்து உரையாடும் போதெல்லாம் பெரிய சந்நியாசியாரைப் பற்றியும், காரைக்கால் வரலாற்றைப் பற்றியும், அங்கு எழுந்தருளி இருக்கும் அம்பாளின் அற்புதச் செயல்கள் பற்றியும் சொல்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1969**இல் ஒரு நாள் என்னைக் கோயிலுள் அழைத்துச் சென்று காளாஞ்சி தந்து காரைக்கால் சிவனுக்குத் திருவூஞ்சல் பாடும்படி அருளாணை இட்டார். அதற்கு முதல் நான் திருவூஞ்சல் பாடியதில்லை. அதனால் சற்றுத் தயக்கமாக இருந்தது. நீர் பாடுவீர், தயங்கவேண்டியதில்லை. சிவன் அருள் பாலிப்பான் என்றார்.

அவர் வாக்கைக் குருவருளாகக் கொண்டு திருவூஞ்சல் பாடினேன். எனக்கே அதிசயமாக இருந்தது. பாடல் எங்கோ இருந்து வருவது போல் வந்தது.

அந்த ஆண்டு தீர்த்த நாளில் எனது நண்பராயிருந்த இணுவில் த.சிதம்பரநாதன் அவர்கள் பாடினார். தகுந்த பலர் பாராட்டினர். அன்றே அது இலங்கை வானொலியிலும் சங்கீதபூஷணம் பத்மலிங்கம் அவர்களால் பாடப்பட்டது. கோயிலில் இருந்த பலரும் கேட்கக்கூடியதாக அதனை அஞ்சல் செய்தனர்.

சுவாமியார் தான் சொன்ன செய்திகளை வைத்துக் காரைக்கால் வரலாற்றையும் எழுதச் சொன்னார். எனது மைத்துனர் திரு.தி.சி.சண்முகலிங்கம் அவர்கள் தான் நடத்திய இணுவில் இசை நடன கிராமிய கலைக் கல்லூரியின் வெளி யீடாக காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும் எனும் நூலாகப் பதிப்பித்தார். சுவாமியார் கோயிலில் வைத்து வெளியிட்டார்.

**1965** முதல் ஆண்டு தோறும் பல ஆண்டு காலமாக மகோற்சவ காலத்தில் ஆன்மிக உரை நிகழ்த்தும் பேறும் கிடைத்தது. இதற்கு எனது நண்பர்கள் பலரையும் அறிமுகம் செய்து வைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளராயிருந்த திருமதி.சாந்தி நாவுக்கரசன் அவர்கள் அப்போது பல்கலைக்கழக மாணவியாக இருந்தவர். பல முறை வந்து உரையாற்றியுள்ளார்.

2015இல் கலாபூஷண விருது பெற்ற இணுவில் திரு வூரைச் சேர்ந்த பெரியார்கள் மூ.சிவலிங்கம், கா.வைத்தீஸ்வரன், தம்பு சிவசுப்பிரமணியம் ஆகியோருக்குக் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவுக்குப் பிரதம விருந்தினராக வந்து பேசும்போது, தான் இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளராக உயர் பதவி பெற்றமைக்குக் காரைக்கால் சிவன் அருளும் சுவாமியாரின் ஆசியும் தான் காரணம் என்று நன்றியுடன் குறிப்பிட்டார்.

1973இல் அப்போது ஐந்து வயதுச் சிறுவனாக இருந்த என் மூத்த மகன் செல்லத்துரை நாவரசன் காரைக்கால் திரு விழாவில் தன் நண்பர்களுடன் சேர்ந்து "பூம்பாவை" எனும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி செய்து சுவாமியாரின் ஆசியைப் பெற்றார். அவர் பின்னாளில் லண்டன் ஐ.பீ.சீ றேடியோவில் ஐரோப்பிய நாடுகளுக்குரிய நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்து புகழ் பெற்றமைக்குக் காரைக்கால் சிவபெருமானின் அருளால் சுவாமியார் ஆசி தந்து தன் கவிதைக் கலையூற்றைத் திறந்து விட்டமையே காரணம் என்று அடிக்கடி சொல்வார்.

புலம்பெயர் நாடுகளில் இருக்கும் கவிஞர்கள் எல்லாரையும் வானலையில் ஒன்று சேர்த்து "பிரசவகளம்" எனும் கவிதைக் களத்தை நடாத்தினார். இக்கவிதையில் ஐந்நூறாவது நிறைவு விழாவில் காரைக்கால் தந்த கலை யூற்றுத் தன்னை உலகளாவிய வகையில் உயர்த்தியது என நன்றியுடன் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண ஆசிரியராக இருந்த நான் பல்துறைகளில் உயர்வு கண்டதும் இருபத்தைந்து நூல்களை எழுதி வெளி யிட்டதும், பல பரிசுகளைப் பெற்றதும் என் உளத்தில் குடியிருக்கும் காரைக்கால் சிவன் அருளாலும் சுவாமியாரின் ஆசியாலுமேயாகும்.

இப்போது எண்பத்தொரு வயதிலும் இளவாலையில் இருந்து இணுவிலுக்கு வந்து இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையில் சைவ சித்தாந்தம் கற்பிப்பதும், இணுவில் மஞ்சத்தடி சுகவாழ்க்கைப் பேரவையில் திருமந்திரம் படிப்பிப்பதும் காரைக்கால் பெருமானின் கிருபையேயாகும்.

நம்பினார் கெடுவதில்லை
நான்கு மறைத்தீர்ப்பு

என்பது உண்மையிலும் உண்மையே.

**கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

## இணுவிலில் ஆத்மீகச் சூழலை உருவாக்கிய இருபெரும் சித்தர்களின் கதைகள்

பெரியசந்நியாசியார் சுப்பிரமணியம் (1860 - 1917) மணியத்தார் அம்பலவாண சுவாமிகள் (1920 - 1979) ஆகிய இரு பெரும் ஆத்மீகச் செயற்பாட்டாளர்களால் எவ்வாறு ஓர் ஊரும் ஊர் மக்களும் பக்குவப்படுத்தப்பட்டு, பண்பாட்டுருவாக்கத்திற்கு ஆட்பட்டு ஒரு சமூகமாகக் கட்டுருவாக்கம் செய்யப்படு கிறார்கள் என்பதை எமது ஆத்மீக எழுத்தாளரும் முன்னாள் கிராம சேவையாளருமாகிய மூ.சிவலிங்கம் அவர்கள் இந் நூலில் பதிவு செய்கிறார்.

மானுடவியல் (*Anthropology*) ஆய்வில் ஈடுபடும் ஆய்வாளர்கள் தமது இனவரைவியல் கோட்பாட்டின் (*ethnographical*) அடிப்படையில் ஒரு சமூகத்தின் பண்பாட்டுக் கோலங்களை வகுத்து வரையறை செய்து எழுத்தில் வடிப்பார்கள். எமது ஆத்மீக சமூக பண்பாட்டு எழுத்தாளராக மிளிர்ந்துள்ள திரு.மூ.சிவலிங்கம் அவர்கள் ஓர் உள்வீட்டுக் காரனாக (*an insider's view*) இருந்துகொண்டு தான் காலாதி-காலமாகக் கண்டும் கேட்டும், இரசித்தும், அனுபவித்தும் வாழ்ந்துபட்ட அனுபவங்களை ஒரு வரலாற்றியலாளரின் பொறுப்போடும், ஒரு சமூகவியலாளராகத் தமது ஊரின் மீது கொண்ட மதிப்போடும், ஊரில் ஆத்மீக சேவையால் சமூகத் தைக் கட்டமைத்த இரு பெரும் சித்தர்களின் மீது கொண்ட பக்தியினாலும், இந்த சிறப்பு மிக்க நூலை ஒரு செழுமையான நடையில் வடித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்நூற்றாண்டு கால வரலாற்றையுடைய இரு பெரும் கோயில்களான இணுவில் - கோண்டாவில் காரைக்கால் சிவன்கோயில் மற்றும் இணுவில் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றின் ஆத்மீகச் சூழலைக் கட்டியெழுப்புவதில் ஆற்றியிருக்கும் பங்களிப்புக்களை வரலாற்று ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் பதிவு செய்திருக்கும் பாங்கு எதிர்கால ஆய்வாளருக்கு ஒரு பதிவுப் பொக்கிஷம் எனவே கூறலாம் *(stores of archives)*

**இணை-வில் இணுவில் ஆகிய கதை**

இணை-வில் (ஒரு சோடிக்குளங்கள் இணைந்திருந்த காட்சி) என உருவான இணுவில் ஊரின் திருநாமம் இணையில்லாத பெருமைகளைக் கொண்டதாகவும், ஒப்பற்ற பெருமைகளைக் கொண்ட பதியாகவும் வியாக்கியானம் பெறுவதற்கு ஊரின் இயற்கை அமைப்பும் கோயில்கள் எழுந்தருளி அமைந்த பாங்கும், அவ்வூரில் வாழ்ந்த பெருமக்கள் போற்றிப் பாடிய வாழ்வுப் பண்பாடும் வழிசமைத்தன என்றால் மிகையாகாது.

அதாவது, இணுவில் கந்தசுவாமி கோயில் இணுவிலின் மேற்கெல்லையிலே கிழக்கு முகமாகப் பார்த்தபடி அமைந் திருக்க, ஊரின் கிழக்கெல்லையிலே மேற்கு முகமாகப் பார்த்த படி காரைக்கால் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமான் வீற்றிருக்கும் பாங்கு எத்துணை அழகு நிறைந்தது. மேலும் கிழக்கேயிருந்தும் வடக்கேயிருந்தும் மழை காலத்தில் பெய்யும் நீரின் வெள்ள ஓட்டம் மேற்கு முகமாகவும் தெற்கு முகமாகவும் ஓடும் வண்ணம் அமைந்திருக்கும் புவியியல் அமைப்பு இரண்டு குளங்களை இணுவில் கந்தசுவாமி கோயிலின் வடக்குத் திசையிலும் தென்கிழக்குத் திசையிலும் கொண்டிருக்கும் வண்ணம் அமைந்திருந்தது. இதனை உணர்ந்தே ஊரின் பெயர் இணை-வில் (இரு குளங்கள் இணைந்ததான) என வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைவில் - இணுவில் என மருவியிருக்க வேண்டும். ஏனெனில் இந்த வெள்ளநீர் ஓட்டம் அடுத்தடுத்த ஊர்களின் பெயர்களை உடுவில், கோண்டாவில், நந்தாவில், கொக்குவில் எனக் கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது. (வில் என்பது குளம்) தாவடியில் நீர் வடிந்து (தாழ்வடி) ஆனைக்கோட்டைக் கடலில் சங்கமிக்கும் தரை அமைப்புக்கும் ஊர்ப்பெயர் களுக்கும் இருக்கும் கருத்தொற்றுமைகளை நாம் கண்டு கொள்ள வேண்டும். (மானிப்பாய், சண்டிலிப்பாய் என்பன நீர் பாய்ந்து செல்வது எனும் கருத்தோடு பொருந்துகிறது.)

ஆக, இணுவில் கிராமம் மற்றைய பல கோயில்களின் இருப்புக்களோடும் அருளாட்சியோடும் காரைக்கால் சிவன் கோயில் மற்றும் இணுவில் கந்தசுவாமி கோயில் ஆகிய வற்றின் தோற்றம், வளர்ச்சி, வழிபாடு என்பவற்றோடு இரு பெரும் சித்தர்களின் தெய்வீகப் பணிகளோடும் மக்களின் வாழ்வை வளம்படுத்திச் சிறப்புறுகிறது என்பது அறிஞர் அறிந்த ஒன்றே.

ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் திரு.மூ.சிவலிங்கம் அவர்கள் இணுவில் காரைக்கால் சிவன் கோயிலின் சிறப்பை தமிழ்நாட்டின் அருகே அமைந்துள்ள பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள காரைக்கால் ஊரின் சிறப்புகளுடன் ஒப்பிட்டு, மூலஸ்தான விக்கிரகத்தின் சிறப்பையும் ஒரு கட்டிடக் கலைஞர் போல விபரிக்கின்றார். பஞ்சதள லிங்க அமைப்புப் பற்றி ஒரு கட்டிடக் கலைஞர் தரும் விபரங்கள் போல நீள அகல உயரம் மற்றும் விபரங்களைத் துல்லியமாகத் தருகிறார். ஆலய வரலாற்றை கருணாகரத் தொண்டமானின் காலத்துக்கு முற்பட்டதென வரையறுக்கும் ஆசிரியர் பெரிய சந்நியாசியாரின் காலத்திலிருந்து கோயில் மீண்டு எழுந்த வரலாற்றையும், அவரின் சித்தர் கோலத்தையும் அருட் பணி களையும் விபரித்து எழுதுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய சந்நியாசியாரின் கதை

பெரிய சந்நியாசியாராக மாறிய மந்தை மேய்க்கும் சிறுவன் மாரியம்மனின் அருளால் ஊரையும் ஊர் மக்களையும் இயற்கைச் சூழலையும் தெய்வீகத் திருவருள் கூடச் செய்த வரலாற்றையும் பக்தி பூர்வமாகப் பதிவு செய்துள்ளமை வாசிப்பவரையும் பிணித்துக்கொள்கிறது. சந்நியாசியார் நாட்டிய 1008 நன்மரங்கள், சிறந்த மூலிகைகள், தோண்டப் பட்ட நீர்நிலைகள், சிவாலயத்தை மீளக் கட்டியெழுப்பி பூசைகள் பொங்கல் மற்றும் திருவிழாக்கள், மங்கல ஓசையுடன் கூடிய நாட்டார் கலை ஆட்டங்கள் பாட்டுக்கள் என்பன ஒரு பரவசமான சமூக, சமய சூழலைக் கட்டியமைக்க வழிசமைத்தது எனலாம்.

அத்தோடு மருத்துவப் பணிகளையும் ஆற்றி மக்களுக்கு உடற்பிணி தீர்த்து உளப்பிணி தீர்க்கும் அருட் பணியோடு இணுவில் மேற்கெல்லையில் அமைந்த கந்தசுவாமி கோயில் வளர்ச்சியிலும் பங்கு கொண்டார். தமது கலைப் பணியின் உச்சமாக திருமஞ்சப் பணியைத் தொடக்கி வீடுகள் தோறும் மரங்களைப் பெற்று திருமஞ்ச உருவாக் கத்தை இணுவில் மஞ்சத்தடி எனப் பின்னாளில் அழைக்கப் பட்ட மத்திய பகுதியில் ஏற்படுத்தினார். 1895 தைப்பூசத்தில் வெள்ளோட்டமும் இறைபணியும் வரலாற்றுப் பதிவுகள் ஆகின.

திருமஞ்சப்பணி போல கலைத்தாகம் தீர வேண்டி ஆட்டக்காவடிகள், கரகாட்டம் மற்றும் நாட்டுக்கூத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பிய பாங்கையும் அறிய முடிகிறது. ஏழு தேர்களை கந்தசுவாமி கோவிலில் இருந்து காரைக்கால் வரை இழுப்பதற்கான பாதைகளையும் உருவாக்கி, இடையில் தடையாக இருந்த புகையிரதப்பாதையின் தந்திக் கம்பிகளை யும் அரச அதிகாரிகளைக் கொண்டே இறக்கி தேர்களை ஓடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கந்தனின் தீர்த்தத் திருவிழாவைக் காரைக்காலில் ஆனி உத்தரத்தன்று (1895இல்) நடாத்தி இறையருளை மக்களுக்கு உணர்த்தினார்.

இது போல சூரன் போரையும் காரைக்காலில் நடாத்தி சித்தர்களின் கோட்டமாக மாற்றியமைத்த சூழல் அவர் காலத்துக்குப் பின் அம்பலவாணர் சுவாமிகளின் காலத்தில் மீளவும் புத்தெழுச்சி பெற்ற கதையை நூலின் மீதிப் பகுதி உரைக்கிறது.

**அம்பலவாணர் (மணியத்தார்) கதை**

1920இல் அவதாரம் செய்த அம்பலவாணர் சுவாமிகள் பெரிய சந்நியாசியார் போலவே ஆநிரைகளை மேய்த்துக் கொண்டிருந்த நிலையில் தாயாரின் அனுமதியோடு மருத்துவர் நடராசபிள்ளையிடம் சித்தமருத்துவ அறிவைப் பெற்றுக்கொண்டார். சைவ சமயக் கல்வியையும் ஆசாரத்தையும், ஒரு சேரக் கற்றுக்கொண்ட அம்பலவாணர் சுவாமிகள் 1940ல் காரைக்கால் சிவாலயத்தின் திருப்பணிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அக்கோயில் சுற்றாடலிலே தங்கி அருட் பணியும் மருத்துவப் பணியும் மேற்கொண்ட வரலாற்றை மிகவும் இனிமையான நடையில் ஆசிரியர் விரித்துச் செல்கிறார்.

மணியத்தார் எனச் சிறப்புப்பெயர் கொண்டு அழைக்கப்பட்ட காரைக்காலின் அடுத்த சித்தர் யாழ் மாவட்டத்திலிருந்து வருகை தந்த அத்தனை நோயாளிகளுக்கும் தங்க இடம் கொடுத்து மருத்துவப்பணி ஆற்றியமை வரலாறு. கோயில் திருப்பணிகளும் திருவிழாக்களும் மீளவும் சிறப்புப் பெறவும், காவடி ஆட்டம், கரகாட்டம், நொண்டி நடனம், கம்படி, சிலம்படி, தீப்பந்தம் சுழற்றல் ஆகிய கலைகள் கோயில் சுற்றாடலில் புது எழுச்சி ஊட்டவும் வழிசமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், சமகால பேச்சுக்களையும் சொற்பொழிவு களையும் நாவலர் பெருமானின் பிரசங்கப் பாணியிலே தொடரவும் அருள்கூட்டினார். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் மீள் எழுச்சி பெற்ற பிரசங்கக் கலையை செஞ் சொற்செல்வர் ஆறு.திருமுருகன் காரைக்காலில் தொடர்ந்த வரலாற்றையும், அவர்களுடன் ஊர்ப் பெரியார்களும், இளையோர்களும் வில்லுப்பாட்டு, பேச்சுகள், தேவாரப் பாராயணம் எனத் தொடரவும், இளவாலை சைவப்புலவர் செல்லத்துரை, மகன் நாவரசன், இந்துக் கலாசாரப் பணிப் பாளராகத் திகழ்ந்த திருமதி.சாந்தி நாவுக்கரசன் ஆகியோரும் காரைக்கால் சிவன் சந்நிதியில் தங்கள் தமிழ்ப் பேச்சுக் கலையை அர்ப்பணம் செய்து வளர்ந்த வரலாற்றையும் இந் நூலிலே நாம் காணலாம். நிறைவாக இரு பெரும் சித்தர் களையும் ஒரு சேரப் பதிவு செய்து, ஆலயத்தில் தொடர்ந்து சிவப்பணியும் பூசைகளும் செய்கின்ற அந்தண சிவாச்சாரியார் களின் பணிகளையும் பதிவுக்குக் கொண்டு வருகிறார் ஆசிரியர். ஆக, இணுவிலின் இரு பெருஞ் சித்தர்களின் வரலாற்றைக் காரைக்கால் சிவன் கோயிலின் வரலாற்றுப்பதிவுகளின் பின்னணியில் எழுதிச் செல்லும் நூலாசிரியரின் பாங்கு போற்றுதற்குரியது.

ஏற்கனவே 30 நூல்களுடன் தனது சமய சமூகப் பணியைத் தொடர்ந்த ஆசிரியர் இறையருளால் ஆரோக்கிய வாழ்வு பெற்றுத் தமது நூலுருவாக்கப் பணியைத் தொடர எல்லாம் வல்ல விசுவநாதப் பெருமானை வேண்டி வாழ்த்து வோமாக.

**கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன்**
**சிரேஷ்ர விரிவுரையாளர்,**
**ஆங்கிலமொழிக் கற்பித்தல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**30-04-2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

இணுவில், கோண்டாவில், உரும்பிராய் ஆகிய மூன்று ஊர்களின் எல்லையில் அமைந்துள்ளது காரைக்கால் என்னும் புனித சிற்றூராகும். இக்காரைக்கால் தென்னிந்திய மாவட்டமாகிய காரைக்கால் என்னும் இடத்துடன் தொடர்புடைய தாகப் பல சான்றுகளும் உண்டு.

இக்காரைக்காலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக் காலத்தில் யாரால், எப்போது நிறுவப்பட்டதெனக் கூற முடியாத புராதன மூலலிங்க அமைப்புடன் அமைந்த சிவாலயம் அருள் பாலிக்கின்றது. இந்த மூலலிங்கம் வேறெங்கும் காண முடியாத உயரமும் பருமனும் கொண்டது. மேலும் நாற்றிசையும் இறைவனின் நான்கு உருவ அமைப்புகள் காண்பது அற்புதமானது.

இவ்வாலயம் இச்சூழலிலமைந்து எம்மக்களாற் போற்றப்படும் ஆதிகாலத்துத் திருக்கோயிலாகும். இது அந்நியராட்சியில் சிதைவடைந்தது. 1860இல் அவதரித்த சுப்பிரமணியம் என்னும் 15 வயதுச் சிறுவன் மாடு மேய்த்த போது இவ்வாலய மாரியம்மனாற் தடுத்தாட்கொள்ளப் பட்டுச் சித்தரானார். இவர் பெரிய சந்நியாசியார் என்னும் பெயரில் எம்மவரால் போற்றப்பட்டார். இவர் இச்சிவாலயத்தைப் புனர்நிர்மாணஞ் செய்து பல அற்புதங்களையுஞ் செய்தார். எம் முன்னோரின் தேவை கருதி திருநீறிட்டும் சித்த மருத்துவம் மூலமும் உடல் உளப் பிணியகற்றினார். இவரே உலகப் பெருமஞ்சத்தை அமைத்தார். மஞ்சம் உருவாக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட இடம் மஞ்சத்தடி எனப் பெயர் பெற்றுவிட்டது. **1917** சித்திரைத் திருவோணத்தன்று தமது பிறந்த இடமான மஞ்சத்தடியில் சமாதியடைந்தார். இவரின் பிற்காலம் யாவரும் நாடாததால் காரைக்கால் சிவாலயம் பற்றைக் காடுகள் மேவியதால் **20** வருட காலம் இருள் சூழ்ந்தது.

இவ்வாலயத்து இறைவனின் கவர்ச்சியால் நாடிய சித்தர்கள், அருளாளர்கள் தமது பெருமுயற்சியால் பூசை வழிபாடுகள் செய்தனர். அம்பலவாணர் என்னும் **15** வயதுச் சிறுவன் **1935**இல் கொக்குவில் சித்தமருத்துவர் நடராச பிள்ளையால் தடுத்தாட்கொள்ளப்பட்டு ஐந்து வருடகாலம் சித்த மருத்துவம் மற்றும் சகல பயிற்சிகளும் வழங்கப் பட்டதன் பின் **1940**இல் காரைக்கால் சிவாலயப் பொறுப்பை ஏற்க வைத்தார். அம்பலவாணரும் பெரிய சந்நியாசியாரைத் தமது சித்த ஞானத்தால் உணர்ந்து சிவாலயத்தை புனர் நிர்மாணஞ் செய்தார். தம்மை நாடும் மக்களின் உடல் உளப் பிணியகற்றினார். இவரும் பெரிய சந்நியாசியாரைப் போல் மக்கள் நலம் நாடி ஆலயம் சிறக்க வழிகாட்டி மிகச் சிறப்பாகப் பிரகாசிக்க வைத்தார். இவ்விரு சித்தர்களாலும் சித்த மருத்துவமும் ஏனைய அறப்பணிகளும் நிலை கொண்டதால் இப்பதி யாவராலும் போற்றப்பட்டது. இருவரும் இம் மண்ணின் வாசனையால் தெய்வீகக்கலை ஆர்வம் மிக்கவர் களாகவே செயற்பட்டனர். இக்காலத்தில் ஆலயம் வளர்ச்சி கண்டது. விழாக்கள் சிறந்தன.

இப்புராதன ஆலயத்தின் வரலாற்றுப் பதிவை எவரும் இதுவரை எழுதவில்லை. இன்றைய நோக்கில் பல பெரியார் கள் இவ்வாலய வரலாற்றை எழுதுமாறு கேட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சந்நியாசியார் சமாதியடைந்த 104ஆம் ஆண்டு நிறைவில் "காரைக்கால் வரலாறும் பெரிய சந்நியாசியாரும்" என்னும் இந்த நூல் உருவானது.

அம்பலவாணர் சுவாமிகளின் சமயக் கலை ஆர்வத்தை இவரின் தொண்டர்கள் நிறைவு செய்தனர். இதன் பேறாக சைவப்புலவர் சு.செல்லத்துரை, சாந்தி நாவுக்கரசன், செ.நாவரசன், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் போன்ற பலர் இவ்வாலயத்திலிருந்தே தாம் பிரகாசிக்க இறை யருள் கிட்டியதாக இன்றுவரை கூறுகின்றனர்.

இவ்வாலய வரலாற்று நூலை வெளியிடுவதில் எம் பெருமானின் திருவருள் கைகூடியது. பெரிய சந்நியாசியார், அம்பலவாணர் சுவாமிகளின் குருவருளும் வழிகாட்டியது. இந்நூலை அலங்கரிக்கவென ஆசியுரை, வாழ்த்துரை தந்த பெரியார்களுக்கும் இந்த நூலைக் குறுகிய காலத்தில் வடிவமைத்துத் தந்த இவ்வூர் சுடர்நிலவு பதிப்பக உரிமை யாளர் பாலசுப்பிரமணியம் ராஜேஷ்கண்ணா யாவருக்கும் நல்லருள் புரிய வேண்டி எம்பெருமானைப் பிரார்த்திக் கின்றேன்.

இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் அறுபதாம் ஆண்டின் சிறப்பில் எனது 88ஆம் வயதில் உருவான 32ஆவது நூலாக அமைந்தமை எமதூர் அம்மை அப்பன் ஆலயங்களின் கருணைமிகு அருட்பேறாகும்.

"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி"

**இணுவையூர் கலாபூஷணம் மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஆதிமுதல் 1875 வரை | 1 |
| | 1.1 காரைக்கால் அமைவிடம் | 1 |
| | 1.2 தென்னிந்தியாவிலுள்ள காரைக்கால் | 2 |
| | 1.3 காரைக்கால் சிவாலயத்தின் அன்றைய அமைப்பு | 3 |
| | 1.4 காரைக்காலில் குடிகொண்ட இலிங்கப் பெருமானின் வடிவமைப்பு | 4 |
| | 1.5 கருணாகரத்தொண்டைமான் | 8 |
| | 1.6 காரைக்கால் விசுவநாதர் ஆலயமும் இடுகாடும் | 10 |
| 2. | பெரிய சந்நியாசியாரின் அவதாரமும் பணிகளும் | 13 |
| | 2.1 மாரியம்மனால் ஆட்கொள்ளப்படல் | 15 |
| | 2.2 பெரிய சந்நியாசியாரின் அருட்பணிகள் | 18 |
| | 2.3 காரைக்காலில் பெரிய சந்நியாசியாரின் சித்தமருத்துவப் பணிகள் | 22 |
| | 2.4 சிவாலயத்தின் வளர்ச்சியும் பூசைகள் விழாக்களின் சிறப்பும் | 24 |
| | 2.5 இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கான திருமஞ்சப்பணியின் ஆரம்பம் | 26 |
| | 2.6 பெரிய சந்நியாசியாரின் இதர அருட்பணிகள் | 29 |
| 3.0 | தேரோடும் வீதிக்குக் குறுக்கேயுள்ள தடை நீக்கம் | 32 |
| 4.0 | இணுவில் கந்தசுவாமி கோயிலிலிருந்து காரைக்காலுக்கு ஏழு தேர்ப்பவனி | 33 |
| | 4.1 காரைக்கால் சூழலில் நடைபெற்ற கந்தசுவாமி கோயில் சூரன்போர் | 35 |
| 5.0 | பெரிய சந்நியாசியாரின் இறுதிக்காலம் | 36 |
| 6.0 | பெரிய சந்நியாசியாரின் பிற்பட்ட காலம் | 37 |
| | 6.1 இச்சமகாலத்தில் காரைக்காலின் நிலைமை | 38 |
| 7.0 | இடைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றமும் பூசைகளும் | 41 |
| 8.0 | அம்பலவாணர் சுவாமிகளின் அறிமுகம் | 44 |
| | 8.1 அம்பலவாணர் சுவாமிகளின் அவதாரம் | 44 |
| | 8.2 சுவாமிகளின் அறப்பணிகள் | 47 |
| | 8.3 சுவாமிகளின், உடல் உளப் பிணியகற்றலும் சிகிச்சை முறைகளும் | 48 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.0 சுவாமிகளின் ஆரம்பகால ஆலயப்பணி 63

10.0 சுவாமிகளின் வாழ்வாதாரமும் பணிகளும் 64

11.0 சுவாமிகளின் அருட்பணியால் வளர்ந்த
ஆலயத் திருப்பணி 69

11.1 நாகதம்பிரான் 71

12.0 காரைக்கால் சிவாலயத்தின் பூசைகள் விழாக்கள் 73

12.1 விழாக்கள் 75

12.2 விழாக்காலத்தில் சிறப்பித்த அரிய பக்தி நிகழ்ச்சிகள் 78

13.0 பெருவிழாக்களுக்கான ஏற்பாடுகளும் பெருவிழாக்களும் 78

13.1 விசுவநாதப் பெருமானின் பெருவிழாக்கள் 80

14.0 காரைக்கால் அம்பலவாணர் சுவாமிகளின்
காலத்துப் பெருவிழாச் சிறப்புகள் 83

15.0 சுவாமிகளின் காலத்துப் பெருவிழாவில் சமய நிகழ்வுகள் 87

15.1 சமய நிகழ்வுகளைச் சிறப்பித்த பெரியார்கள் வரிசையில்
சைவப்புலவர் சு.செல்லத்துரை 89

15.2 திருமதி.சாந்தி திருநாவுக்கரசன் 91

15.3 செல்வன்.செல்லத்துரை நாவரசன் 92

15.4 சுவாமிகளின் பிற்கால நிகழ்வு
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் 95

16.0 அம்பலவாணர் சுவாமிகளின்
இணுவில் கந்தசுவாமி கோயிற்பணி 99

17.0 சுவாமிகளின் இறுதிக்காலம் 103

18.0 பெரியசந்நியாசியாரும் அம்பலவாணர் சுவாமிகளும்
ஒரே நோக்கில்... 105

19.0 அம்பலவாணர் சுவாமிகளின் காலத்திலிருந்து பூசைகள்
விழாக்களை அலங்கரித்த பூசகர்கள், சிவாச்சாரியார்கள் 111

20.0 காரைக்கால் சிவாலயத்தின் தொண்டர்கள் 115

20.1 அனுமன் கல்லும் தொண்டரின் விளக்கேற்றலும் 117

21.0 நாதர்முடி மேலிருக்கும் நல்லபாம்பு 119

22.0 நிறைவாக... 123

23.0 திருவூஞ்சல் பாடல் 129

உசாத்துணைகள் 135




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவாலய வரலாறும் பெரிய சந்நியாசியாரும்

## 1.0 ஆதிமுதல் 1875 வரை

பார் போற்றும் பல சீரும் சிறப்புகளும் மிகுந்த இணையிலி என்னும் பெயர் கொண்ட இணுவில் திருவூரிலமைந்த 21 கோயில்களில் காரைக்கால் (ஊரெல்லையிலமைந்த) சிவாலயம் தொன்மை யானது. இவ்வாலயம் யாரால், எப்போது அமைக்கப்பட்டதென் பதை ஆய்வாளர்களாலும் கூற முடியவில்லை. இவை யாவும் இறைவனின் திருவிளையாடலேயாகும்.

## 1.1 காரைக்கால் அமைவிடம்

யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை செல்லும் நெடுஞ்சாலையின் நாலுகல் தொலைவில் கோயில் வாசல் என்னும் இணுவில் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி அரைக்கல் தூரம் சென்றதும் வடக்கில் தென்படும் சோலைவனத்தில் காரைக்கால் சிவாலயம் அமைந்துள்ளது. யாழ் மாவட்டத்திலுள்ள வலி தெற்கு பிரதேசத்தில் இணுவில் கிழக்கின் பகுதியும் நல்லூர் பிரதேசத்தில் கோண்டாவில் வடமேற்கின் பகுதியும், கோப்பாய் பிரதேசத்தில் உரும்பிராய் தென்மேற்கின் பகுதியுமமைந்த முக்கூடல் காரைக்கால் என்னும் சிறு குறிச்சியாக அமைந்துள்ளது.

இப்புனித பூமியில் குடிகொண்டுள்ள விசாலாட்சி அம்பாள் உடனுறையும் விசுவநாதப் பெருமான் மேற்கு நோக்கியவாறு அருள் பாலிக்கிறார். இவ்வாலயத்தின் தென்கீழ் திசையினண் மையில் இடுகாடும் அமைந்துள்ளது. இந்த இடுகாடும் சிவாலயமும் தொன்மைக் காலத்தை உணர வைக்கிறது. காரைக்கால் பகுதியில் அமைந்ததால் காரைக்கால் சிவாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் காரைக்கால் இடுகாடு (தற்போது பூதவுடல்கள் தகனஞ் செய்யப்படுவதால் காரைக்கால் மயானம்) எனவும் வழங்கப் படுகின்றது. இப்பதி காரைக்கால் என அழைக்கப்படுவதை இணங்க வைக்கும் நோக்கில் தென்னிந்தியாவிலமைந்த காரைக்கால் என்னும் பெயரின் தொடர்பை அறிவோம். இந்தியா வில் காரைக்கால் மூன்று மாநிலங்களின் தொடர்புகள் அமைந்தது போல் இவ்விடத்திலும் மூன்று பிரதேசங்களிலமைந்த கிராமங் களின் முக்கூடல் காரைக்கால் எனப்படுகின்றது. அங்கு இடுகாடு அமைந்தது போல் இங்கும் இடுகாடு அமைந்தமை ஒப்பு நோக்க முடிகிறது.

## 1.2 தென்னிந்தியாவிலுள்ள காரைக்கால்

காரைக்கால் இந்தியாவில் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள காரைக்கால் மாவட்டத்தின் தலைநகராகும். வங்கக் கடலோரத்திலமைந்த இத்துறைமுக நகர் தொன்மையானது. ஆந்திர மாநிலத்தின் காக்கி நாடாவுக்கு அருகாமையிலுள்ள ஏனாம் நகரும், தமிழகத்தின் கடலூரின் அருகாமையிலுள்ள புதுச்சேரி நகரும் கேரள மாநிலத்தின் கோழிக்கோட்டுக்கு அருகேயுள்ள மாஹே நகரும் இந்த மாநிலத்தின் ஆட்சிப்பகுதியின் பிராந்தியங்களாகும். மேற்கூறிய மூன்று மாநிலங்களுடனும் தொடர்புடைய காரைக்காலில் அன்று பல சைவ ஆலயங்களும் அருள் பாலித்தன. இதன் தொடர்பால் காரைக்கால் அம்மையார் பிரசித்தி பெற்றார். இங்கு பல்லின மத மக்கள் வாழ்ந்தாலும் இன, மத பேதமின்றி வாழ்கின்றனர். இக்காரைக்கால் நகரில் சிவ வழிபாடும் சமய பக்தியும் மேலோங்கியுள்ளன. காரைக்காலில் வாழும் அருளாளர்கள் சிவனடியார்கள் யாவரும் சமாதியடையும் காலத்தில் வங்கக் கடலோரத்திலமைந்த இடுகாட்டில் சமாதி வைக்கும் மரபு நெடுங்காலமாக இருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய காலத்திலும் பின்னரும் சமாதியடைதலைக் காரை வேய்தல் அல்லது காரை இருத்தல் என்னும் சொல் வழக்கு இருந்தது. சமாதிகள் நாட்டின் கீழ்க்கரையில் (கடலோரம்) அமைவதால் கீழ்க்கரை எனவும் கீழ்க்காரை எனவும் வழங்கப்பட்டது. இவ்வாறமைந்த இடுகாட்டில் உடல்களைச் சமாதி வைத்துக் கோயிலாக்கியுள்ளனர். இவ்விடத்திலமைந்த சமாதிக்கோயில் களுள் "செத்தும் கொடுத்தான்" சீதக்காதியின் சமாதியான ஆலயமும் ஒன்றாக (17ஆம் நூற்றாண்டில்) அமைந்துள்ளது. இப்புனித மண்ணில் அவதரித்துத் தெய்வ மகளிரான காரைக்கால் அம்மையாரினால் காரைக்கால் பிரபலமடைந்தது.

காரைக்கால் இடுகாட்டில் சமாதிக்கோயில்களும் நடுகற் களும் இன்றுவரை காணப்படுகின்றன. காரை - உடல், தேகம் எனவும் அமைவதால் உடல்களைச் சமாதி வைத்த மையமாகவும் நிலையமாகவும் அமைகிறது. உடல் - காரை, வைக்கும் மையம் - கால் எனவும் அமைந்து அன்று முதல் "காரைக்கால்" என வழங்கப் படுகிறது. இதே இடுகாட்டமைப்பே இணுவில் காரைக்காலில் அமைந்ததைப் பின்னர் அறிவோம்.

### 1.3 காரைக்கால் சிவாலயத்தின் அன்றைய அமைப்பு

இணுவில் கோண்டாவில் விசுவநாதர் எனப் போற்றப்படும் நான்கு முகலிங்கம் - பஞ்சலிங்கம் என வழங்கப்படுகின்றது. இச்சிவ லிங்கத்தின் இன்றைய வடிவத்தையும் அற்புதத்தையும் பின்னர் வேறாக அறிவோம். வேறெங்கும் காண முடியாத உயரமும் பரந்த சுற்றளவையும் கொண்ட இலிங்க வடிவம் மேற்குத் திசையை நோக்கி அமைந்துள்ளது. மகாசக்தியான விசாலாட்சி அம்பாள் வேறான சந்நிதியில் அமைந்து தெற்கு நோக்கி அருள் பாலிக்கிறார். இவ்வமைப்புகளுடன் உள்வீதி காட்சி தருகிறது. (பிற்காலத்தில் அமைந்ததைப் பின்னர் அறிவோம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சுற்றுக்கு வெளியே இரண்டாம் சுற்று வடக்கு வீதியில் தெற்கு நோக்கியவாறு மாரியம்பாள் அருள் பாலிக்கிறார். பிரதான மூல லிங்க அமைப்பின் தென்கிழக்கில் கால பைரவர் காவல் தெய்வமாக விளங்குகிறார். இதே இரண்டாம் வீதியின் தென்மேல் மூலையில் மடப்பள்ளி அமைந்துள்ளது. இவை யாவற்றிற்கும் பின்புறமாக மூன்றாம் சுற்று வீதி அமைந்துள்ளது. இந்த வீதியே இன்றைய தேரோடும் வெளிவீதியாகப் பயன்படுகின்றது. இரண்டாம் வீதி பாவனையில் இன்றில்லை. இங்கு கருவறையில் அமைந்துள்ள இலிங்கப் பெருமானின் அருட்பார்வை யாவரையும் கவர்ந்துள்ளது. இதனால் பல்வேறிடங்களில் வாழும் பக்தர்களும் இங்கு வந்து வழிபட்டு அருள் பெற்றுச் செல்கின்றனர்.

## 1.4 காரைக்காலில் குடிகொண்ட இலிங்கப் பெருமானின் வடிவமைப்பு

இவ்வாலயம் முதலில் ஆரம்பிக்கப்பட்ட காலம் எவராலும் கூற முடியவில்லை. இறைவனின் திருவிளையாடலுக்கமைய ஈழத்துப் பஞ்ச ஈச்சுவரங்களின் ஆரம்ப காலமும் எவராலும் கண்டறியப் படவில்லை. இன்றைய காரைக்கால் சூழலின் நோக்கில் சாதாரண நிலமட்டத்திலிருந்து ஆலயம் ஓரடி உயரத்தில் அமைந்துள்ளது. கருவறை ஆலய மட்டத்திலிருந்து இரண்டடி உயரத்தில் அமைந்துள்ளது. தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா அவர்களின் ஆய்வறிக்கையின் படி இச் சிவலிங்கம் ஐந்து தளம் கொண்டதும் ஆறடி உயரத்துடன் நான்கு முகலிங்கமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பருமனுக்கேற்ப நிறைவில் இதனை அசைக்க முடியாததால் ஆரம்பகால ஆலய மட்டத்தில் நிறுவப்பட்டது. பிற்காலத்தில் ஆலயம் புனர்நிர்மாணஞ் செய்யப்பட்ட போது இதன் அடித்தளம் இரு அடிவரை இன்றைய கருவறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமட்டத்தில் அடங்கியுள்ளது தெளிவாகிறது. மூலலிங்கத்தின் நான்கு முகங்களையும் வெளியில் நின்று தரிசிப்பதற்காக வாசற் கதவுடன் ஏனைய மூன்று திசையிலும் மூன்று யன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைச் சுற்றியுள்ள நான்கு முகங் களுக்கும் தீபாராதனை செய்வதன் பேரில் இலிங்கத்தின் புறத்தே இடைவெளியும் அமைந்துள்ளது.

இந்த இலிங்க அமைப்பைத் துல்லியமாக நோக்கி அதன் பருமன் மற்றும் நான்கு திசையிலுமமைந்த மூர்த்திகளின் விபரங்களையும் அறிவோம். பிற்காலத்தில் இவ்வாலயத்தின் விழாக்காலப் பிரதம குருவும் அனுபவ ஆற்றல் மிகுந்தவருமான சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள் நன்கு அவதானித்து வடிவமைப்பின் ஆகம விதிகளுக்கமைவான நோக்கில் பதிந்து வெளியிட்டதுடன் மேலும் விசாலாட்சி அம்பாள், மாரியம்பாள், உற்சவ மூர்த்திகள் அடங்கியவற்றின் சிறப்பையும் சரவணபவக் குருக்களின் வாசகத்தில் அறிவோம்.

## மூலலிங்கத்தின் சிறப்பு

பெரும்பாலான சிவன் கோவில்களில் மூலவராகச் சிவலிங்கமே பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும். வட இந்தியாவில் ஒரு சில ஆலயங்களில் ஆவுடையாருக்கு (சக்திபாகம்) மேல் காணப்படும் லிங்கத்தில் முன்புறமாகவோ அல்லது நான்கு புறங்களிலும் சிவனின் முகஅமைப்பு மட்டும் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் காரைக்கால் சிவன் ஆலயத்தில் மேற்கு நோக்கிய சிவன் நிஷ்டையில் (தியானத்தில்) அமர்ந்திருக்கும் வடிவம் முழுமையாகச் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மூலாலய (கருவறை) நிலமட்டத்தில் இருந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்க உயரம் 45"

ஆசனம் கிழக்கு மேற்கு 24"

வடக்கு தெற்கு 30"

உயரம் 4"

| | |
|---|---|
| அதன் மேல் சதுரவடிவம் உயரம் | 11" |
| அதன் மேல் விருத்த வடிவம் உயரம் | 16" |
| விட்டம் | 23" |
| அதன் மேல் விருத்தம் | 7" |
| விட்டம் | 17" |

இந்த 7 அங்குல மேல் விருத்தத்தில் சிவனின் முக அமைப்பு வடக்கு பிரம்மா முழுமையான அமைப்பு ஆவுடை அமைப்பு சிறியதாக நீளம் 2" அகலம் 4" உயரம் 4"

கிழக்கே லிங்கோற்பவர்

தெற்கே தக்ஷிணாமூர்த்தி சனகாதி முனிவர்

அதன் மேல் விருத்தம் உயரம் 7" விட்டம் 12"

இதில் சிவனின் சிகை (முடி) மேல் வரும் சர்ப்பம் மற்றும் கங்கை தீர்த்த முகஅமைப்பு பிறைச்சந்திரன் அமையப் பெற்றுள்ளது.

கண்டமணி உருத்திராக்க மாலையுடன் சிவனின் திருக் கரங்களில் மான், மழு மற்றைய இரு கைகள் முழந்தாளின் மேல் நிஷ்டையில் இருக்கும் தோற்றம் புலித்தோல் விரிந்த நிலையில் அதன்மேல் இடது காலின் மேல் வலது கால் மடித்து சப்பணமிட்டு தியானத்தில் அமர்த்திருக்கின்றார்.


ஆலயத்தில் சிவன் வாயிலில் காணப்படும் நந்தியெம் பெருமான் 11" உயரமும் 25" நீளமும் கொண்ட வடிவில் இரு காதுகளும் கீழ் இறங்கி கால்களில் தொடும் வண்ணம் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூல லிங்கப் பெருமான்







மூலவர் முகப்பொலிவு



மூலவரில் லிங்கோற்பவமூர்த்தி



மூலவரில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி



மூலவரில் ஸ்ரீ பிரம்மமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ விசாலாட்சி அம்மன்



மாரியம்மன்



ஆதி மாரியம்மன்



நந்திகேஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தமாக காட்சி தருகின்றார். இந்த நந்தி அமைப்பும் வேறெந்தக் கோவில்களிலும் காணமுடியாத வடிவமாகும்.

**விசாலாட்சி அம்மன் வடிவம்**

ஒரே கல்லில் வடிக்கப்பட்டதாக அர்த்த பத்மபீடம் 6" உயரம் அம்மன் 38" உயரத்தில் மிக அழகிய நுட்பமான சிற்ப வேலைப்பாடுகளில் அங்க லக்ஷணங்களோடு ஆடை ஆபரண வேலைப்பாடுகளும் மிகத்தெளிவாக காணப்படுகின்றது. நான்கு திருக்கரங்களில் அபய, வரதமும், அக்ஷமாலை, பத்மம் என்பன அமையப்பெற்றுள்ளது.

**மாரிஅம்மன் சிறப்பு**

ஆலயத்தில் ஈசான பாகத்தில் வெளிப் பிரகாரத்தில் உட்பிரகாரத் தோடு இணைந்த மண்டப அமைப்போடு தெற்கு பார்த்த வகையில் மாரி அம்மன் கோவில் அமையப்பெற்றுள்ளது. மூல மண்டபம் அர்த்த மண்டபமும் காணப்படுகின்றது.

வெள்ளைக் கல்லிலே 26" உயரத்தில் வயதான தோற்றத்தில் பெரிய செவிகளோடும் அபய வரத ஹஸ்தம் மற்றும் தொடையுடன் முட்டியபடி இரு கைகள் தொங்கிய நிலையில் விக்கிரகம் அமையப்பெற்றுள்ளது.

இடதுகால் மடித்து வலது கால் சற்று ஊன்றிய கோலத்தில் அமர்ந்த நிலையில் மாரியம்மை காட்சி தருகின்றார்.

**உற்சவ மூர்த்திகளாக**

விசாலாட்சி விஸ்வநாத சுவாமி, சந்திரசேகரமூர்த்தி, நடராஜப் பெருமான், விநாயகர், வள்ளி தெய்வானை முருகன், பைரவர், சண்டேஸ்வரர், சத்ருசம்ஹார மூர்த்தி அஸ்திர தேவர் போன்ற மூர்த்திகளும் அருள் பாலிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.5 கருணாகரத் தொண்டைமான்

தமிழ்நாட்டின் அரச படைத்தளபதியான கருணாகரத் தொண்டைமான் இலங்கையைக் குறிப்பாக யாழ்ப்பாணத்தை நாடி வந்தான். இவன் தமது நாட்டுக்குத் தேவையான கடலுப்பை இங்கிருந்து வாங்கிச் செல்ல முன்வந்தான். இலங்கையின் தமிழ் மன்னனிடம் அனுமதி பெற்று வடமராட்சியின் வல்லி ஆற்றின் மூலம் தாம் வாங்கும் உப்பை கடல்வழி மூலம் எடுத்துச் செல்வதற்காக வல்லியாற்றை ஆழமாக்கியும் அதனை வட கடலுடன் இணைக்கும் தொடரையும் வெட்டுவித்தான். இதனால் வல்லி ஆறு தொண்டைமானாறு என்னும் பெயருடன் பிரபலமடைந்துள்ளது.

தொண்டைமான் சிவபக்தன். இங்கு வந்ததும் யாழ்ப் பாணத்திலமைந்த ஆலயங்களைத் தரிசித்தான். தனது ஆலய தரிசன உலாவில் பல சீர் வளங்களும் கொண்ட இணுவில் திருவூரை நாடினான். அக்காலத்தில் இங்குள்ள காரைக்கால் ஆலயச் சிறப்பும், இவ்வூரின் வனப்பும் சிவனாரின் அருட் பொலிவும் கருணாகரத் தொண்டைமானை வெகுவாகக் கவர்ந்தது. தொண்டைமான் தமது சிவபக்தி மேலீட்டினால் இவ்வாலயச் சூழலான இணுவிலில் தங்கி இடையறாது வணங் கினான். அக்காலத்தில் இறையருளால் இவ்வாலயமும் சுற்றுச் சூழலும் வெகுசிறப்பாக இயங்கியதெனச் சரித்திர வரலாற் றாசிரியர்களான செ.இராசநாயக முதலியாரும் முத்துக் குமார சுவாமிப்பிள்ளையும் தத்தமது நூல்களில் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாலயம் இச்சான்றுகள் மூலம் கருணாகரத் தொண்டைமானின் வரவுக்கு முந்திய காலத்தில் நிறுவப்பட்டதென அறிய முடிகிறது. ஆனால் இவ்வாலயம் யாரால் எப்போது அமைக்கப்பட்டதென ஆய்வாளர்கள் எவருமே உறுதிப்படுத்த வில்லை. யாழ்ப்பாணத்தில் கருங்கல் இல்லாதபோதும் இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புதமான பிரமாண்டமான சிவலிங்கத்தினதும் அம்பாளினதும் முழு உருவக் கருங்கற்சிலை இங்கு காட்சியளிப்பது சிறப்பாகும். இலங்கையில் ஆதியிலமைந்த பஞ்ச ஈச்சுரங்கள் அமைந்த காலமும் எவராலும் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. இது போலவே காரைக்கால் சிவாலயமும் நிறுவப்பட்டமை இறைவனின் திருவிளையாடலேயாகும்.

## யாழ்ப்பாணத்தில் குடிப்பரம்பல்

இலங்கையின் ஆதிவாசிகளான இயக்கர், நாகர் பின்னர் வேடர் களாகிய குடிகள் பெருகியதை விட இங்கு குடிப்பரம்பல் இல்லை. இலங்கையின் இயற்கை வளத்தின் சிறப்பால் கவரப்பெற்ற இந்தியத் தமிழ் மன்னர்கள் காலத்துக்குக் காலம் இங்கு வந்து இங்குள்ள வளங்களை வளர்த்துத் தாம் அனுபவிக்க முற்பட்டனர். இதனால் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் தொழில்துறை சார்ந்த மக்களை அழைத்து வந்து இங்கு குடியேற்றினர். மேலும் சைவ வழிபாட்டிற்கான ஆலயங்களை அமைத்து யாவரையும் வழிபட உதவினர். மக்களுக்கும் வேண்டிய சகல வசதிகளையுஞ் செய்து கொடுத்தனர்.

மக்கள் இந்தியாவில் சைவமும் தமிழும், கலை, கலாசாரமும் பிரகாசிப்பது போல சிவ வழிபாட்டையும் பல்சுவைக் கலைகளையும் இடையறாது போற்றி வந்தனர். இதனால் இந்தியாவின் சகல துறைகளையும் பிரதிபலிக்கும் சைவம், தமிழ், கலை, கலாசாரம், மனிதநேயம், விருந்தோம்பல், நற்பண்பு, விவசாயம், தொழில்நுட்பம் யாவும் இங்கும் விருத்தியடைந்து பிரபலமடைந்தன. இதனால் எம்மக்களின் வாழ்க்கைத்தரமும் சிறப்படைந்தது. இந்தியாவில் தாம் வழிபட்ட தெய்வங்களின் பெயரிலேயே இவ்வூரிலமைந்த தெய்வங்களையும் போற்றி வந்தனர். காரைக்காலில் இருந்து இங்கு குடியேறியதும் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த ஊரின் பெயரான காரைக்காலின் பற்றுறுதியால் இவ்விடத்தையும் காரைக்கால் என நிலை நாட்டினர்.

## 1.6 காரைக்கால் விசுவநாதர் ஆலயமும் காரைக்கால் இடுகாடும்

அக்காலம் முதல் இங்கு வாழ்ந்த மக்கள் தமது இயல்பான நாளாந்த விவசாயப் பணிகளுடன் இவ்வாலயத்தையும் ஏற்றிப் போற்றி வாழ்ந்தனர். இந்திய காரைக்கால் எமது சிவாலயத்திற்கு ஏற்றதாக அமைந்தது. சிவநெறி மேலோங்கியது. இம்மக்களிற் பலர் காசி விசுவநாதர் ஆலயத்தையும் சிந்தையில் பதித்திருந் தனர். இதே சிவாலயமூர்த்தியை விசுவநாதர் எனவும் சக்தியை விசாலாட்சி எனவும் போற்றி வழிபட்டனர். மேலும் காசியில் மயானம் அமைந்தது போலவே இவ்வாலயத்தினருகே மயானம் அமைந்ததெனலாம். அன்னபூரணி உணவு மற்றும் யாவற்றையும் வாரிவழங்குவது போல பக்தர்களைக் காக்கும் தெய்வமாக இரண்டாம் வீதியில் குடிகொண்ட சக்தியை மாரியம்பாள் எனப் போற்றி வழிபட்டனர். தென்கிழக்கில் காவல் தெய்வமாக அமைந்த காலபைரவரையும் சிறப்புடன் வழிபட்டனர். இத்தெய்வ ஆசியால் யாவரும் சிறப்புடன் வாழ்ந்தனர்.

### காரைக்கால் என்னும் இடுகாடு

அன்று வாழ்ந்த மக்கள் யாவரும் சிவநெறி பூண்டு சிவபதமடைந்த அருளாளர்களை காலபைரவரினருகேயுள்ள (காரை - உடல் - சமாதி வைக்கும் இடம் - மையம் - நிலையம் - கால்) காரைக்காலில் சமாதி வைத்தனர். காரைக்கால் இடுகாடு என்னும் மரபில் அண்மைக்காலம் வரை சிறு பிள்ளைகள், அருளாளர் களை அடக்கம் செய்தும், சமாதிக் கோயில் அமைத்தும் பேணப்படும் மரபு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலத்தில் நாம் அறிந்தவரையில் பெரிய சந்நியாசியாரின் மூத்த சகோதரரான வேலாயுதர் சந்நியாசியார், அவரின் மகன் ஆறுமுகம் சந்நியாசியார், கோண்டாவில் உப்பு மடத்தைச் சேர்ந்த குறுமுனிவர் அம்பலவாணர் சந்நியாசியார், இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டு துறவு பூண்டு மகாதேவ சுவாமிகளால் உருவாக்கப்பெற்றுக் கைதடியில் தபோவனம் அமைத்துச் சச்சிதானந்தம் சுவாமிகள் என்னும் பெயரில் அருட் பணியாற்றிச் சமாதியடைந்த சுவாமிகள் (உடையார் சுவாமிகள்) ஆகியோரின் புனித உடல்கள் இவ்விடத்தில் சமாதிக்கோயில் களாக அமைந்துள்ளன.

சச்சிதானந்தம் சுவாமிகள் சமாதியடைந்த தினமான தை மாதம் புநர்பூசத்தன்று வருடா வருடம் கைதடியிலிருந்து பக்தர்கள் வந்து பொங்கலிட்டு வழிபட்டு வருகின்றனர். இவை யாவும் இவ்விடுகாட்டிலமைந்த சமாதிக்கோயில்களாகும்.

மேலும் இச்சூழலில் வை.தியாகராசாச் சுவாமிகள் மற்றும் பலரின் உடல்கள் சமாதியில் அமைந்துள்ளன. அண்மைக் காலங்களில் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்கள், போர்ச்சூழல், ஊரடங்குச் சட்டங்களால் இச்சூழலில் வாழ்ந்தோர் பூவோடை, தாவடி, கோண்டாவில் போன்ற தூர இடங்களுக்குச் செல்ல அஞ்சிக் காரைக்காலில் தகனஞ் செய்யவும் முற்பட்டனர். இதனால் காரைக்காலில் இடுகாட்டு மரபு மறைந்து சுடுகாட்டு முறையும் நிலை பெற்றது. அக்காலத்தில் இந்த இடுகாட்டின் மேற்பார்வை இவ்வாலய நிர்வாகத்தினாலேயே பேணப்பட்டது. இன்றைய நிலையைப் பின்னர் அறிவோம்.

காரைக்கால் சிவாலய வழிபாட்டை இணுவில், கோண்டாவில் மற்றும் அயற்கிராமத்தினரும் பய பக்தியுடன் வழிபட்டு இன்ப சுகங்கண்டனர். குறிப்பாக நோக்குமிடத்து 1000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு முன் வேறெங்கும் காண முடியாத சிவாலயம் இங்கு முதன்முதல் அமைந்தமை இறைவனின் திருவிளையாடலே யாகும். இதனால் கோயில் இல்லாத இடத்தில் குடியிருக்க வேண்டாம் என உணர்ந்த சிவநெறியாளர்கள் யாவரும் இணுவில், கோண்டாவில் சூழலிற் கூடுதலாகக் குடிகொண்டனர். அன்று முதல் இச்சூழலில் வாழ்ந்தோர் சைவநெறி, நற்பண்பு, விருந்தோம்பல், யாவரையும் அன்புடன் அரவணைத்து உறவாடல் போன்ற அரிய பழக்கவழக்கத்தைக் கையாண்டனர். தாமும் இறையருளால் பல துறைகளிலும் முன்னேறி யாவராலும் இணையில்லாதவர்கள் எனப் போற்றப்பட்டதால் இந்த ஊரின் பெயரே "இணையிலி" என அன்று முதல் அழைக்கப்பெற்றது. பிற் காலத்தில் இச்சொல் மருவி இணுவில் என இன்று வழங்கப் படுகிறது.

**அந்நியராட்சிக் காலம்**

காரைக்கால் சிவாலயத்தின் அருட்சிறப்பினால் பய பக்தியுடன் உள்ளன்போடு வழிபட்டு நல்லறம் காத்த யாவரும் அன்று முதல் பல சீரும் சிறப்பும் பெற்று நலமுடன் வாழ்ந்தனர். இதே சிறப்பு இன்றும் தொடர்கிறது. 16ஆம் நூற்றாண்டில் வியாபார நோக்கத்துடன் வந்து தமது இன மத மொழிக் கொள்கைகளை இம்மண்ணிற் பரப்பவென ஐரோப்பிய அந்நியர் வந்தடைந்தனர். சைவ ஆலயங்கள், பள்ளிகள் யாவும் அழித்தொழிக்கப்பட்டன. சுதேச மக்களின் ஆலயங்களின் அழிவுடன் சைவ வழிபாட்டு மரபும் தடைப்பட்டது. இதனால் எவரும் ஆலயங்களை நாட முடியாமற் போனது.

அன்று நாளாந்தம் வழிபடச் செல்வோர் ஆலயத்தைக் கூட்டிச் சுத்தம் செய்து வீதிகளில் காணப்படும் புல், பூண்டுகள், இடையூறான பற்றைகளை அகற்றிச் சுத்தஞ் செய்தும் மிகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையாகப் பேணி வந்தனர். எவரும் நாடாததால் இச்சூழல் முழுவதும் புல் பூண்டுகள், பற்றைகள், செடிகள் கொண்ட பரட்டைக் காரைமுட் காடாகி ஏறத்தாழ 300 வருடங்கள் தேடு வாரற்ற ஒதுக்குப் புறமாகவே காணப்பட்டது. பல்லின மிருகங்கள், கொடிய பாம்புகள் நீடிய காலமாகக் குடி கொண்டிருந்தன. மக்கள் ஆலயச் சூழலை நாடாது வெகு தூரமாகவே உலா வந்து தமது விவசாயப் பணியை மேற்கொண்டனர். அந்நியராட்சிக்காலம் சைவமும் தடைப்பட்டதால் தமிழ்ச்சமூகம் இருள் சூழ்ந்த வாழ்வில் அல்லலுற்றது.

## 2. பெரிய சந்நியாசியாரின் அவதாரமும் பணிகளும் (1860 - 1917 சித்திரைத் திருவோணம்)

ஐரோப்பியர்களான போர்த்துக்கேயரின் ஆட்சியில் தமிழ்ச் சமூகம் நன்கு பாதிக்கப்பட்டது. அவர்களின் ஆட்சி முடிய ஆட்சிக்கு வந்த ஒல்லாந்தரும் முன்னோரைப் பின்பற்றினர். ஒல்லாந்தர் பிற் காலத்தில் சற்றுச் சலுகைகள் காட்டினர். முன்னூறு வருடங்களின் பின் வந்த ஆங்கிலேயர் தமிழர்களின் மொழி, மதத் தடைகளை நீக்கினர். 1822இல் அவதரித்த நாவலர் பெருமான் சைவமும் தமிழும் வளர அரும்பணியாற்றினார். நாவலர் தமது இறுதிக் காலத்தில் பெரிய சந்நியாசியாருடன் தொடர்பு கொண்டதைப் பின்னர் அறிவோம்.

அந்நியராட்சியில் சமயம், மொழி சார்பாக நலிவடைந்த போதும் எம்மவர் தமது வாழ்வாதாரப் பணியுடன் ஆலயங்களை நாடாவிட்டாலும் தத்தமது வீட்டு முற்றம், கிணற்றடியில் ஒரு கல்லை வைத்துத் தமது அகத்தளவில் இறை வழிபாட்டை மேம்படுத்தினர். எம்மவர் யாவரும் விவசாயிகள். தமது விவசாயப் பணிச்சிறப்புடன் கால்நடைகளையும் வளர்த்து வந்தனர். யாவரும் அயரா துழைத்துத் தமது சுயதேவைக்குரிய சத்துணவுப் பயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகளைப் பயிரிட்டு வளர்த்தனர். விவசாயப் பயிர்களுக்கு வேண்டிய பசளைக்காகத் தமது கால்நடைகளை வீடுகளிலும் தோட்டங்களிலும் பராமரித்தனர். இதனால் போதியளவு எருப் பசளையும், சத்துணவான பாற்பொருட்களும் தாராளமாகக் கிடைத்தன. இவற்றைத் தாமும் அயலவர்கள், உறவினர்கள் யாவரும் தமது இல்லறப் பண்பால் பகிர்ந்துண்டு வாழ்ந்தனர்.

தற்போதுள்ள மஞ்சத்தடிச் சூழலில் வாழ்ந்த கந்தர் தெய்வானை தம்பதியினர் தமது முன்வினைப் பயனுக்கேற்ப இல்லறத்தில் சொல்லறம் காத்து நல்லறத்தைப் பேணினர். இவர்களின் இனிய வாழ்வில் மூன்று சற்புதல்வர்களும் ஒரு புதல்வியும் மழலைச் செல்வங்களாகக் கிடைக்கப் பெற்றனர். அக்காலத்தில் ஏட்டுக்கல்வி புகட்டும் கல்விசாலைகள் இல்லாத தால் கல்வி வசதியைப் பெறாத போதும் இறை வணக்கத்துடன் பெற்றோரின் வழிகாட்டலில் சற்புத்திரர்களாகவே வாழ்ந்தனர். பிள்ளைகள் தமது பெற்றோரின் விவசாயப் பணிகளுக்கு உதவி வந்தனர். இவர்களுள் மூத்த மகன் வேலாயுதர் விவசாயப் பணியில் இணைந்தார். 1860இல் அவதரித்த இரண்டாவது மகன் சுப்பிரமணியம் விவசாயப் பணிகளுக்கும் மேலாகத் தமது குடும்ப ஆநிரைகளை மேய்க்கும் பணியை மேற்கொண்டார்.

## மந்தை மேய்த்தவரின் மாண்பு

சுப்பிரமணியம் இம்மண்ணில் சித்தராகி அருட்பணியாற்றி எம்மக்களை உய்விக்க இறையருள் நல்கியது. பெற்றோரின் தூய சிந்தனையும், குல தெய்வமான கப்பனைப் பிள்ளையாரின் பேரருளும், மக்களின் எதிர்பார்ப்பும் இறைவனின் திருவிளை யாடலாகவே அமைந்தன. குலதெய்வத்தினை வழிபட்டதும் தமது பசுத்தொழுவத்திலிருந்து ஆநிரைகளை அழைத்துக்கொண்டு காரைக்காலுக்குச் செல்கிறார். புல்வளம் மிக்க இடங்களிலே மேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதும் தமது இயல்பான இறைவழிபாட்டில் இணைவார். தமது கால்நடைகளையும் தூர இடங்களுக்குச் செல்லவிடாது ஓடி உலாவித் திரிவார்.

## 2.1 மாரியம்மனால் ஆட்கொள்ளப்படல்

15 வயதான சுப்பிரமணியம் மந்தை மேய்க்கும் பணியில் இருக்கும் போது தாயார் தெய்வானை நாள்தோறும் மதிய உணவைக் கொண்டு வர ஆவலுடன் உண்டு பசி தீர்ப்பார். இறையருட் சித்தப்படி தாயாரின் உணவை எதிர்பார்த்தவர், தாயார் வர வில்லை. பசியால் மாரியம்மன் சந்நிதியருகே உறங்கிவிட்டார். உலக மாதாவாக வாரி வழங்கும் மாரியம்மன் தாயுருவில் வந்து மதிய உணவை ஞானம் பொதிந்த திருவமுதாக வழங்கினார்.

உலக மாதாவால் ஆட்கொள்ளப்படவென்ற நியதியுடன் அவதரித்த சுப்பிரமணியம் மதிய உணவு தந்து ஆட்கொள்ளப் பட்டார். மாரியம்பாள் தமது திருவிளையாடலை நிறைவு செய்ததும் மறைந்தருளினார். இன்றைய மனித சமுதாயத்தில் பதினைந்து வயதுச் சிறுவன் இறையருளாற் தடுத்தாட்கொள்ளப்பட்டதால் ஞான உணர்வு மேலிடச் சித்தரானார். இதனால் அவர் எண்ணிய தெல்லாம் சித்தி பெற்றன. இணுவை மண்ணின் பெருமையை நிலைநாட்டவென அவதரித்தவர் தமது சிறுபராயத்தில் சித்த ரானதும் திருவருட்பேறு வெளிவந்தது. உற்றார், உறவினர், ஊரார் வியந்து பாராட்டிப் போற்றிப் பணிந்தனர்.

### சந்நியாசிக் கோலம்

15 வயதுச் சிறுவனானாலும் அன்னை மாரியம்பாளின் அருள் வளத்தால் யாவற்றையும் மறந்து பற்றுக்களை நீக்கி பிறர் நலம் நாடி ஆடியும், பாடியும், ஓடியும் சந்நியாசிக் கோலம் பூண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை மறந்து இறையருளை வியந்து தம்மை நாடுவோரின் முக்காலத்தையும் நோக்கி நல்வினைப் பயனை உணர்த்தி திருவாக்குரைத்தார். உடல், உள வலுவற்றோரின் பிணி போக்கி, திருநீறிட்டுக் குணப்படுத்தினார். சந்நியாசிக் கோலம் பூண்ட சித்தரின் நற்பணி பொதுமக்களின் எதிர்பார்ப்புகளுக்கு நல் விருந்தானது. சந்நியாசியார் வயது குறைந்தாலும் செயல் முதிர் வால் யாவரும் அவரை அன்பினால் சிக்கெனப் பிடித்த தொண்டர் களாயினர்.

கல்விச்சாலையை நாடாதவர். மருத்துவ அனுபவமேது மற்றவர். தமது சித்து மகிமையால் தொட்டதெல்லாம் மருந்து களாகவும், தீராத நோய்களையும் குணமாக்கும் நிவாரணியாகவும் கைகூடின. இதனால் காரைக்கால் சித்த வைத்தியத்தின் பெருநிலையமானதைப் பின்னர் அறிவோம்.

## தொண்டர் கூட்டம்

சந்நியாசியாரின் சித்து மகிமை தம்மை நாடும் அனைவரையும் தொண்டர்களாக மாற்றியது. சித்தரின் கோலத்தில் சிறுவனா னாலும் ஆற்றலில் எவரும் பெருமதிப்பளிக்கும் பேறு பெற்றவர்.

(காஞ்சி காமகோடி ஆதீனத்தின் 67ஆம் பீடாதிபதியாக 13 வயதுடைய சுவாமிநாதன் என்னும் சிறுவன் நியமனம் பெற்றான். ஆதீன முறைப்படி குருமுதல்வருக்கு பல சிறப்புகளையும் கல்வித் திறமைகளையும் கொண்ட மகாபண்டிதர்கள் சகல வித்தை களையும் போதித்துத் தகுதி நிலையை அடையச் செய்வர். இதற்கமைவாக 67ஆம் பீடாதிபதியாக நியமனம் பெற்ற 13 வயதுடையோன் ஆதீன வளாகத்தின் மர நிழலில் போதனா பயிற்சி பெறுகிறார். பண்டிதர்கள், கல்வியால், அறிவு முதிர்வால் உயர்ந்தாலும் அவரின் பெருமைக்கு மதிப்பளித்தனர். ஒரு சமயம் பண்டிதரின் போதனை நடைபெறுகிறது. சுவாமிநாதன் மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையில் கிறுக்கி விளையாடுகிறார். பண்டிதர்கள் அவரைக் கண்டிக்கவோ, குறை கூறவோ முடியாத நிலையில் இன்று இத்துடன் நிறுத்தி நாளை தொடருவோம் என்றனர்.

அச்சமயம் சுவாமிநாதன் அன்றைய போதனை முழுவதை யும் அப்படியே கூறி ஏன் இடைநிறுத்தினீர்கள் என விநயமாகக் கேட்டார். அச்சமயம் பண்டிதர் தமது தவறை உணர்ந்து சிறுவனின் விவேகத்தைப் பாராட்டினார். இவ்வாறு 13 வயதுச் சிறுவனான சுவாமிநாதன் தமது 100 வயது வரை 87 வருட காலம் அருட்பணியாற்றி யாவராலும் காஞ்சிப் பெரியார் எனப் போற்றப் பெற்றார்.)

இது போலவே எமது பெரிய சந்நியாசியாரும் நாட்டார் பாடலில் அதீத பற்றுடையவர். அன்பர்கள் பாடும்போது கிரகித்த வண்ணம் யோக நிலையில் இருப்பார். பாடுவோர் பெரியார் உறங்கும்போது நாம் பாடினால் அவரின் உறக்கத்தைக் கெடுக்கும் என உணர்ந்து தமது பாடலை நிறுத்துவர். அச்சமயம் பெரியார் ஓம் என்று கூறியபடி துள்ளி எழுந்து அவர்கள் பாடிய முழுவதையும் கூறிப் பாடலைத் தொடருமாறு பணிப்பார். இவை யாவும் சித்தர்களின் மௌனநிலை, யோக நிலையின் வெளிப் பாடாகும்.

இவர் இணுவில் திருவூரில் முதல் சந்நியாசிக் கோலம் பூண்டவர். மேலும் பலர் பிற்காலத்தில் சந்நியாசிக்கோலம் பூண்டாலும் இவரின் சித்து மகிமை யாவரையும் பிரமிக்க வைத்தது. இதனால் இவர் இணுவில் பெரிய சந்நியாசியார் என்றே போற்றப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2 பெரிய சந்நியாசியாரின் அருட் பணிகள்

பெரிய சந்நியாசியார் அருட்பணியை மேற்கொண்டவர். பொது மக்களின் விடிவுக்காக யாவரும் ஆலய தரிசனஞ் செய்ய வேண்டுமென உணர்ந்தார். தமது தொண்டர்களை நோக்கி இவ்வற்புதமான இச்சிவாலயத்தை பொதுமக்கள் யாவரும் வசதியாக வழிபட வேண்டும். பற்றை செடிகளை அகற்றி புனர்நிர் மாணஞ் செய்ய வேண்டும் எனக் கூறினார். யாவரும் சித்தர் கூறியதும் அப் பணியிலிணைந்தனர். நாற்புறமும் செப்பனிட்டு முடிந்தது. ஒரு சிலர் கருவறைச் சூழலிலிருந்த புற்று மண்ணை அகற்ற முன்வந்தனர்.

### ஆலயப் பணிகளை மேற்கொண்ட போது...

சிவாலயம் அனைவரதும் தரிசனைக்கும் கிடைக்க வேண்டுமென்ற பெருவிருப்பின் பேரில் பெரிய சந்நியாசியாரின் தொண்டர் படை தமது சிரமதானப் பணிக்கு ஆயத்தமானார்கள். பெரியார் சற்றுத் தூரத்தில் இருந்த வேளை தொண்டர்கள் பணியைத் தொடங்கினர். அச்சமயம் சிவனாரின் மேனியைத் தழுவியும், முடி மீதிருந்தும் எப்படை வந்தாலும் தமது கடமை தவறாது என்ற நோக்கில் செயற்பட்ட விஷப்பாம்புகள் வந்தோரைச் சீறிப் படமெடுத்தும் துரத்தியும் தமது திறமையால் யாவரையும் விரட்டின.

பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்னும் முதுமொழிக்கொப்ப பெரியாரின் தொண்டர்படை தமது ஆயுதங்களையும் வீசிவிட்டுப் பயந்து ஓடிச் சென்று பெரியாரிடம் முறையிட்டனர். அச்சமயம் பெரியார் தியான நிலையில் இறைவனை வேண்டினார். ஆலய வழிபாடு செய்யவென்றே ஆலயத்தில் துப்பரவுப் பணி நடைபெற உள்ளது. தடையின்றிப் பணி செய்ய உதவுமாறு வேண்டினார். அச்சமயம் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரங்களின் பின் யாவற்றையும் செய்யலாமென இறையருள் உணர்த்தியது. பெரியார் தமது தொண்டர்களை இரு வாரத்தின் பின் இப்பணியைச் செய்யுமாறு அருளினார். தொண்டர்கள் ஆலயத்தில் இதர பணிகளில் நிலை கொண்டனர்.

பெரியாரை உணர்த்திய இறையருளின் சித்தப்படி அங்குள்ள அனைத்துப் பாம்புகளும் அவ்விடம் விட்டகன்று வெகு தூரஞ் சென்றன. முன்னர் குறிப்பிட்டபடி கருவறையைச் சுற்றியுள்ள பாம்புப் புற்றுகள் யாவும் தொண்டர்களால் அகற்றிச் சுத்தம் செய்யப்பட்டது. தொடர்ந்து பெரியார் ஆலயத்தின் சகல பகுதிகளையும் புனர்நிர்மாணஞ் செய்யும் பணியிலும் இணைந்தார். தொண்டர் படையின் குதூகலமான பணியால் சிரமதானம் மூலம் சிவாலய வளாகம் துப்பரவு செய்து முடிந்தது. புனர்நிர்மாண வேலைகள் நிறைவு கண்டன. நல்லதொரு சுப வேளையில் குடமுழுக்காட்டி ஆலயத்தைச் சிறப்பித்தனர். தொடர்ந்து மண்டலாபிஷேகம், பூசைகள், விழாக்கள் யாவும் அந்தணச் சிவாச்சாரியார்களால் செய்யப்பட்டன. ஆலயம் சிறப்புடன் இயங்கவும் வழிபடுவோரும் பரவசத்துடன் வழிபட்டு இறையருள் பெற்றனர்.

## பெரிய சந்நியாசியார் நாட்டிய 1008 நன்மரங்கள்

பெரிய சந்நியாசியார் தமது அருட்சித்தினால் எம்மக்கள் பயனடையும் வண்ணம் பழம் தரும் மரங்கள், நிழல் தரும் மரங்கள், மூலிகை மரங்கள் உட்பட 1008 மரங்களை 1876ஆம் ஆண்டளவில் நாட்ட முன்வந்தார். பெரியார் வயதில் குறைந்தவரான போதும் அவரின் சித்து மகிமையால் தாம் நன்மையடைந்த பேறாகப் பலர் தொண்டரானார்கள். இவ்வாலயச் சூழலில் மாரி காலத்தில் மரம் நடுகை பற்றித் தொண்டர்களிடம் ஏற்கெனவே தெரிவித்தார். இதனால் தொண்டர்கள் நல்லின விதைகளைச் சேகரித்தும் சிறு கன்றுகளைப் பதிபோட்டும் பாதுகாத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் சித்தமருத்துவத் தேவைக்கான பல்லின மூலிகை மரங்கள், பழ வகைகளைத் தரவல்ல பலா, மா ஆகியவற்றுடன் நிழல் தரும் மரங்களையும் நட்டார். இந்த மரங்கள் யாவும் தொண்டர்களின் சிறந்த பராமரிப்பில் வளர்ந்து சோலைவனமாகக் காட்சி தந்தது. பெரியாரின் மறைவின் பின் பிறந்து பராமரிப்பை 23 வருடங்களின் பின் பொறுப்பேற்ற அம்பலவாண சுவாமிகள் மரங்கள் யாவற்றையும் மிகக் கண்டிப்புடன் எவரையும் சேதமாக்கவிடாது பாதுகாத்தார்.

1979இல் அம்பலவாண சுவாமிகள் சமாதியடைந்த பின் பராமரிப்பு நலிவடைந்தது. அடுத்த சில வருடங்களில் இம்மண்ணின் விடுதலைப் போராட்ட காலத்தில் யாவும் சிதைவடையத் தொடங்கியது. வலி - வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் இவ்வாலயச் சூழலில் தற்காலிகமாகக் குடியேறினர். விறகுத் தேவைக்கும் அடுத்துள்ள மயானத்தில் எரியூட்டவும் பல மரங்கள் தறிக்கப்பட்டன. இவர்கள் குடியிருந்த முப்பது வருடங் களில் கூடுதலான மரங்கள் அழிந்தன.

பெரிய சந்நியாசியாரின் பிற்காலத்தில் அம்பலவாணர் சுவாமிகள் காலத்திலும் பல அன்பர்களின் உதவியால் மூன்று மலை வேம்பு, ஆறு தேக்கு மற்றும் பலரால் வேறு பல நன்மரங்களும் நாட்டப்பெற்றன. பிற்காலத்தில் நாட்டப்பெற்ற மரங்கள் உட்பட இன்று 120 மரங்களே காட்சி தருகின்றன.

பெரியாரின் சிறப்பான மூலிகை மரங்களில் வேம்பு, இலுப்பை, அரசு, இத்தி, புங்கு மரங்களே உயிருடன் நிற்கின்றன. பெரிய சந்நியாசியாரினதும் அம்பலவாண சுவாமிகளினதும் அருட்பணியை நினைவு கூர்ந்து அன்றுபோல் நாற்புறமும் மிகுதி மரங்களை நட உரியவர்கள் முன்வர வேண்டும். இவ்வாறு செய்தால் இப்பணி இறைவனுக்கே ஆகி இறையருளால் இம்மண்ணுக்கு நற் சுபகாலம் பிரகாசிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய சந்நியாசியாரால் தோண்டப்பட்ட 7 நீர்நிலைகள்

இறைசக்தியால் ஆட்கொள்ளப்பட்ட பெரிய சந்நியாசியார் சித்தர்களின் மரபுப் பண்பிற்கமைய நாட்டு மக்கள் சிறப்புடன் வாழ்வதன் பேரில் நாட்டில் பயிர்வளம், நீர்வளஞ் சிறக்கவென்றே சித்தங் கொண்டார். ஏற்கெனவே தம்மால் நாட்டப்பெற்ற மரங்களை வளர்க்கவும், மக்களும் பல்லின உயிரினங்களும் நீர் பருகவும், சிவாலய தரிசனைக்கு வருவோர் கை, கால் முதலான தேக சுத்தி செய்து புனிதமாக ஆலய வழிபாடு செய்யவுமென்றே நீர்நிலைகளைத் தோண்டினார். ஆலயத்தின் தென்மேல், தென்கீழ்த் திசைகளில் இரு கிணறுகளை முதலில் தோண்டு வித்தார். கிழக்கிலும் வடக்கிலுமாக மேலும் இரு கிணறுகளைத் தோண்டுவித்தார்.

ஆலயத் தீர்த்த விழா வைபவத்திற்கென வைரவரின் வடபால் திருக்கேணியையும் வெட்டுவித்தார். வடக்கு வீதியில் கிழக்கருகே மிருகங்களின் குடிநீருக்கென இரு குளங்களையும் தோண்டுவித்தார். இந்த ஏழு நீர்நிலைகளையும் பெரியாரின் தலைமையில் உடல் உறுதியான விவசாயத் தொண்டர்கள் யாவரும் சேர்ந்தே இப்புனித பணிகளைச் செய்தனர். பெரியார் எவரும் பசியால் நலிவுறா வண்ணம் வேலை செய்யும் தொண்டர்களுக்குக் காலையில் தமது மாடுகளிலிருந்து கிடைக்கும் பால், மோர் ஆகியவற்றைப் பருகவும் முற்பகல் வேளை அவித்த மரவள்ளிக் கிழங்கையும் வழங்கி உற்சாகப்படுத்தினார். பிற்பகல் வேளை அன்னப் பணியாற்றினார்.

மேற்கூறிய உணவு முறையே இணுவில் மக்களின் அக்காலப் பாரம்பரியமான உணவு முறையாகும். நிறைவான இச்சத்துணவு எம்மவரின் நோயற்ற வாழ்வை நிலைநிறுத்தியது. யாவரும் சலிப்பின்றி நீடிய நேரம் வேலை செய்து தமது தொண்டுப் பணியில் இன்பங் கண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சந்நியாசியார் சித்தரானதால் மனித வாழ்வின் நிலையான தர்மத்தை உணர்ந்தவர். தேவார முதலியான திருநாவுக்கரசு நாயனார் வாலிபப் பருவத்தில் மனித வாழ்வின் நிலையாமையில் அறத்தை நிலைநிறுத்தவென்றே நிழல் மரங்களைத் தெருவோரங்களில் நாட்டினர். குளங்களை வெட்டுவித்தார். வறுமையால் நலிவுற்றோருக்கு உணவளித்தும் பல்வேறு உதவிகள் புரிந்தும் சிறப்புடன் வாழ உதவினார். பிற்காலத்தில் தமது பணிச்சிறப்பால் "அப்பர்" என அழைக்கப் பெற்றார். இவரும் உயர்வான அருட் சித்தராவார். இறையருளின் தூண்டுதலால் சித்தரான பெரிய சந்நியாசியார் ஆலய வழிபாட் டிற்கு வகை செய்தும் மரங்கள் நாட்டியும் நீர்நிலைகள் தோண்டி யும் எம்மண்ணின் நீர்வளம், நிலவளம், பயிர்வளம் சிறக்கவும் வித்திட்டார்.

## 2.3 காரைக்காலில் பெரிய சந்நியாசியாரின் சித்தமருத்துவப் பணி

அருட்சித்தி பெற்ற பெரிய சந்நியாசியார் இணுவில் மக்களின் உடல், உளப் பிணி நீக்கித் தேகாரோக்கியத்துடன் வாழவும் நாட்டில் பல வளங்களையுஞ் சேர்த்து யாவரும் சிறப்புடன் வாழவும் நாட்டில் கலைகள், கலாசாரப் பண்பு, ஆலயச் சிறப்புகளுடன் தன்னிறைவான வாழ்வில் யாவரும் இன்புற்று வாழ வைக்கவு மென்றே அவதரித்தார்.

இறைவனின் நியதிப்படி பாமர மக்கள் தமது நோய்களை இலகுவாகவும் செலவில்லாமலும் மாற்றுவதற்காகவே சித்த மருத்துவம் தோற்றம் பெற்றது. மக்களிடையே தோற்றம் பெறும் நோய்களுக்கு ஏற்றபடி குறிப்பிட்ட மூலிகையை பல்வேறு விதமாகப் பாவித்து நோய்களைக் குணப்படுத்தலாம். சித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் சித்திக்க வைத்ததை சித்த மருத்துவம் என வழங்கப்பட்டது. 18 சித்தர்களிலிருந்து பரம்பரையாக வழி வந்தோர் இதனைக் கையாண்டனர். உரிய முறைப்படி கையாண்டால் சித்த மருத்துவ முறை குணமாக்கும்.

சித்தர்கள் தமது சித்து மூலம் தொட்டதெல்லாம் சித்திக்கச் செய்யும் ஆற்றல் மிக்கவர்கள். இறைவனால் ஆட்கொள்ளப் பட்டவர் பெரிய சந்நியாசியார். இறைவனின் செயலாகவே தமது சித்த மருத்துவத்தை நிலைநாட்டினார். எமது மண்ணில் முதன்முதல் மருத்துவமுறையைக் கற்காவிட்டாலும் இறையருள் காட்டிய சித்து மகிமையால் நீடிய காலம் மாறாத நோய்களைக் குணமாக்கினார். பெரிய சந்நியாசியார் 15 வயதில் சித்தரானதும் இதர பணிகளுடன் மக்களின் உடல், உளப் பிணியை திருநீறிட்டு மணிமந்திரமோதியே குணமாக்கினார். என்றும் மாறாத நீடிய கால நோய்களுக்கே சித்த மருத்துவத்தைக் கையாண்டார். இதனால் அதிக பலன் கிடைத்தது.

பெரிய சந்நியாசியார் தமது சகல பணிகளுக்கும் காரைக்கால் ஆலயத்திலமைந்த விடுதியிலேயே தமது தவப்பொழுதை உபயோகித்தார். இங்கு சகல பணிகளிலும் பிணி போக்கும் சித்த மருத்துவம் முதன்முதல் 1876 அளவில் ஆரம்பமானது. அன்று தொடங்கிய சித்த மருத்துவம் நாற்பது வருட காலம் பிரகாசித்தது. பெரியாரின் சமாதிக்காலத்துடன் நிறுத்தப்பட்டது. பிற்காலத்தில் அம்பலவாணர் சுவாமிகள் 1940இல் ஆரம்பித்துக் காரைக்காலில் தம் பணிச்சிறப்பால் 1978 வரை சித்த மருத்துவத்திற்கு பெருமை தேடினார். இரு பெரியார்களினதும் அருட்சிறப்பால் காரைக்காலில் சித்த மருத்துவம் நிலை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4 சிவாலயத்தின் வளர்ச்சியும் பூசைகள் விழாக்களின் சிறப்பும்

பெரிய சந்நியாசியார் 15 வயதில் அருள்ஞானம் பெற்றுச் சித்த ராகித் தம்மை ஆட்கொண்ட இறைவனுக்கு ஆக வேண்டிய பணிகளை ஆரம்பித்தார். ஆலயம் புனர்நிர்மாணஞ் செய்யப் பட்டுப் பூசைகள் நடைபெற்றன. உடல் உளப் பிணியாளர்களைக் குணப்படுத்தினார். இறைவனின் பெருங்கருணை நிழலில் தீராத நோயினால் பாதிக்கப்பட்டோரை மூலிகையை மூலப்பொருளாகக் கொண்ட சித்த மருத்துவத்தால் சுகமடையச் செய்தார்.

இணுவை மக்கள் மருத்துவரின் தூய சேவைக்கு நன்றிக்கடன் செலுத்துவதன் பேரில் ஆலயத் திருப்பணிக்கு உதவ முன்வந்தனர். பெரியசந்நியாசியாரின் அருட்பணியால் நோய் பிணிகளிலிருந்து விடுபட்ட பலரின் வேண்டுதலுக்காகக் காரைக்கால் சிவாலயத்தில் பெருவிழாக்கள் நடாத்த இறையருள் பாலித்தது. இதற்கமைவாகப் புதிய கொடித்தம்பம் நாட்டவும் விழாக்கள் நடாத்தவும் பெரியார் ஆவலுற்றார்.

பெரிய சந்நியாசியார் தமது குடும்ப உறவினர்களான அறங்காவலர்களால் பராமரிக்கப்படும் இணுவில் கந்தசுவாமி கோயிலில் ஏற்கெனவே நாட்டி வழிபாடு செய்யப்பட்ட கொடித்தம்பம் (வேறொரு உயர்ந்த கொடித்தம்பம் நாட்டியபோது) பெயர்த்து வைக்கப்பட்டிருந்தது. அவ்வாலய அறங்காவலரின் பூரண விருப்பத்துடன் குறிப்பிட்ட கொடித்தம்பத்தைக் காரைக்காலில் 1877ஆம் ஆண்டளவில் நாட்டினார். தொடர்ந்து ஆடிமாதத் திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தவிழா அமையும் வண்ணம் பன்னிரு நாட்கள் பெருவிழாக்கள் நடைபெற்றன. பதினோராம் நாள் எம்பெருமான் பரிவார மூர்த்தங்களுடன் ஐந்து தேர்களிற் பவனி வந்து அருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சந்நியாசியார் சிவாகம விதிப்படி ஆலயப் பணிகளை ஏற்படுத்தினார். அந்தண சிவாச்சாரியார் மூலம் காலை, மதியம், மாலை மூன்று வேளை பூசைகள் நடைபெற்றன. பொது மக்களும் பக்திபூர்வமாக வந்து வழிபட்டனர். வியாழன், வெள்ளிக்கிழமைகள், பிரதோச நாட்கள் மாதங்கள் தோறும் சிறப்பான விழாக்களாகும். மேலும் மாசி மாத சிவராத்திரி, பங்குனி உத்தரம், ஆனி உத்தரம், ஆடியில் பெருவிழாக்கள், புரட்டாதி மாதத்தில் நவராத்திரி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகை சோமவார விழா, மார்கழித் திருவெம்பாவை ஆகிய காலங்களில் சிறப்பான விழாக்கள் நடைபெற்றன.

பெரியாரின் பெருவிருப்பின் பேரில் விழாக்களில் மங்கல இசை, உடுக்கு, பறைமேளம் யாவும் ஒலிக்கும். மேலும் கரகாட்டம், காவடியாட்டமும் சிறப்பாக இடம்பெற்றன. மாரியம்பாளின் சந்நிதியில் அன்று பங்குனித்திங்கட்கிழமைகளில் பக்தர்கள் மோதகம் அவித்தும் பொங்கலிட்டும் தமது பக்தியை நிலைநாட்டினர். சித்திரைச் சித்திரையில் பொங்கலும், கஞ்சியும் சிறப்பாகத் தயாரித்து யாவருக்கும் வழங்கினர்.

மேற்கூறிய பணிகள் யாவும் பெரிய சந்நியாசியாரின் காலம் ஏறத்தாழ நாற்பது வருடங்கள் தொய்வின்றி நடைபெற்றன. இக்காலம் முழுவதும் இவ்வூர் பல வளங்களும் பெற்றுச் சிறப்படைந்தது.

## 2.5 இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கான திருமஞ்சப்பணியின் ஆரம்பம்

பெரிய சந்நியாசியார் சிதைந்து போன காரைக்கால் சிவாலயத்தைப் புனர்நிர்மாணஞ் செய்து பூசைகள் விழாக்கள், பெருவிழாக்கள் யாவற்றையும் சிறப்புடன் நடைபெற வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமகாலத்தில் முருகப்பெருமான் தமக்கென உலா வருவதன் பேரில் மஞ்சமொன்றை உருவாக்குமாறு கனவிற் தோன்றி அன்புக்கட்டளையிட்டார். மேலும் தமக்கென உருவாக இருக்கும் மஞ்சத்தின் தோற்றத்தையும் காட்டி மறைந்தருளினார்.

முருகனின் அன்புக்கட்டளையை ஏற்ற சந்நியாசியார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முற்பட்டார். தமக்குக் காவடியாட்டம் மற்றும் கலைகளையும் பயில உதவிய இவ்வூர் ஏரம்புநாதர், தமது பிரதம தொண்டர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த தொண்டர் படையினருடன் ஆலோசித்தார். யாவரும் தம்மாலான சகல பணிகளுக்கும் தம்மை அர்ப்பணிப்பதாகக் கூறினர். முதலில் மஞ்சத்திற்குத் தேவையான முதிர்ந்த வைர மரங்களைத் தேடி அதன் உரிமையாளர்களிடம் தகவலைத் தெரிவிக்குமாறு கூறினார்.

இறைபணிக்கென்றே தம்மை அர்ப்பணித்த பலருள் இருவர் தாமே முன்வந்து தகுதியான மரம் உள்ள வீடுகளுக்குச் சென்று முருகப்பெருமானுக்கு பெரியசந்நியாசியார் பெருமஞ்சம் அமைப்பதன் பேரில் உங்கள் வளவிலுள்ள மரங்கள் தேவை எனத் தெரிவித்தனர். இவ்வூர் மக்கள் எவரும் மறுவார்த்தையின்றி மஞ்சத் திருப்பணிக்காகத் தங்கள் மரத்தைத் தறிக்குமாறும் தறிக்க வரும்போது தாமும் உதவுவதாகவும் கூறி இறையருளை வியந்தனர். இவ்வாறு பலரும் உதவ முன்வந்தனர். இணுவில் மேற்கைச் சேர்ந்த அருணாசலம் என்பவரும் தமது மரங்களைத் தறிக்க உதவினார்.

## ஆறுமுக நாவலரும் பெரியசந்நியாசியாரும்

இணுவில் மேற்கைச் சேர்ந்த அருணாசலம் சிறந்த தமிழறிஞர். இவர் தமது கல்வித் தொடர்பால் ஆறுமுகநாவலருடன் நட்புடன் உறவாடியவர். இவர் நாவலரின் வேண்டுதலுக்காகத் தமது வீட்டில் திண்ணைப்பள்ளி நடாத்தி மாணவர்களுக்கு இலவசக்கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதித்தவர். இச்சமகாலத்தில் அருணாசலம் நாவலரிடம் சென்றபோது இணுவிலில் 18 வயது வாலிபர் ஒருவர் இறையருள் ஞானம் பெற்ற சித்தராவார். இவர் காரைக்கால் சிவாலயத்தைப் புனர்நிர்மாணஞ் செய்து மக்களை வழிபடச் செய்தவர். இணுவில் கந்தசுவாமி கோயிலுக்குப் பெரிய மஞ்சமொன்றை உருவாக்க ஆரம்பித்துள்ளார் என்னும் நற்செய்தியைத் தெரிவித்தார்.

தமது வாழ்நாள் முழுவதையும் சைவத்துக்கும் தமிழுக்கும் அர்ப்பணித்த நாவலர் சிறப்பான சிவப்பணியாற்றும் சித்தரான வாலிபரை நேரிற் காண வேண்டுமென அருணாசலத்திடம் தெரிவித்தார். இத்தகவல் சந்நியாசியாருக்கும் தெரிவிக்கப்பட்டு இருவரும் கூடிச் சந்திக்கும் செய்தி பரிமாறப்பட்டது. 1878இல் இச்சம்பவம் நடைபெற்றது. பெரிய சந்நியாசியாரின் 18 வயதில் ஆறுமுகநாவலர் தமது 56 வயதுடையவராக சந்நியாசியாரைச் சந்திப்பதன் பேரில் காரைக்காலுக்கு வருகிறார். அவரின் அன்பர் அருணாசலமும் உடன் வந்தார். இருவரும் தமது சைவ சமய முறைப்படி அறிமுகஞ் செய்யப்பட்டதும் இறையருளை வியந்து உபசரிக்கப்பட்டனர்.

பெரிய சந்நியாசியார் வயதிற் குறைந்தாலும் சைவமும் தமிழும் வளர்த்து அரும்பணியாற்றிச் சமய குரவராக மதிக்கப்படும் நாவலர் அறிவாலும் வயதாலும் முதிர்ந்த பெரிய ஞானி சொல்வதை நன்கு கேட்டறிந்தார். இணுவில் திருவூரின் சிறப்பைத் தமது சித்து மகிமையால் மேலோங்கச் செய்த அருட்சித்தரால் சிவப்பணி மேலோங்கியதைக் கண்டு நாவலர் வியந்தார். முருகப்பெருமானுக்கு மஞ்சம் செய்வதையும் புகழ்ந் தார். எமது சைவ மரபுப்படி மஞ்சத்தில் அமைய வேண்டிய பாவைகள் மற்றும் அமைப்பு முறைகளையும் தமது சிவஞான உணர்வின்படி எடுத்துரைத்தார். யாவற்றையும் சந்நியாசியார் கேட்டு மகிழ்ந்ததுடன் பின்வருமாறு சிந்தித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே இயங்காத நிலையிலிருந்த சைவத்தையும் தமிழையும் தமது இளமைப்பருவத்திலிருந்து 56 வயது வரை இடையறாது அல்லும் பகலும் முழுவீச்சுடன் பணியாற்றிய சைவப் பெருமகனாரின் கூற்றைத் தமது ஆழ்மனதில் பதித்துக் கொண்டார். தாம் உருவாக்கும் மஞ்சம் முருகப்பெருமானின் பவனிக்கே உரியது. இச்சிறப்பை எம்மக்கள் அறிய இருக்கிறார் கள். நாவலர் பெருமான் முருகப்பெருமானின் தூதனாகவே தம்மிடம் பாதந்தேய நடந்து வந்தார். அவரின் கூற்று இறை தத்துவத் தையும் எமது பாரம்பரியத்தையும் உணர்த்துவதை நோக்கினார். யாவற்றையும் சிந்தையிற் பதிவு செய்த பின் சந்நியாசியார் ஆறுமுகநாவலரின் ஆலோசனை இறைவனின் ஆணையே என எண்ணினார். இருவரும் இன்ப அருள் நோக்கில் விடைபெற்றனர்.

நாவலர் பெருமான் தமது 56ஆம் வயதில் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் சிவப்பணியாற்றும் சந்நியாசியாருடன் நேரில் வந்து காரைக்காலில் சந்தித்ததை அன்று அவ்விடத்திற் கூடியிருந்த தொண்டர்களும் இவ்வூர் மக்களும் நேரிற் கண்ட இனிய நிகழ்வை வாயாரப் புகழ்ந்தனர். அன்று கூடிய மக்களிற் சிலர் இவ்வரிய செய்தியைச் செவிவழிச் செய்தியாக அன்றைய இளையோர் மத்தியில் கூறினர். (செவிவழிச் சான்றுகளைப் பதிவு செய்யும் அன்பரொருவர் மூலம் பெற்றதை எமது இணுவில் கல்விமான் சபா.ஜெயராசா அவர்கள் இந்த நூலுக்கான தகவலாக வழங்கினார்)

## 2.6 பெரிய சந்நியாசியாரின் இதர அருட்பணிகள்

பெரியசந்நியாசியார் இறைவனின் சித்தப்படி பொது மக்களின் உடல் உளப் பிணிகள் மற்றும் அவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் எவ்வினைகளையும் நீக்கவென்றே அவதரித்தார். தமது சம காலத்தில் வாழ்ந்த யாவருக்கும் உடல் உளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணிகளான தொற்று நோய், பரம்பரை நோய்கள், பில்லிசூனியம், நாய் போன்ற பிராணிகளால் கடியுண்ணல், பாம்பு மற்றும் தேள் போன்ற விஷக்கடிகளையும் மணிமந்திர மோதித் திருநீறிட்டும் மூலிகைகளை அறிமுகஞ் செய்து சித்தமருத்துவ மூலமும் யாவற்றையும் குணப்படுத்தினார்.

பொதுமக்களின் நலனுக்காகச் சந்நியாசியார் தமது சித்து மகிமையால் யாவற்றையும் குணப்படுத்தும் அருட்சக்தியை இறையருள் தந்தது. மாந்திரிகர்கள் எதிரிகளுக்குப் பில்லி சூனியத்தின் மூலம் பல கெடுதிகளைச் செய்தனர். இதனால் பாதிக்கப்பட்டோர் பெரியாரை அணுகினர். பெரியார் அதற்காக வேண்டிய யாகஞ் செய்து பில்லிசூனியத்தைச் செயலிழக்கச் செய்து காவலுக்காக உரியவர்களுக்கு நூல் கட்டியும் அவர்களின் துயரைத் துடைத்து விடுவார். பெரிய சந்நியாசியார் வாழ்ந்த காலம் முழுவதும் இங்கு வாழ்ந்த யாவரும் எதுவித குறைபாடுகளுமின்றி நிறைவாக வாழ்ந்தனர்.

சிவபெருமானின் ஆபரணங்களான பாம்புக் கூட்டத்தில் நல்ல பாம்பும் உண்டு. கொடிய விஷப் பாம்புகளுமுண்டு. இப்பாம்புகள் இச்சூழலில் கூடுதலாக வாழ்ந்தன. விஷகடியால் தாம் பாதிக்கப்பட வேண்டிய நியதி உடையவர்கள் அதனால் தாக்கப்படுவர். சந்நியாசியார் யாவற்றையும் குணப்படுத்தி நல்வாழ்வு வாழ வைத்தார்.

### பெரியாரின் கலை ஆர்வமும் இதர சிறப்புகளும்

சந்நியாசியார் தினமும் வீட்டிலிருந்து தமது அறப்பணி மையமான காரைக்காலை நாடுவார். செல்லும் வழியில் அமைந்த சிவகாமி அம்பாளையும் மாணிக்க பைரவரையும் வழிபட்டதும் தமது தொண்டர்கள் புடைசூழக் காரைக்காலில் அமைந்த தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமத்தில் தங்குவார். தம்மை நாடி வரும் அடியார்களின் உடல் உளப் பிணிக்காக வைரவரை வழிபட்டதும் அவ்விடத்தி லிருந்து திருநீறிட்டுத் திருவாக்குரைப்பார். யாவருக்கும் ஏற்றவாறு திருப்திப்படுத்தியதும் இணுவில் கந்தசுவாமி கோயிலை நாடுவார். அங்கு செல்லுமுன் வீதியிலமைந்த கூத்துக் கலைஞர் ஏரம்புநாதர் தமது மாணவர்களுக்குக் கூத்து, காவடியாட்டம் போன்றவற்றை நாட்டார் பாடல் பாடிய வண்ணம் நெறிப்படுத்துவார்.

ஏரம்புநாதர் பயிற்சி தரும்போது அவரின் அங்க அசைவும் பாடல்களின் உச்சரிப்பும் சந்நியாசியாரை வெகுவாகக் கவர்ந்தது. இதனால் தமது இதர பணிகளையும் மறந்து கலை ஆர்வத்தில் மூழ்கிவிடுவார். தாமும் காவடியாடவும் கூத்துக்கலையைப் பயிலவும் விரும்பினார். ஏற்கெனவே திருமஞ்சம் செய்யும் திருப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்து ஏரம்புநாதர் அன்பு பாராட்டியவர். சந்நியாசியாரின் ஆவலைப் பூர்த்தி செய்ய உதவினார். சந்நியாசியார் குறுகிய காலத்தில் யாவற்றையும் கற்ற கலைஞரானார். அவர் தமது காவடியாட்ட ஆவல் மேலீட்டினால் காவடிகளில் மிகப்பெரிய அளவிலான ஆட்டக்காவடியொன்றைத் தாமே செய்வித்து ஆலயங்களில் ஆடி வந்தார். தமது இறுதிக் காலம் வரை இதனை உபயோகித்தார். பிற்காலத்தில் மஞ்சத்தடி யில் அக்காவடி பாதுகாக்கப்பட்டது.

தமது கலை ஆர்வத்தினால் காரைக்காலில் நடைபெறும் விழாக்களில் பல்சுவைக் கலைகளும் வளர உதவினார். 1895இல் இணுவில் கந்தசுவாமி கோயில் பெருமஞ்ச வெள்ளோட்டம் மற்றும் வருடாவருடம் நடைபெறும் விழாக்களில் தமது ஆவலை நிறைவு செய்தார். உலகப் பெருமஞ்ச வெள்ளோட்டத்தில் மங்கல இசை, பறைமேளம், உடுக்கு, மிருதங்கம் போன்ற பல்லின வாத்தியங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், கரகாட்டம், காவடியாட்டம், நாட்டுக்கூத்து யாவற்றையும் பங்குபற்றச் செய்து இணுவிலில் பாரம்பரியக் கலைகளை அறிமுகப்படுத்தினார்.

இணுவில் மண்வாசனைப்படி பல்சுவைக்கலைகள் வளரவும், ஆலயங்களில் பூசைகள், விழாக்கள் சிறக்கவும் மக்களின் வாழ்வாதாரத்திற்கான பயிர் வளம், நீர்வளம், கால்நடை வளம் சிறக்கத் தமது சித்து மகிமையால் உயிரூட்டினார். சித்தரான பெரிய சந்நியாசியாரின் அவதாரத்தினால் இணுவில் மண்ணில் வளமான செம்மண்ணும் வற்றாத சவர் கலப்பற்ற நன்னீர் ஊற்றும் இறையருளின் நன்கொடையாக அமைந்தன. சந்நியாசியார் மந்தை மேய்த்த சிறப்பால் கால்நடைகளின் பெருவளமும் காரைக்கால் சிவாலயத்தை புனர்நிர்மாணஞ் செய்து வழிபட உதவியதால் இம்மண்ணில் இன்று 21 ஆலயங்கள் அருள் பாலிக்கின்றன.

காரைக்காலில் 1008 மரங்களை நாட்டினார். இம்மண்ணில் பல்லின மரஞ்செடிகள் பயிர்வளம் மேலோங்கியுள்ளது. இச்சூழலில் ஏழுநீர் நிலைகளைத் தோண்டினார். இம்மண்ணில் யாவரும் போற்றும் சிறந்த சுத்தமான நீர் ஊற்றெடுக்கிறது. பெரிய சந்நியாசியார் பல்லின மக்களையும் அன்புடன் உறவாடி அவர் களின் முன்னேற்றத்திற்கு ஆசி கூறினார். இன்று எம்மண்ணில் இன்றைய சிறு மாணவர் முதல் பெரியோர் வரை கல்வியால் மேம்பட்டு வாழ்வில் சிறப்படைந்துள்ளனர். இங்கு கல்வியறிவு வெகு சிறப்பாக அமைந்துள்ளது. பெரிய சந்நியாசியார் கலை களில் ஆர்வம் காட்டினார். இன்று எம்மத்தியில் பல்சுவைக் கலை களும் யாவராலும் போற்றப்படும் சிறப்புடன் திகழ்கின்றன. பெரிய சந்நியாசியார் தொட்டதெல்லாம் இன்று துலங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தேரோடும் வீதிக்குக் குறுக்கேயுள்ள தடை நீக்கம்

முதன்முதல் இணுவில் கந்தசுவாமி கோயில் பெரு விழாவின் தீர்த்த விழாவைக் காரைக்காலில் நடாத்தச் சித்தங் கொண்டார். இதற்காகக் கந்தசுவாமி கோயிலிலிருந்து ஏழு தேர்ப் பவனிக்காகப் புதிய 36 அடி அகலப் பாதை திறந்து வரும்போது பொதுமக்களின் பாரிய மரக்கொப்புகளையெல்லாம் அகற்றி வந்தார். அக் காலத்தில் காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் புகைவண்டிப் பாதை சென்றது. அப்பாதையோரம் தந்தி தொலைத்தொடர்புக் கம்பியும் 15 அடி உயரத்தில் இணைந்து சென்றது. இவை அரச உடமைகள். அதன் தடையை நீக்கினால் மட்டும் தேர் தடையின்றிச் செல்லலாம். அரச உடமையான கம்பிகளைத் தேரோட வசதியாக மாற்றஞ் செய்ய வேண்டின் வட மாகாண அரச அதிபரிடம் உரியவர் நேரிற் சென்று அனுமதி பெற வேண்டும்.

இந்த நியதிக்காகப் பெரிய சந்நியாசியார் அக்கால வடபகுதி அரச அதிபரான ஆங்கிலேயரிடம் கச்சேரிக்குச் செல்கிறார். குறிப்பிட்ட நேரத்திற் சந்திப்பதற்காகப் பெரியார் தமது குமிழ் மிதிதடியில் முன் செல்ல அவருடன் தொண்டர்கள் சிலரும் உடன் சென்றனர். பெரியார் கச்சேரியை அடைந்ததும் அவரின் பெருமையை ஏற்கெனவே தெரிந்த தமிழ் உயர் அதிகாரிகள் தத்தமது இருக்கையிலிருந்து எழுந்து நின்று கரம் கூப்பி வணங்கினர்.

இக்காட்சியை அவதானித்த ஆங்கிலேயரான அரச அதிபரும் எழுந்து வணங்கி நின்றார். பெரியார் தமது தேவையைக் கூறினார். அரச அதிபர் சற்று நேரத்திற்குள் உரிய அதிகாரிகளிடம் பணிப்புரை வழங்கினார். அனுமதி கிடைத்தது. பெரியார் மகிழ்வுடன் விடை பெற்றார். தேரோடும் தினத்தன்று காலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல கம்பிகளும் இறக்கப்பட்டன. தேர்ப்பவனி காரைக்கால் சென்று தீர்த்தவிழா முடிவடைந்தபின் திரும்பியது. மீண்டும் புகைவண்டிக்கடவையைத் தேர்ப்பவனி கடந்து சென்றது. அன்று மாலை தொலைத்தொடர்புக் கம்பிகள் செப்பனிடப்பட்டன.

பெரியாரின் சித்து மகிமை சென்ற இடமெல்லாம் சிறப் படைந்தன. தடைகள் யாவும் நீக்க வேண்டிய சகல பணிகளும் நிறைவடைந்தன. 1895 ஆனி உத்தரத்தன்று இணுவில் கந்தசுவாமி கோயிலின் தீர்த்தவிழாவில் ஏழு தேர்ப்பவனி காரைக்காலில் நடைபெற்ற விழாவைச் சிறப்பித்த பெருமை அழியாத நினை வாகும்.

## 4. இணுவில் கந்தசுவாமி கோயிலிலிருந்து காரைக்காலுக்கு ஏழுதேர்ப்பவனி

மஞ்சத்தடியில் ஆரம்பிக்கப்பெற்ற உலகப் பெருமஞ்சத்தில் இணுவில் கந்தப்பெருமான் முதன்முதல் 1895 தைப்பூசத்தன்று பவனி வந்தார். யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்த அற்புதமான சித்திர கூடமான பெருமஞ்சப் பவனி பெருவிருந்தாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து பெரியாரின் சித்து மகிமை மேலும் பல சிறப்புகளை நாட வைத்தது. காரைக்கால் சிவாலயம் சிறப்பான வழிபாடுகள் பெருவிழாக்கள் நடைபெற்று இறைவனின் அருள் பிரகாசித்தது.

இதேவேளை சித்தரின் சித்தத்தில் குடிகொண்ட சித்தின் பேரால் இணுவில் கந்தசுவாமி கோயில் பெருவிழாக்கால தீர்த்த வைபவத்தைக் காரைக்காலின் புதிய தீர்த்தக் கேணியில் நடாத்த நேர்ந்தது. இவ்வைபவத்தில் முருகனும் பரிவார மூர்த்தங்களும் ஏழு தேரில் எழுந்தருளி எதுவித தடையுமின்றி தேர்ப்பவனி செல்ல இறையருள் பாலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1895 ஆனி உத்தரத்தன்று இணுவில் கந்தசுவாமி கோயில் சுவாமி ஏழு தேரில் பவனி வந்து காரைக்காலில் பெரியாரால் அமைக்கப்பெற்ற தீர்த்தக்கேணியில் தீர்த்தவிழா இனிது நடை பெற்றது. இவ்விழாவின் சிறப்பம்சமாகப் பல இனிய செயல் வடிவங்கள் அமைந்தன. முதன்முதல் இரு சிறப்பான ஆலயங் களுக்கிடையில் 36 அடி அகலங்கொண்ட பெருவீதி அமைந்தது. வீதிக்கான காணியைப் பொது மக்களே வழங்கினர். ஆலயங் களின் சிறப்பாக ஊர்கூடித் தேர் இழுக்கப்பட்டது. எண்ணிறந்த மக்கள் இதிற் பங்கேற்றனர். வீதியோர மக்கள் தமது வீட்டின் முன்னால் இறைவனை வரவேற்று நிறைகுடம் குத்துவிளக்கு ஏற்றிப் பூசிக்கும் பயன் கிடைத்தது. சுவாமி ஊர்வலம் வரும்போது பெருமகிழ்வில் தேர் இழுக்கும் தொண்டர்களுக்கு எல்லைமானப் பந்தலின் முன் தாகசாந்தியும் வடை, மோதகம், சுண்டல் முதலான சிற்றுண்டியும் தந்து உபசரித்தனர். இறைவனை நேரில் வணங் கியும் அருள் ஆசி பெற்று மகிழும் பேறு பெற்றனர். அன்று முழுவதும் ஊரே கூடி விழாக்காலம் பூண்டது. இவ்வைபவம் பெரியார் சமாதியடைந்த பின் செயற்படவில்லை. இப்பெருவீதியை உள்ளூராட்சியினர் பொறுப்பேற்றதால் 36 அடி இன்றுவரை பதிவு செய்யப்பட்டு நிலைத்துள்ளது. தேரோட்டம் தடைப்பட்டதும் பிரதான வீதியிலிருந்து காரைக்காலுக்குச் செல்லும் வீதி இரு மருங்கிலுமுள்ள காணிக்காரரால் 36 அடிப் பாதையின் பெரும் பகுதி அபகரிக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவர்.

## 4.1 காரைக்கால் சூழலில் நடைபெற்ற கந்தசுவாமி கோயில் சூரன் போர்

இறைவனின் சித்தப்படி சித்தரான பெரிய சந்நியாசியார் தமது பிறந்த மண்ணின் கலைவளம் ஆலய விழாக்களின் சிறப்பு யாவற்றிலும் தம்மை இணைத்துக்கொண்டவர். கந்தபுராண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம் மேலோங்கிய இணுவிலில் அன்று ஒரே முருகனாலய மாக அமைந்த இணுவில் கந்தசுவாமி கோயிலில் கந்தசஷ்டி விழாவும் இங்கு நடைபெறும் சூரன்போரும் வெகு சிறப்பானவை. இவ்வாலயத்தில் உறைந்துள்ள ஆறுமுகப் பெருமான் தமது திருவுருவச் சிலை வடிப்பிலும் தமது அருளைப் பாலித்தவர்.

இப்பெரிய அமைப்பான ஆறுமுகப் பெருமானுக்கு அமை வாகவே சூரன் போருக்கான ஆட்டுக்கடா வாகனம் தோற்றம் பெற்றது. இவ்வாகனத்தின் கொம்புகள் கலை வடிவமைப்பான இயல்பான மரத்தினாலமைய வேண்டுமென்பதால் கொம்பிற் குரிய திருகி முறுகி வளைந்த மரக்கொம்பை அடையாளப் படுத்தித் தெரிவித்தார். இவ்வாறு அழகிய கடா வாகனத்தில் உலா வந்த ஆறுமுகப் பெருமானின் சூரன்போர் காரைக்காலில் நடை பெற இறையருள் உணர்த்தியது.

காரைக்காலில் வீதிவலம் வந்தபின் சூரன் போரை இவ்வாலயத்தின் தென்பகுதியிலமைந்த தோட்டவெளி நிலப் பரப்பில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கண்டு மகிழ ஏற்பாடு செய்தார். முப்பத்தாறடி அகலத் தெருவை மையமாக வைத்தே சூரன்போர் சுற்றுச்சூழலை உள்ளடக்கி வெகு சிறப்பாக நடை பெற்றது. தேர்ப்பவனி மற்றும் சூரன்போர் பெரிய சந்நியாசியாரின் இறுதிக்காலம் வரை நடைபெற்றது. பின்னர் தடைப்பட்டது. சூரன்போர் நடைபெற்ற இடமும் இன்று அயற்காணிகளுடன் இணைந்துவிட்டது. பெரியாரின் பெருவீதி இன்று சிறுவீதியாகவே காணப்படுகிறது.

## 5. பெரிய சந்நியாசியாரின் இறுதிக்காலம்

பெரிய சந்நியாசியார் மஞ்சத்தடிச் சூழலில் அவதரித்தவர். இறையருட் தூண்டலால் மாடு மேய்க்கும் பணியால் ஈர்க்கப்பட்டு இறைவனால் காரைக்காலில் ஆட்கொள்ளப்பட்டார். தமது சித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிமையால் பல்வேறு துறைகளிலும் சாதனையை நிலை நாட்டினார். இறையருட் தூண்டலால் இணுவில் கந்தசுவாமி கோயிலிலும் அருட்பணியாற்றியவர். தமது சித்தைச் சித்தி பெற வைத்தே கலைக்கூடமாம் பெருமஞ்சத்தை உருவாக்கினார். இதனால் கந்தசுவாமி கோயிலும் அவரின் பெருமதிப்பை உயர வைத்தது.

இதே காலத்திலும் தமது தபோவனத்தைக் காரைக்காலில் மையமாக வைத்தே அருட்பணி ஆற்றினார். இவ்விரு ஆலயத் தொடர்பில் அவரின் சாதனையாக கந்தசுவாமி கோயிலின் கொடித்தம்பம் காரைக்காலில் நாட்டப்பெற்றது. ஆனி உத்தர நன்னாளில் ஏழுதேர்ப்பவனி காரைக்காலுக்கு வந்தது. அதே போல கந்தசுவாமி கோயில் சூரன்போரும் காரைக்காலில் நடைபெற்றது. இவை யாவும் எங்கும் நடந்தாலும் அவரின் சித்த வைத்தியம் காரைக்காலில் உறைந்து நிலைபெற்றது.

இயற்கை நியதிப்படி பெரிய சந்நியாசியார் 1917 சித்திரைத் திருவோணத்தன்று சமாதியடைந்தார். அதுவரை காரைக்காலில் அந்தண சிவாச்சாரியார்களினால் தினமும் மூன்றுவேளை பூசைகள் விழாக்கள், பெருவிழாக்கள் நடைபெற்றன. பெரிய சந்நியாசியாரின் சமாதிக் காலத்தின் பின் காரைக்காலில் யாவும் நலிவடைந்தன. சிறிது காலம் பூசைகள் மட்டும் நடைபெற்றன. 1917 பிற்பகுதியில் பூசைகளும் நடைபெறவில்லை. ஆலயத்தை நாடுவோரும் அருகிவிட்டனர்.

மெல்ல முளைத்த புற்கள், செடிகள் வளரவும் பற்றைகள் படர்ந்து எவரும் உட்புக முடியாத நிலை ஏற்பட்டது. பக்கத்திலிருந்த இடுகாடும் மக்களுக்குப் பயங்கரமாகவே இருந்ததால் காரைக்கால் ஆலயச்சூழல் வெறிச்சோடிக் கிடந்தது. ஏறத்தாழ 1917 முதல் 1935 வரை கானரக்காலில் பற்றைச் செடியும் காரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செடி முதலான முட்புதரும் பரட்டைக்காடுமாக அமைந்தது. எமது பாமர மக்கள் அன்றைய சூழலில் காரைச்செடியையும் கண்டு காரைக்கால் என்னும் புனிதமான பெயரைக் கூறாது காரைக்காடு என்றே அழைத்தனர். பாமர மக்களின் நினைவில் எழுந்த காரைக்காடு பயங்கரப் பிரதேசமாக அமைந்தது இம்மண்ணின் சோதனைக் காலமாகும். இப்பகுதியில் மக்கள் நடமாட்டமே இல்லை. கிழக்கேயுள்ள தமது தோட்டங்களுக்குச் செல்லவென வேறோர் பாதை அமைத்தே சென்றனர்.

இறைவன் எல்லா இடங்களிலும் வியாபித்துள்ளார். எம்மக்களின் அறியாமையை நீடிய காலம் செல்லவிட்டார். எவ்வாறாயினும் இவ்வாலயத்தின் சிறப்பையும் பெருமையையும் மெய்ஞ்ஞானிகள் பலரிடம் உணர வைத்தவர் சிவனார். நல்ல காலம் கனிந்து வரும்போது யாவும் தொடர்ந்தே வரும். இருளும் அறியாமையும் இறை வணக்கமுமற்ற காரைக்கால் சிவாலயத்தில் சித்தர்கள் அருளாளர்கள் பலர் கூடி இன்றைய ஆலயம் சிறப் படைய வைத்ததை அறிவோம்.

## 6. பெரிய சந்நியாசியாரின் பிற்பட்ட காலம் (1917-1940)

பெரிய சந்நியாசியார் காரைக்காலின் புராதன சிவாலயத்தைப் புனர்நிர்மாணஞ் செய்து, சுற்றுச்சூழலையும் புனிதமாக்கி பொது மக்கள் யாவரும் சிவாலய வழிபாடு செய்ய நெறிப்படுத்தினார். இவர் இறைவனின் ஆணைப்படி பல அருட்சித்துப் பணிகளைப் பிரகாசிக்க வைத்தார். இறைவன் இட்ட பணிகள் நிறைவடைந்ததும் முக்கால உணர்வினால் தமது சமாதிக்காலத்தை உணர்ந்து மூன்று நாட்களுக்கு முன் சமாதிக்கான கிடங்கை வெட்டுவித்து வேண்டிய பொருட்களையும் தேடி வைத்தார். 1917 சித்திரைத் திருவோணத்தன்று மகாசமாதியடைந்தார். சமாதியடைந்த 16ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் சமாதி மீது நாட்டிய வெள்ளிவேல் பூசிக்கப்பட்டு இன்று மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் ஆலயமாகப் போற்றி வழிபாடு செய்யப் படுகிறது.

## 6.1 இச்சமகாலத்தில் காரைக்காலின் நிலைமை

பெரிய சந்நியாசியார் இறையருட் சித்தப்படி காரைக்கால் சிவாலயம் வளர உதவியவர். அந்தணச் சிவாச்சாரியார்கள் மூலம் மூன்று நேரப் பூசை செய்வித்தவர். ஆலயம் சிறப்படைந்தது. பெரிய சந்நியாசியார் சமாதியடைந்ததும் காரைக்கால் சிவாலயத் தில் பூசைகள் நலிவடைந்தன. வழிபடுவோர் மற்றும் உடல் பிணிக் காக நாடுவோர் எவரும் வருவதில்லை. ஆலயம் பராமரிப்பின்றி இருள் சூழ்ந்தது. இக்காலத்தில் மஞ்சத்தடி முருகனாலயத்தைப் பராமரித்து வந்த பெரிய சந்நியாசியாரின் மூத்த சகோதரரான வேலாயுதர் சந்நியாசியார் மஞ்சத்தடி ஆலயத் தேவைக்காகக் காரைக்காலை நாடினார். பூசைத் தளபாடங்கள் யாவற்றையும் எடுத்துச் சென்று மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் உபயோ கித்தார். காரைக்காலில் பெரிய சந்நியாசியாரால் நிறுவப்பட்ட கொடித்தம்பத்தையும் எடுத்துச் சென்று மஞ்சத்தடியில் நிறுவினார். இக்கொடித்தம்பம் இன்றுவரை நிலைபெற்றுள்ளது. மஞ்சத்தடி முருகன் ஆலயம் வளரவும் காரைக்கால் சிவாலயம் இருள் சூழ்ந்தது. காலங்கள் செல்லவும் ஆலய வளாகச் சுற்றுச்சூழல் கொடி செடிகள் வளர்ந்து பற்றைக் காடானது. பொதுமக்களின் நாட்டமுமில்லை.

## 6.2 சித்தர்கள் கோட்டம்

எங்கும் நிறைந்த இறைவன் ஒதுக்குப் புறமான ஏகாந்த வெளியில் சீவாத்மாக்களின் நலனுக்காக யோக நிலையில் அமர்ந்துள்ளார். இறைவனின் ஈர்ப்பினால் சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், அருளாளர்கள் இறைவனின் ஏகாந்த நிலையில் தரிசிக்க முன்வந்தனர். நயினை முத்துக்குமார சுவாமிகள் தமது சித்து மகிழ்வால் இணுவில் வடிவேற் சுவாமிகளிடம் அடிக்கடி வருபவர். முத்துக்குமார சுவாமிகள் தமது இறையின்பம் பெறும் நோக்கில் வடிவேற்சுவாமிகளுடன் காரைக்காலை நாடினார். இருவரும் யோக நிலையில் இறைவனைத் தியானித்தனர்.

அமைதியான நிழல் பரப்பும் சோலைப் பதியில் சிவசக்தியின் அருள் அலை மேலோங்க ஆன்மிக நெறியில் வாழ்ந்த பல அருளாளர்களும் சித்தர்களும் அடிக்கடி இங்கு வந்து கூடுவர். தமது அருட்சித்தினால் நீடிய காலம் இறை சிந்தனையுடன் காரைக்காலில் உலா வந்தனர். சித்தர்கள் தமது தவக்கோலத்தில் நீடிய காலம் சிவ இன்பம் பெற்றனர். இங்கு வந்து கூடும் மகான்களில் நயினை முத்துக்குமாரசுவாமிகள், வடிவேற்சுவாமிகள், யோகர் சுவாமிகள், கந்தையா (குடைச்) சுவாமிகள், கொக்குவில் ஞான பண்டித மருத்துவர் நடராசபிள்ளை, கோண்டாவில் உப்புமடம் அம்பலவாணர் சுவாமிகள், வீர சைவரான அல்லமாப் பிரபு போன்ற பலர் அடிக்கடி வந்து காரைக்காலைச் சித்தர் கோட்டமாகவே மாற்றினர்.

**ஊஞ்சல் கட்டி ஆடுதல்**

ஏறத்தாழ 1935ஆம் ஆண்டளவில் இறைவனின் திருவிளையாடலால் சித்தர்களிடையே ஆடல் பாடல் போன்ற ஆர்வம் மேலிட்டது. முத்துக்குமார சுவாமிகளுக்கு இறையொளியின் மேலீட்டினால் இவ்விடத்தில் ஊஞ்சல் கட்டி ஆடும் ஆவல் ஏற்பட்டது. அங்கு கூடியிருந்த பல தொண்டர்களின் பேருதவியால் வைரவர் கோயிலின் கிழக்கேயுள்ள பெரிய ஆல மரத்தின் கிழக்கே நீண்டு சென்ற ஆலங்கொப்பில் ஒரு பலகை ஊஞ்சல் அமைக்கப் பட்டது. முத்துக்குமார சுவாமிகள் இயல்பாகவே பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றவும் பண்ணோடு இசை பாடவும் வல்லவர். அவ்விடத்தில் அமைந்த ஊஞ்சலில் ஆடியும் பாடியும் யாவரையும் கவர்ந் திழுத்தார். காரைக்கால் சூழலில் வாழ்ந்த யாவரும் சுவாமிகளின் பாடலினால் ஈர்க்கப் பெற்று அவ்விடத்திற் சூழ்ந்தனர். சிறார்களும் பாடலின் ஈர்ப்பினால் தாமும் பாடி ஓடி விளையாடி மகிழ்ந்தனர். இவை யாவும் சித்தர்கள் மூலம் யாவரையும் அவ்விடத்தில் ஒன்று கூட வைத்த திருவிளையாடலாகும்.

## கூழுணவு தயாரித்தல்

நீடிய காலத்தின் பின் சித்தர் கோட்டத்தின் வரவால் இருள் சூழ்ந்த காரைக்காலில் ஆடலுடன் பாடலும் ஊர் மக்களையே கூவி அழைத்தது போல அமைந்தது. சித்தர்களுக்கும் பொது மக்களுக் கும் ஆலயப் பூசை வழிபாட்டில் ஆர்வம் ஏற்பட்டது. வடிவேற் சுவாமிகள் நயினை முத்துக்குமார சுவாமிகளிடம் "சுவாமி இவ்வாலயத்தில் பூசையை ஆரம்பிக்கலாமே" என்றார். அச்சமயம் காலம் கனியும், கட்டாயம் பூசை செய்ய வேண்டும். உரிய நேரம் வந்ததும் பூசையைத் தொடங்குவோம் என்றார்.

சித்தர்கள் யாவரும் கூழுணவு பருக விரும்பினர். வடிவேற் சுவாமிகளுடன் அவ்விடத்திலிருந்த தொண்டர்களும் இணைந்து செயற்பட்டனர். மாரியம்மன் சந்நிதியருகே பெரிய குண்டானில் சிறப்பான ஒடியல் கூழ் தயாரிக்கப்பட்டதும் மத்தியில் வைக்கப் பட்டது. குண்டானைச் சுற்றி நாற்புறமும் பாத்திரங்கள் வைக்கப் பட்டிருந்தன. தொண்டரொருவர் அங்கிருந்த தொண்டர்கள் அருளாளர்களுக்கு முதலில் கூழுணவை வழங்கியதும் ஏனைய யாவருக்கும் தாராளமாகக் கூழுணவு பகிர்ந்து வழங்கினார். இச்சிறப்பான கூழுணவால் யாவரும் மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியைத் தரும் பூசை செய்யவும் இறையருள் பாலித்தது. கூழுணவு உண்டதும் நயினைச் சுவாமிகள் வடிவேற்சுவாமிகளிடம் பூசையைத் தொடங்குவோம் என்றார்.

## காரைக்காலில் பல வருடங்களின் பின் ஏற்பட்ட மாற்றம்

இறையருட் சித்தப்படி சித்தர்கள் கூடித் தியானித்தும் நீடிய காலத் தவமிருந்தும் ஊஞ்சல் கட்டி ஆடியும் பாடியும் மகிழ்ந்தனர். பின்னர் யாவரும் இவ்விடத்திலேயே கூழுணவு தயாரித்தும் உண்டு மகிழ்ந்தனர். மக்களின் மனநிறைவுக்கேற்பவும் இறையருளின் பரிசாகவும் நல்ல மழை பெய்து நாட்டை வளமாக்கியது. இவை யாவும் இறைவனையே மகிழ வைத்தன. யாவும் நல்லதாக அமையவும் பூசைக்கான ஏற்பாடுகள் செய்ததும் வழமையான பூசைகள் முதன்முதல் தவத்திரு வடிவேற் சுவாமிகளால் மேற்கொள்ளப்பட்டது. நாட்கள் கடந்தன. பூசைகள் மற்றும் ஆலய நிர்வாகப் பொறுப்பை யாரிடம் வழங்குவதென யாவரும் சிந்தித் தனர். அச்சமயம் சித்தர்களுள் ஒருவரான நடராசபிள்ளை எதிர் காலத்தில் ஆலயப் பூசை மற்றும் பரிபாலனப் பணியை ஏற்கும் அருளாளரை அறிமுகஞ் செய்யுமாறு இறைவனை வேண்டினார்.

நீடிய காலம் பூசை வழிபாடில்லாததால் இறையருள் சோபிக்கவில்லை. நிலை கொண்ட சித்த மருத்துவம் செய்வா ரில்லாமல் மக்கள் அவதியுற்றனர். ஆலயச்சூழல் காரை முதலான முட்புதர்களும் பரட்டைக் காடாகவும் மாற்றமடைந்தது. காரைக்கால் என்னும் புனிதமான சொல் காரைக்காடு என யாவராலும் அழைக்கப்பட்டது. புனித மண்ணின் இயல்பான வரலாறு மாற்றப்பட்டது. தூய பக்தர்கள் என்று மனக்கவலை யடைகின்றனரோ அவ்விடத்தில் இறைவன் அருள் பாலிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் துயர் துடைக்கவென்றே இறைவன் காத்திருப்பார். மக்களின் உள்ளத் தூய்மையை நிலைநாட்டி இடர் நீக்கச் சித்தங்கொண்டார். பல சித்தர்களை இவ்விடத்தில் நாடவைத்தார். சித்தர் கோட்டம் சிறப்படைந்தது.

## சித்தர்கள் தொட்ட பணி

அவனருளாலே அவன்தாள் வணங்கிய சித்தர்கள் இருள் சூழ்ந்த ஆலயச் சூழலில் ஒருங்கமைந்து தவநிலையில் ஆடியும் பாடியும் தியானித்தும் இறைவனின் அருள் வேண்டி அனைவரையும் ஒன்றுகூட்டினர்.

சித்தர்கள் இம்மண்ணின் எதிர்கால நன்மை கருதியே உணவு முறையில் மிக எளிதான கூழுணவை விரும்பினர். பெரிய சந்நியாசியாருக்கு அருளமுது தந்து ஆட்கொண்ட மாரியம்பாளின் சந்நிதியினருகே அன்றைய வழக்கப்படி பெரிய குண்டானில் கூழ் காய்ச்சி மாரியம்பாளுக்கு நிவேதனஞ் செய்தனர். அவ்விடத்தில் கூடியிருந்த சித்தர்கள் மற்றும் அடியார்களுக்குக் கூழ் வழங்கப் பட்டது. யாவரும் கூழ் நிறைந்த குண்டானைச் சூழவிருந்து அம்பாளை வேண்டிப் போற்றிய வண்ணம் கூழை வயிராற உண்டு மகிழ்ந்தனர்.

அன்று பெரிய வாயகன்ற குண்டானில் கூழ் காய்ச்சிய சூழலில் இன்று (மாரியம்பாளின் சூழலில்) பெரிய கிடாரங்களில் பல்சுவைக் கறிவகைகளும் அன்னமும் சமைத்து பல நூற்றுக் கணக்கான பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதைப் பெருவிழாக் காலங்களில் காண்கிறோம். அன்று சித்தர்களும் பக்தர்களும் கூழ் காய்ச்சியதும் ஊரார் கூடி கூழமுதுண்டனர். அதன் மரபில் தொடர்ந்த அன்னதானப் பணி பெருவிழாக் காலங்களில் ஆலயத்தை நாடும் யாவருக்கும் அன்னம் பகிர்ந் துண்டு வாழும் மரபு வளர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்காலத்தில் ஏற்பட்ட மாற்றமும் பூசை வழிபாடுகளும்

காரைக்காலில் இறையருளாற் கவரப்பெற்ற பல சித்தர்கள் ஆலயத்தின் வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்தனர். முதலில் ஊஞ்சல் கட்டி ஆடியும் பாடியும் இறைவனை இசைவித்த முத்துக்குமார சுவாமிகள் அன்பே சிவம் என்று கூறி இறைவனான தொண்டர்களின் வயிராறக் கூழுணவு தந்தார். யாவரதும் உடலும் உள்ளமும் நிறைந்தது போல இறைவனைப் பூசித்து மகிழ்விக்கும் காலத்தையும் நோக்கினார். வடிவேற் சுவாமிகளிடம் பூசையைத் தொடங்குமாறு கூறினார். சித்தர்களின் நாட்டம் இறைவனின் பூசைக்கு வித்திட்டது.

முத்துக்குமார சுவாமிகளின் கோரிக்கைக்கமைய யாவரும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். முதலில் நீடிய காலப் பற்றைச் செடிகள் அகற்றப்பட்டு ஆலய வளாகம் புனிதமடைந்தது. பூசைக்கு வேண்டிய சகல ஆயுத தளபாடங்கள் வந்து சேரவும் அம்பாளின் சிறப்பான காலமான நவராத்திரிக் காலத்தில் பூசைகள் ஆரம்பிக்கப்பட்டது. வடிவேற் சுவாமிகளே முதன் முதல் பூசையைச் செய்து யாவரையும் மகிழ்வித்தார். ஆலய மணி யொலிக்கவும் மணியோசை கேட்ட சிவனடியார்கள் யாவரும் ஓடோடி வந்து ஆலய தரிசனஞ் செய்து மகிழ்ந்தனர்.

தொடர்ந்து நித்திய பூசைகளை அருள் நெறியாளரும் வீரசைவருமான அல்லமாப் பிரபு மேற்கொண்டார். பின்னர் அவரின் பெறாமகன் சோ.பரமசாமி பூசைகளைத் திறம்படச் செய்து வந்தார். இச்சமகாலத்தில் காரைக்கால் சிவாலயம் பூசை வழிபாட்டால் சிறப்படைந்தது. 1917 முதல் இருள் சூழ்ந்த ஆலயம் 1935 இல் கூடிய சித்தர்கள் அருளாளர்களின் அருட் பணியால் பூசைகள், வழிபாடுகள் தொடரவும் 1940 வரை எட்டியது. இறையருட் சித்தினால் அம்பலவாணர் சுவாமிகள் இவ்வாலயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்கும் போது இறையருட் பணியிலிருந்த சித்தர்கள், அருளாளர்கள் தம்பணியிலிருந்து விலகினர். அம்பலவாணர் தமது ஆர்வத்தினால் பல தொண்டர்களின் உதவியுடன் ஆலய வளர்ச்சியை மேம்படுத்தினார்.

## 8. அம்பலவாணர் சுவாமிகளின் அறிமுகம்

காரைக்கால் சிவாலயத்தின் ஆலயப்பணி சமய, சமூக சேவையான உடல் உளப் பிணியகற்றி மக்களை நிறைவுடன் வாழ்விக்க வென்றே இறையருளால் 1920 இல் அவதரித்தவர் அம்பலவாணர் சுவாமிகள். வாழ்வாதாரம் நாடிய தாயாரின் ஏக புத்திரரான அம்பலவாணர் ஏட்டுக்கல்வியை நாடாது 15 வயது வரை அன்பு கூரும் பணியாக மாடு மேய்த்து வந்தார். இறையருட் தூண்டலில் ஞானகுருவால் தடுத்தாட்கொள்ளப்பட்டு ஆலயம் சார்ந்ததும் மக்களின் துயர்துடைப்பதுமான சகல பணிகளையும் நன்கு கற்றறிந்தார். ஞான குருவின் ஆசீர்வாதத்துடன் காரைக்கால் சிவாலயத்தின் சகல பொறுப்புகளையும் ஏற்றார்.

### 8.1 அம்பலவாணர் சுவாமிகளின் அவதாரம்

இணுவில் கந்தசுவாமி கோயிலின் தர்மகர்த்தாவான அ.கதிரித்தம்பி நாகம்மா தம்பதியினரின் ஏக புதல்வனாக 1920 இல் அவதரித்தவர் அம்பலவாணர். இவரின் சிறுவயதில் தந்தையார் மறுமையெய்தினார். ஏட்டுக் கல்வியை நாடாத அம்பலவாணர் தாயாரின் வேண்டுதலால் 15 வயதுவரை தமது குடும்ப ஆநிரைகளை மேய்த்தார். 1935 அளவில் காரைக்கால் சிவாலய அருளாளரான நடராசபிள்ளை இறைவனால் கனவில் காண்பிக்கப்பட்ட அம்பலவாணரை நோக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் நடராசபிள்ளை தமது கனவில் தென்பட்ட சிறுவனின் அடையாளங்களைக் கூறி அச்சிறுவனைக் கண்டால் அழைத்து வருமாறு கோண்டாவில் இ.செல்லப்பா என்பவரிடம் தெரிவித்தார். செல்லப்பா தமது நண்பருடன் அச்சிறுவனைத் தேடினார். இறையருட் துணையுடன் இக்கிரி முட்பற்றையுடைய பனந்தோப்பில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனை அணுகித் தாயாரிடம் அழைத்துச் சென்றனர். தாயாரிடம் மருத்துவர் நடராசபிள்ளையின் வேண்டுதலைத் தெரிவித்தனர். தாயாரின் சம்மதத்துடன் செல்லப்பாவும் அவரின் நண்பரும் சிறுவனான அம்பலவாணரை நடராசாபிள்ளையிடம் ஒப்படைத்தனர். சிறுவனைக் கண்டதும் இறைவன் தெரிவித்த சிறுவன் தம்முன் நிற்பதை வியந்து இறையருளைப் போற்றினார். சிறுவனுடன் உரையாடியபோது சிறுவனின் விவேகமும் திறமையும் சிறப்பாக அமைந்ததால் குருவாக இருந்து நெறிப்படுத்தச் சித்தங்கொண்டார்.

## சுவாமிகளின் பயிற்சி நெறி

இறையருட் தூண்டலினால் ஞானகுருவாக அமைந்த சித்த மருத்துவர் ஆன்மிகநெறி, இறைதத்துவம் இறையருளை வேண்டித் திருநீறிட்டு மணிமந்திர மோதி ஞான உணர்வில் முக்காலத்தை உணர்ந்து குறி சொல்லவும் இதனால் உடல் உளப் பிணியகற்றல் தீராத நோய்களுக்கு மூலிகை மூலம் சித்த மருத்துவம் போன்ற மனித வாழ்வுக்கு உதவக்கூடிய சகல துன்பங்களையும் நீக்கவல்ல நெறிகளைப் போதித்தார்.

இயல்பாகவே யாவற்றையும் கண்டறியும் ஆற்றல் படைத்தவர் அம்பலவாணர். கருவிலமைந்த யாவற்றையும் செயற்படுத்தும் ஆக்கச் சித்தர் மரபினர். இறைவன் இவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திகளை சிறுவயதில் வெளிக்காட்டாதிருக்கவே ஏட்டுக் கல்வியை நாட வைக்கவில்லை. திருமூலர் சண்டேஸ்வரர் போன்ற முற்காலச் சித்துஞானிகள் மட்டுமன்றி எம்மண்ணில் முதற்சித்த ரான பெரிய சந்நியாசியாரும் மாடு மேய்த்தவர்கள். யாவரும் இறையருட் சிறப்பால் சித்தர்களாகப் போற்றப்பட்டனர். அந்த மரபில் அவதரித்த அம்பலவாணருக்கு படித்துணரும் பக்குவநிலை வந்ததும் குருவினாற் தடுத்தாட் கொள்ளப்பட்டார்.

ஞான குருவாக அமைந்த நடராச முனிவர் அம்பல வாணரின் இயல்பு நிலையைக் கண்டறிந்தார். தமது சீடனாக ஏற்றுத் தாய் தந்தை போலவுமமைந்து குருகுலக் கல்வி புகட்ட முன்வந்தார். நடராசபிள்ளை ஞானபண்டிதன். தமது செயற்திறனத் தனையையும் அம்பலவாணருக்கு அமுதாக ஊட்டி உணர்ந்து தெளிய வைத்தார். தங்கத்தைப் புடம் போட்டு ஒளிர வைப்பது போல அம்பலவாணரிடம் இறைவனால் அருளப்பெற்ற ஞான உணர்வுடன் பன்முகப்பட்ட சகல பணிகளிலும் சிறப்படைய வைத்தார். ஐந்து வருட காலத்தில் ஆன்மிகம், சைவசித்தாந்தம், வேதாந்தம், சித்தமருத்துவம், மாந்திரிகம், சோதிடம், ஆலய நிர்வாகப்பணி, நலிவுற்றோரை அறப்பணியால் அரவணைத்தல் போன்றவற்றில் சிறப்புடன் திகழ வைத்தார். இறைவன் சித்தர் களுக்கு உபதேசித்தபோது சித்த மருத்துவத்தை இலவசமாகச் செய்து அறத்தை வளர்க்குமாறு தெரிவித்தார். அதன் நோக்கில் சித்த வைத்தியர்கள் மருத்துவத்திற்கென ஏதும் வாங்கினால் மருந்து சித்திக்காதெனவும், பயனாளிகள் தாமாகவே முன்வந்து தருவதை அறப்பணிக்கு வழங்கவும் செய்தனர். இதனால் யாவரும் நன்மை அடைவர். நடராசபிள்ளையும் இதனை அம்பல வாணருக்கு நன்குணர்த்தியதால் அதன்படி ஒழுகியதைப் பின்னர் அறிவோம். 1940இல் சகல நெறிகளையும் துறைபோகக் கற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலவாணரை ஒரு சுப தினத்தில் காரைக்கால் சிவாலயத்தில் சகல பணிகளையும் ஆற்றும் பொறுப்பையும் ஏற்க வைத்தவர் நடராசபிள்ளை என்னும் ஞானகுருவேயாகும்.

உருவத்தாலும், வயதாலும் குறைந்தவருக்கு உறுதுணையாகத் தமது மூத்த சீடர்களான இளையவர் செல்லப்பா, சித்தர் (சிற்றம்பலம்) செல்வர் ஆகிய இருவரையும் செயற்படுத்துமாறும் தெரிவித்தார். ஞானபண்டிதரின் பணியை ஏற்ற அம்பலவாணர் தமக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கேட்டறிந்தார்.

அம்பலவாணர் சுவாமிகளின் அருட்பணியால் காரைக் காலில் இரண் டாவது கட்டமாகச் சித்த மருத்துவம் பிரகாசித்தது.

## 8.2 சுவாமிகளின் அறப்பணிகள்

இருள் சூழ்ந்த காரைக்கால் சிவாலயம் வளர்ச்சி பெறவும் இதனோடிணைந்த அறப்பணிகள் மேம்படவுமென்றே ஞானகுருவிடம் போதிய பயிற்சி பெற்றுத் தெளிந்தவர் சுவாமிகள். இறைவனின் நியதிப்படி பாரிய பணிகளைச் சுமக்க வந்தவரிடம் நிதிவளம் ஏதுமில்லை. இறைவனின் அருள் பெற்று அவனருளால் அவன் பணி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இறைவனின் அன்பிற்குரிய நலிவுற்றோரின் பணியை "மக்கள் சேவை மகேசன் சேவை" என உணர்ந்தார். தம்மை நாடி வருபவர்களின் உடல் உளப் பிணியகற்றி அவர்களின் இதய பூர்வமான மறுமலர்ச்சியை நோக்கினார். பொதுமக்களின் சேவையை யாவரும் போற்றினர்.

நோய் தீர்ந்து இன்ப சுகங் கண்ட பக்தர்கள் தாமாகவே முன்வந்து சிவாலயத் திருப்பணியைச் செய்ய ஆர்வமூட்டினர். தமது ஆலயப்பணிகளுக்கு மேலாக நலிவுற்றோரின் உடல் உளப் பிணிகளை அகற்றவும் அவர்கள் வாழ்வில் புத்துணர்வை ஏற்படுத்தவும் எண்ணினார். இதனால் அறப்பணியான சமூகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு காரைக்காலில் பிரதிபலித்தது. இவரின் பொதுவான பல்துறை அறப்பணிகளால் இவ்வூரவர் மட்டுமன்றி அயலூர், வெளியூர் மக்களும் இவரை நாடினர். இவரின் சமூகப் பணியான உடல் உளப் பிணியகற்றலால் பெருநன்மையடைந்தனர்.

ஒருவன் துன்ப நிலையில் இருக்கும் போது அவனின் உடல், உளத் துன்பத்தை நீக்குவது மேலான பணியாகும். அதற்கு மேலாக அவர்களின் துன்பத்தை அகற்றுவதில் சிறந்த பயனும் குறைந்த செலவும், அன்பு தழுவுதலும் கூடிய சித்தியைத் தரவல்லன. இப்பணிகளையே சுவாமிகள் தமது ஆரம்ப காலப் பணியாக ஏற்றார். எவ்விடத்திலும் மாற்றமுடியாத தீராத நோய் களைத் தீர்த்த பெருமைக்குரியவர். இறையருட் சித்தினால் அன்பு, ஆதரவு தந்த பண்பினால் துன்ப இருள் அகற்றி அறம் என்னும் ஒளியேற்றிய அறப்பணியாளர்.

சுவாமிகளின் அறப்பணி பல்துறைச் சேவைகளிலும் விரிவடைந்தது. இவரின் அருட்சித்து தொட்டதெல்லாம் துலங்கும் ஆற்றல் மிக்கது. இவரின் அருட்பணியால் சிறந்த ஆங்கில மருத்துவமனைகளின் நிபுணர்களாலும் கைவிடப்பட்ட நோய்களை யெல்லாம் அகற்ற முடிந்தது.

## 8.3 சுவாமிகளின் உடல் உளப் பிணியகற்றலும் சிகிச்சை முறைகளும்

இறைவனருளால் கல்வியறிவோ மேலும் சிந்திக்கவே முடியாது பசுவினத்தை உய்விக்கும் நற்பணி செய்த போதும் சுவாமி களினால் எதிர்காலம் பிரகாசிக்க சிறப்புடன் விளங்கவும் வேண்டிய அருள் ஞானத்தைப் புகட்டவல்ல ஞானகுரு வடிவில் வந்து ஆட்கொள்ளச் செய்தார். ஞானகுருவால் சிறுவனாயிருந்த போது தோன்றாத ஞான உணர்வு பெற்றார். சிறப்பான சிவாலயத்தைப் பராமரிக்கவும், ஆலய வளர்ச்சியுடன் ஊர் மக்களின் உடல் உளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணியகற்றவும் குருகுல முறைப்படி போதிய காலம் கற்றவர். தமது இறையருள் நியதிப்படி குருவிடம் கற்ற யாவும் காரைக்கால் மண்ணில் செயற்பட ஆயத்தமானார்.

**நாளாந்தப் பணிகள்**

ஆலய நிர்வாகப் பணியேற்றபோது ஆலய மணியகாரர் 20 வயதான சிறு பெடியன் என்பதால் இவ்வூரில் வயது வந்தோர் சுவாமிகளை "மணியப்பெடியன்" என்றே அழைத்தனர். காலங்கள் செல்ல "மணியத்தார்", "சாமியார்" எனவும் அழைத்தனர். மக்கள் அனைவரும் மிகவும் அன்பாகவும் ஆதரவாகவும் சுவாமிகளுடன் உறவாடினர். முதன் முதலில் பணி ஏற்றதும் ஆலய தரிசனத்தை மேற்கொண்டார். பெரிய சந்நியாசியாரின் பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்குமுரிய வைரவப் பெருமானையே சிக்கெனப் பிடித்துக் கொண்டார். நாளாந்தம் தம்மை நாடி வருபவர்களுக்கு உதவுவதன் பேரில் வைரவப் பெருமானின் கருவறையுட் சென்று கூடிய நேரம் தியானத்திலிருப்பார்.

வெளியே வந்ததும் தம்மை நாடி வந்தவர்களுக்கு வரிசைக் கிரமமாக திருநீறிட்டு மணிமந்திரமோதியும் அவர்கள் கூறும் பிணிகளைக் கேட்டறிவார். தமது திருவாக்காக உரிய பதில்களைக் கூறுவார். நீடிய காலப் பிணியாளர்களுக்கு மேலதிகமாக மூலிகை மருந்துகளை வழங்குவார். சுவாமிகளின் திருநீற்றினால் பெரும்பாலானவர்களின் உடல் உளப்பிணிகள் மறைந்து விடும். மருந்து தேவையானவர்களுக்கு மட்டும் திருநீறிடும் பணி நிறைவு கண்டதும் தமது மருத்துவப் பகுதியை நாடி வேண்டிய மருந்து களை வழங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தமருத்துவமும் இதர சிகிச்சைகளும்

சுவாமிகள் சித்த மருத்துவத்தைத் துறைபோகக் கற்றவர். தமது பணியாளர்கள் மூலம் வேண்டிய மூலிகையின் இலை, குழை, பூ, காய், பட்டை, வேர் போன்றவற்றைச் செலவின்றியே பெற்றுக் கொள்வார். நோயாளிகளின் உறவினரும் குறிப்பிட்ட மூலிகை களைத் தாமும் எடுத்து வந்து கொடுப்பர். மேலும் தேவைப்படும் மருந்துச் சரக்குகளை மருந்துக்கடைகளில் வாங்கி வருவார். குறிப்பிட்ட நோய்களின் மருந்துகளுக்கான மூலிகைகள் மற்றும் சரக்குச் சாமான்களை ஏற்கெனவே வெய்யிலில் காய வைத்துக் கொள்வார். இவை யாவற்றையும் பணியாட்கள் மூலம் கருங்கல் உரலிலிட்டு இரும்பு உலக்கையால் நொருங்க இடித்து மாவாக்கி அத்துடன் வேறு பொருட்களையும் சேர்த்துப் பதமாக்கிப் பல்வேறு மருந்துகளாகப் பெற்றுக்கொள்வார். மூலிகை மருந்துப் பொருட் களை இடிக்கவும் வில்லைகளாகவும் தூளாகவும் வெவ்வேறு விதமாகப் பதப்படுத்தவும் இதற்கெனக் கைதேர்ந்த தொழிலாளர் கள் கடமையிலீடுபடுவர்.

## மருத்தெண்ணெய் தயாரித்தல்

சித்த மருத்துவத்தின் சிறப்பில் உட்கொள்ளும் மருந்தும் தலைக்கு வைக்கும் மருத்தெண்ணெய்யும் முக்கியமானவை. மேற்குறிப் பிட்டபடி மருந்துகளை வேறு பணியாட்கள் மேற்கொள்வர். வெவ்வேறு வித நோயாளர்களுக்குமுரிய வெவ்வேறு கலவைகள் சேர்த்து எண்ணெய்கள் தயாரிக்கப்படும். மூலப்பொருளான நல்லெண்ணையுடன் உரிய மருந்துச் சரக்குகளையும் சேர்த்து பெரிய மண்பானையில் விட்டு பானையின் மேல் அளவான சட்டியால் மூடிவிடுவர். எண்ணெய் காய்ச்சும் போது ஆவி வெளியேறா வண்ணம் மண் களியால் பூசிக் காப்பிடுவர். குறித்த நேரம் வரை பணியாளர் எரித்துக் கொண்டே இருப்பார். உரிய நேரம் வந்ததும் பதமான எண்ணெயின் மணம் வீசும். உடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை எடுத்து உரிய முறைப்படி பயன்படுத்துவர். இவ்வாறு எண்ணெய் காய்ச்சுவதே சித்த மருத்துவத்தின் இரகசியமாகும். இச்சகல பணிகளையும் சுவாமிகள் நேரடியாகக் கவனித்து அடுப்பிலிருந்து இறக்கிய எண்ணெயை உரிய நேரத்தில் வழங்குவார்.

சுவாமிகள் தமது அருள்ஞானம், கற்ற கல்வி ஞானம் மற்றும் அனுபவத்தால் மேற்கூறிய மருந்து எண்ணெய் வகைகளை வழங்கியே தீராத நோய்களையும் தீர்த்தார். தமது பணியில் 1940 முதல் 1978 வரை காரைக்காலில் சித்த மருத்துவத்தின் பெருமையை நிலைநாட்டினார். சுவாமிகள் திருமந்திரமோதி திருவாக்குரைத்தும் சித்தமருத்துவ முறையையும் சிறப்புடன் செய்து காரைக்காலில் நிலைநாட்டியதால் இம்மண்ணில் பிற மாவட்டங்களிலிருந்தும் பலர் வந்து பயனடைந்தனர்.

## சிரட்டைத் தைலம்

சுவாமிகள் தாம் கற்ற சித்த மருத்துவத்தில் சிரட்டைத் தைலம் என்னும் ஓர் அரிய எண்ணெயைத் தயாரித்தார். மக்களிடையே ஏற்படும் நோவின் வலியால் ஏற்படும் வீக்கம் நோயினால் ஏற்படும் உபாதைகளைப் போக்கவல்லது சிரட்டைத் தைலம். எம்மக்கள் சிறப்பான கடின வேலைகளைச் செய்யும் போது ஆயுதங்களால் ஏற்படும் வலிகள், அடிபட்ட காய நோய்களாற் பாதிக்கப்பட்டோர் சுவாமிகளிடம் வந்து காண்பிப்பர். அவர் அதற்கெனத் தயாரித்த சிரட்டைத் தைலத்தை வழங்குவார். அதனை இருமுறை பூசியதும் யாவும் குணமடையும். இவ்வாறு வலி காண்போர் தம்மாலான பணத்தைக் கொடுத்தே சிரட்டைத் தைலத்தை வாங்குவர். உரிய தேவை முடிந்ததும் மிகுதியைக் கவனமாகப் பேணியும் வேண்டிய உறவினருக்கு வழங்கியும் பயனடைந்தனர். சுவாமிகளின் சிரட்டைத்தைலம் எம்மவருக்கு அதிகூடிய அருமருந்தாக உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் சமாதியடைந்த நாற்பது வருடங்கள் கடந்தும் அவரால் வழங்கப்பெற்ற சிரட்டைத் தைலம் இன்று இல்லா விட்டாலும் சுவாமிகளின் அற்புதமான மருந்தின் பெறுமதியை இன்றும் எம்மவர் நினைவுக்கூருவர். யாவும் இறையருளின் கொடையாகும்.

## விஷகடி வைத்தியம்

சிவனாரின் அணிகலனான பாம்பினங்கள் பலவுள. இவற்றுள் பல விஷப் பாம்புகள் மற்றும் தேள் போன்ற பல விஷப்பூச்சிகள் ஊர்வன மக்களைத் துன்புறுத்தின. பாம்புகளில் சாரை போன்ற நல்ல பாம்புகளுமுண்டு. ஏனையவை மனிதர் முதலான உயிரினங்களைத் தீண்டி மரணம் முதலான கஷ்டங் களையும் தரவல்லன. சுவாமிகளின் அருட்சித்தும் ஞானகுருவின் உபதேச மும் நல்லதாக இருந்ததால் யாவற்றையும் சித்தி பெறச் செய்தார். விஷப் பாம்புகளாற் தீண்டப்பட்ட ஒருவர் தம்மை நாடுமிடத்து வேப்பிலை கொண்டும் திருநீறிட்டும் ஆரம்ப சிகிச்சை தருவார். சற்றுக் கூடுதலாக இருந்தால் வைரவர் சந்நிதி வாசலில் வானத்தை நோக்கி நோயாளிகளைப் படுக்க வைக்கச் செய்வார்.

கருடனை நோக்கி மந்திரம் கூறவும் கருடன் நோயாளியின் மேலாக வானத்திற் பறந்து மும்முறை வலம் வந்து கூச்சலிட்டுச் செல்லும். அச்சமயம் கருடனின் நிழலும் அதன் உடற்காற்றும் நோயாளியின் மீது பட்டதும் பாம்பின் விடம் கலைந்துவிடும். பின்னர் பாம்பின் கடிவாயிலிலும் சூழவும் உரிய மருந்தைப் பூசியும் குடிக்கவும் மருந்து கொடுப்பார். ஒரு சில நாட்களுள் யாவும் சுகமாகும்.

சுவாமிகள் மந்திர மூலம் கருடனை அழைத்து விஷம் கலையச் செய்யும் நன்றிக் கடனையும் செய்வார். உரிய காலத்தில் குறிப்பிட்ட நோயாளியை அல்லது நெருங்கிய உறவினரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் சென்று கீரிமலைக் கடலில் வாயூறு (கழுத்து மறைந்து வாயளவு) தண்ணீரில் நின்று கருடனுக்குரிய ஆகுதிப் பொருட்களைப் பெரிய தட்டத்தில் வைத்துத் தலைக்கு மேலே உயரப் பிடித்த வண்ணம் கருடனை மந்திரத்தால் அழைத்தால் உரிய கருடன் தனது ஆகுதியை எடுத்துக் கொண்டு தனது ஆசீர்வாதமாக உரத்துக் கத்திவிட்டுச் செல்லும். இதுவும் சித்து மார்க்கத்தின் ஒரு படியாகும்.

இதே போல ஏனைய பூரான், தேள் போன்றவை கடித்தாலும் அதற்கேற்ப மருந்துகள் வழங்குவதுடன் கொடிக் கள்ளிச் சாற்றுடன் கலந்து குடிக்கும் மருந்தை வழங்குவார். இந்த மருந்துடன் சகல விஷக்கிருமிகளும் அற்றுவிடும்.

## நாய்கடி மருத்துவம்

கட்டாக்காலி நாய்களால் ஏனைய பிராணிகளுடன் மனிதரும் கடியுண்பதை அறிவோம். இவ்வாறு கடியுண்டோரின் வேண்டு தலுக்காக சித்த மருத்துவ மூலிகைகளால் குணமடையச் செய்தார். ஆனால் நாய்க் கடிக்காக இன்றைய மருத்துவமனைகளுக்குச் சென்றால் முதலில் ஊசி மருந்தையே பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பலமுறை வேதனைப்படும் நிலை அன்று சுவாமிகளின் காலத்தில் செலவேதுமின்றிச் சுகமடைய முடிந்தது.

## மனநோய்

சுவாமிகள் தமது ஞானகுருவிடம் கற்ற சிறப்பினால் உரிய நோயாளிகளைப் பொறுப்பேற்றுத் தமது ஆலய வளாகத்தில் தங்க வைத்து வைத்தியஞ் செய்வார். சில நோயாளிகளின் நோயின் வேகத்தால் பிறருக்கு உடல் தீண்டித் தீங்கிழைப்பர். மனநோயாளி களுக்கென்று இருவகை துலங்குகள் (கை, கால்களை அசைக்க முடியாது பூட்டப்பட்ட மரத்தளபாடம்) வைத்திருந்தார். (கையால்) கைவிசை காட்டுவோரின் இரு கைகளையும் நீடிய மரக்குற்றியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவைக்கும் துளை இடப்பட்ட இரு பகுதிகளை இணைத்துக் கைகளை அதனுள் விட்டுப் பூட்டிவிடுவார். அந்நோயாளியால் கைத்துலங்கைத் தூக்க முடியாது. நாளடைவில் நோயின் வீச்சுத் தணியும். பின்னர் துலங்கின் பாவனை ஏற்படாது.

**கால்த்துலங்கு**

நோய் கூடிய மன நோயாளி ஓடி உலாவிப் பலருக்கும் தீங்கிழைப்பார். இவரின் இரு கால்களையும் உள்ளே விட்டு இரு பகுதி களையும் இணைத்துப் பூட்டினால் அவரின் நோய் செயலிழந்து விடும். மேலும் மனநோயாளிக்கு நையம் என்னும் ஒருவகைப் புகையை உறிஞ்சச் செய்ததும் உரிய நோயின் ஊக்குவிக்கும் புலன் மங்கிவிடும். இவ்வாறு பற்பல விதிமுறைகளாலும் சித்த மருத்துவத்தைப் பிரபலமடையச் செய்தார்.

அம்பலவாணர் சுவாமிகளின் உடல் உளச் சிகிச்சை முறை திருநீறிட்டு மணிமந்திரம் ஓதித் திருவாக்குரைத்தலில் கூடுதலான பகுதிப் பிணிகள் அகன்று விடும். ஏனையவை "மருந்து கால் மதி முக்கால்" என்ற முதுமொழிக்கமைய சித்த மருத்துவத்துடனும் அதனை உபயோகிக்கும் முறையிலும் தங்கியுள்ளது. ஒரு நோய்க்கு உண்ணும் உணவு முறை பத்தியம் எனப்படும். நோய்க்கு விரோதமான உணவுப் பட்டியலைக்கூறி இதனை அறவே நீக்கச் சொல்வார். நீக்கச் சொல்லும் உணவு நோய்க்கு விரோதமானது. தவிர்த்தால் நன்மையுண்டு. மேலும் தலைக்கு வைக்கும் எண்ணெய், குளிப்பு முறையையும் கண்டிப்புடன் கூறுவார். நோயாளிகள் சுவாமிகளின் கூற்றுக்கு மாறாகச் செயற்பட்டால் நோய் தீவிரமடையும்.

சில நோயாளிகள் தமது வசதி போல விதிமுறைகளை மீறாது விடவும் தூர இடங்களிலிருந்து வருவோரின் நன்மைக்காக இவ்வாலய வளாகத்தின் வடக்கு மற்றும் கிழக்கிலும் சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசைகள் அமைத்தும் வழங்கியிருந்தார். சில நோயாளிகள் மாதக்கணக்கில் இங்கு தங்கியே நோய்களைக் குணப்படுத்திச் சென்றனர். சுவாமிகள் இவ்வாறு தங்கும் வசதிகளற்றவர்களுக்குத் தம்மாலான பிற உதவிகளையும் செய்து கொடுத்தார்.

## மருந்து விநியோகம்

ஆதியில் இறைவன் சித்த மருத்துவத்தை அறிமுகஞ் செய்தபோது குறைந்த செலவில் சித்த மருத்துவஞ் செய்து மக்களுக்கு உதவவென்றே ஓதினார். இதனால் நன்கு கற்றறிந்த சித்தர்கள் அருளாளர்களும் நோயாளிகளிடம் செலவாக ஏதும் வாங்காமலே செயற்பட்டனர். நோயாளிகள் தாமாகவே முன்வந்து தம்மா லானதை வைத்தியர் முன் வைத்தால் ஏற்பார். இந்த மரபு நெடுங்காலம் நீடித்தது. இதற்கமைவாகவே வைத்திய பூபதி நடராசபிள்ளையிடம் கற்றதற்கமையவும் தமது அருட்பணியை மேம்படுத்தவும் சுவாமிகள் மிகச்செலவு கூடிய மருந்துகளை வழங்கினாலும் கிரயமாக ஏதும் தருமாறு கேட்பதில்லை. நோயின் தாக்கத்தையும் அந்த நோய் குணமடையும் வேகத்தையும் உணர்வோர் தாமாக உதவி வந்தனர். இவ்வாறு சுகமடைந்த பலர் பிற்காலத்தில் சுவாமிகளின் ஆலயத் திருப்பணிக்கு உதவியதைப் பின்னர் அறிவோம்.

இவ்வாறு நாளாந்தம் நோய்க்கு மருந்து வழங்கும்போது கிடைக்கும் நிதியில் மருந்துச் சரக்குகள் வாங்கியும், மருந்து தயாரிக்கும் பணியாளருக்கான ஊதியம் வழங்கியும் மருத்துவப் பணியில் அறம் வளர்த்தார். நோய் தீர்க்கும் பணியை அறப் பணியாக ஏற்றதால் இதிலிருந்து கிடைக்கும் நிதி எதிலும் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்த மாட்டார். இவர் தமது வாழ்வாதாரத் திற்காக விவசாயம், கால்நடை வளர்ப்பில் இணைந்ததைப் பின்னர் அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருக வைத்தியம்

கால்நடைகள் மற்றும் வளர்ப்பு பிராணிகள் ஒவ்வாத காலநிலை, உணவுகளின் வேற்றுமை போன்ற சீர்கேடுகளால் நோய்வாய்ப் படுவது இயல்பு. இவ்வாறான மிருகங்களுக்கும் உரிய மருந்து களை வழங்குவதுடன் திருநீறிட்டுக் குணப்படுத்துவதில் அம்பலவாணர் சுவாமிகளின் மகிமை பிரகாசித்தது.

ஒரு சமயம் ஏழை விவசாயி ஒருவரின் நல்லின ஆட்டுக் குட்டிக்கு பிறந்த மூன்றாம் நாள் அதன் தொப்புளில் ஒரு அங்குல ஆழமான துவாரம் இருந்தது. ஆட்டுக்குட்டி வேதனையால் மயங்கியது. சுவாமிகள் அதனை நோக்கியதும் காயத்தின் பின் புறமாக முதுகில் தட்டினார். இரு பெரிய புழுக்கள் கீழே விழுந்தன.

இதன் உண்மையை அறிந்தபோது ஆட்டுக்குட்டியின் தொப்புள் கொடி விழமுன் காகம் கொத்தியதால் புண் ஏற்பட்டதும் புழுக்கள் உற்பத்தியானது. சுவாமிகள் உடனடியாக ஒரு காரமருந்து பூசிய சீலையால் புண்ணைச் சுத்தம் செய்தார். வேறொரு மருந்தையும் விட்டுப் புண்ணின் வாசலை மூடிக்கட்டி விட்டார். இத்துடன் யாவும் சுகமாகும். இனி மருந்து தேவை யில்லையென அனுப்பினார். கிரயம் எதுவும் வாங்கவில்லை. விவசாயி வீட்டில் குட்டியை நன்கு பாதுகாப்பாக வைத்திருந்தார்.

மூன்றாம் நாள் புண் மாறியதும் குட்டி துள்ளிக்குதித்தது. விவசாயி மகிழ்ச்சியுடன் அதனை எடுத்து வந்து சுவாமிகளின் முன் விட்டார். குட்டி துள்ளிக் குதித்து ஓடித் திரிந்த காட்சியைக் கண்ட யாவரும் வியந்தனர். இவ்வாறு பொறுமையுடன் சுவாமிகள் செய்யும் மருத்துவப்பணி யாவராலும் போற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு, கிணறு போன்றவற்றின் நிலையம் எடுத்தல்

சுவாமிகள் சித்தர்களின் மரபுப்பணியாகத் தொட்டதெல்லாம் துலங்கும் அருள் பெற்றவர். தம்மை நாடி வரும் அன்பர்களின் கிணறுகளுக்கும் வீடுகளுக்கும் நிலையம் எடுத்தால் யாவும் பிரகாசிக்கும். ஒருவரின் அழைப்பின் பேரில் வெற்றுக் காணியில் நடமாடுவதுடன் அக்காணியின் பரப்பளவுக்கேற்ப மேலும் வீடுகள் அமைவதன் எதிர்கால நோக்கில் வீடுகள் அமையும் இடத்துக்குப் பொருத்தமான இடத்தை நோக்கி உலா வருவார். ஒரு இடத்தில் நின்றவாறு அவ்விடத்தில் வாழ்வுள்ள ஒரு பெண்ணை மண் வெட்டியால் ஒரு பொளி வெட்டச் சொல்வார். இவ்விடமே கிணற்று நிலையமாகும். சுவாமிகள் இறையருளின் சித்தப்படியே அவ்விடத்தைத் தேர்வு செய்வார். அக்கிணறு குறுகிய காலத்தில் தண்ணீர் தென்படும் சிறப்புடையது. என்றும் வற்றாத கிணறாக அமையும்.

இதே போல வீடுகளுக்கு நிலையமெடுக்கும்போது குறிப்பிட்ட இடத்தில் உலாவுவார். வீடு கட்டுவிப்பவரின் வீட்டு வசதியை முன்னரே அறிந்து கொள்வதால் குறிப்பிட்ட வீடு எதிர்காலத்தில் வாஸ்து சாத்திரப்படி குறைகுற்றமில்லாதபடி நிலையத்தைக் குறிப்பார். வீட்டின் சகல பகுதிகளும் அமைய வேண்டிய அளவுகளைக் கூறி வீடு பூர்த்தியாகும் கால எல்லை யையும் தமது சித்து ஞானத்தாற் சொல்லுவார். அவர் குறிப்பிடும் காலத்திற்கு முன்பே வீடு பூர்த்தியாகிவிடும். அவர் அன்று நிலையமெடுத்த சகல வீடுகளும் இன்று சகல செல்வங்களுடன் சிறப்பாக அமைந்துள்ளன.

சுவாமிகளிடம் ஏதாவது நற்காரியம் கேட்டால் நடந்து கொண்டே பதிலளிப்பார். ஒரு சமயம் அன்பரொருவர் பசு மாடு கட்டும் நிலமெடுப்பதாக இருந்தார். ஏதுமறியாத சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பரை அழைத்தார். அவர் வந்ததும் நடந்து கொண்டே "பட்டி கிழக்கும் பட்டடை மேற்கும்" என்று கூறியபடியே சென்று விட்டார். இக்கூற்றினைச் சுவாமிகளின் தொண்டரிடம் கேட்டபோது பசுமாடு கள் கட்டும் இடம் (பட்டி) வீட்டின் கிழக்கிலும் வைக்கோல் பட்டடை வீட்டின் மேற்கிலும் அமைய வேண்டும் என்ற விதியுண்டு என்றார். அன்பர் கேளாமலேயே குறிப்பிட்ட சுவாமிகளின் சித்து மகிமையை எண்ணி இறையருளை வியந்தார்.

## மாந்திரிகமும் பில்லி சூனியம் அகற்றலும்

மாந்திரிகம் என்பது உரிய மந்திரங்களை உச்சரித்துத் தேவதை களை வசமாக்கி அதன் மூலம் நல்லதும் கெட்டதுமான பல கருமங்களை ஆற்றுவதாகும். தமது கருமங்களை இலகுவில் முடிப்பதன் பேரில் தேவதைகளுக்கு வேண்டிய ஆகுதி கொடுத்துத் திருப்திப்படுத்துவர். இச்செயல்கள் மூலம் சிறப்பான மந்திரவாதி பெருநன்மையடைவார்.

இந்த மாந்திரிகத்தை யாவரும் கற்றறிய வேண்டியதால் அம்பலவாணர் சுவாமிகளும் இதனை நன்கு கற்றறிந்தவர். பதினெண் சித்தர்களின் மரபுப்படி மாந்திரிகத்தை நன்கு கற்றாலும் மக்களுக்கு உதவக்கூடிய நற்காரியங்களுக்கு மட்டும் உபயோ கிக்கும் பண்பு இருந்தது. அதே போலச் சுவாமிகள் கற்ற கல்வி பலருக்கு நற்பயன் தந்தது.

ஒரு சில மந்திரவாதிகள் கெடுமதியாளரின் விருப்பத்திற் கேற்ப அவரின் விரோதிகளுக்கு மாந்திரிக மூலம் பில்லி சூனியஞ் செய்து அதிக பொருளீட்டினர். இதனால் பாதிக்கப்படுபவர் மாறாத நோய், பல்வேறு தடைகள், பொருட்கள், சொத்துக்கள் சேதம், மரணம் போன்ற பல கெடுதிகளைச் சந்திக்க நேரிடும். இவ்வாறு விரோதிகளால் பில்லிசூனியம் வைக்கப்பெற்ற அப்பாவிகள் சுவாமிகளை நாடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வருபவர்களுக்காகச் சுவாமிகள் யோக நிலையிலிருந்து இதனைக் கண்டறிவார். முதலில் திருநீறிட்டு, மணி மந்திரமோதி வாக்குரைக்கும் போது குறித்த தேவைகளுக்கான ஆகுதி வழங்கி யாகஞ் செய்து மடைபரவி அதன் மூலம் கழிப்புக் கழிக்க வேண்டிய ஒழுங்குகளை ஏற்பாடு செய்யுமாறு கூறுவார். பாதிக்கப்பட்டவர் சுவாமிகளின் கோரிக்கைப்படி நிறைவு செய்வர். உரியவரின் வீட்டையோ, விவசாயக் காணியையோ, தொழில் நிறுவனத்தையோ நாடி குறிப்பிட்ட இடத்தில் புதைக்கப் பட்டிருக்கும் கெட்ட பொருட்களை அகற்றித் தீயிட்டு அழிப்பார். மேலும் பாதிக்கப்பட்ட இடத்தில் பெரிய யாகம் செய்து அதற்கான பிராயச்சித்தமாக குறிப்பிட்ட இடத்தின் காவலுக்காகச் சங்கினுள் தெய்வீகப் பொருட்களை வைத்துப் புதைத்து விடுவார். இத்தூய பணியால், பாதிக்கப்பட்டவர் மீட்சி பெறுவார். அவருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் காப்புநூல் கட்டிப் பாதுகாவல் செய்ததும் யாவும் அகன்றுவிடும். இதனால் பாதிக்கப்பட்டவர் தமது குல தெய்வங்களுக்கு பூசை வழிபாடுகள் செய்து இடர்களிலிருந்து நீங்கி இன்பசுகம் பெறுவர். இதே சமயம் கெடுதி செய்யவெனத் தேவதையை ஏவிவிட்டவரைத் தேவதை தொந்தரவு செய்யும். அஞ்சியவர் தமது தவறை நீக்கி மன்னிக்குமாறு சுவாமிகளிடம் வந்து மண்டியிட்டு வணங்கித் தமது தவறை எதிர்காலத்தில் எவர் மீதும் செய்வதில்லையென வாக்குறுதி அளித்தே செல்வார். இதனால் பிற்காலத்தில் பில்லிசூனியத்தின் பாதிப்பு நலிவடைந்தது.

## பேய், பிசாசுகளால் பீடிக்கப்பட்டோரைக் குணப்படுத்துதல்

அம்பலவாணர் சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் திடீர் மரணத்தினால் சிதறிய ஆன்மாக்கள் பேயுருவில் மாறி மக்களை வருத்தும் தன்மையால் பாதிக்கப்பட்டோர் சுவாமிகளை நாடுவர். சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டோருக்காக யோகநிலையிலிருந்து வருத்தும் பேய் களைக் கண்டறிந்து அதனை அகற்ற முன் வருவார். அதற்காக வேண்டிய ஆகுதிகள், கழிப்பிற்கான மடைப்பொருட்கள் யாவற்றை யும் முதலில் சேகரிக்கச் சொல்வார். விசேடமாக பேயகற்றும் நாட்களாக செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இரவு எட்டு மணியின் பின்பே (சிறுவர்கள், நலிவுற்றோர் இதனைக் கண்டஞ்சுவ ராதலால் அவர்கள் உறங்கிய பின்) இப்பணியைத் தொடங்குவார்.

அன்றைய தினம் வைரவர் சந்நிதியின் முன்னால் காய்மடை, பூமடை பல்லின மரக்கறி வகைகள், குறிப்பாக நீற்றுப் பூசணிக்காய், காய் வாழைக்குலை, பல்வகைப் பூக்கள், குறிப் பாகத் தென்னம்பூ, கமுகம்பூ உட்பட யாவற்றையும் பரவி வைப்பார். இவ்வேளையில் உடுக்கு வாத்தியத்துடன் பாடல்கள் ஒருபுறம், பறை மேளம் ஒரு புறம் இசைக்கப்படும். பாதிக்கப் பட்டவரைப் பரவிய மடைப்பொருட்களுக்கு நடுவில் இருத்தியதும் சாம்பிராணிப்புகை கற்பூரத்தீபம் ஏற்றியதும் கற்பூரம், சாம்பிராணி யின் தெய்வீக மணமும் மேளங்களின் ஒலியும் ஓங்கத் தொற்றிய பேய்கள் தமது செயலைக் காண்பிக்கும். இருந்த நிலையில் ஆடியும் தனது தேவை குறித்தும் உரக்கக் கூச்சலிடும். இதே சமயம் சுவாமிகள் மந்திரம் ஓதிப் பிரம்பால் பாதிக்கப்பட்டவருக்கு ஓங்கி அடிப்பார். அச்சமயம் தமது தேவையைக் கேட்கும் போது காய்மடை, பூமடைப் பொருட்களை வாளினால் வெட்டிச் சிதறடித்து நாற்றிசையும் வீசுவார். அச்சமயம் அப்பேய் தான் பிடித்தவரிட மிருந்து அகன்று செல்வதாகவும் உறையுமிடம் வேண்டுமெனக் கேட்கும். சுவாமிகள் இவரைப் பிரம்பினால் அடித்துச் சுடலைக்குத் துரத்தி விடுவார். ஓடிச்சென்று உரியவரை விட்டகன்றதும் உரியவர் மயங்கி வீழ்ந்திடுவர். அவரின் உறவினர் மூலம் அவருக்கு நீராட்டிப் புத்தாடை உடுத்தி விடுவர். சுவாமிகள் அவரை வைரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு அழைத்துச் சென்று திருநீறிட்டு மணிமந்திரமோதிக் காப்புநூலும் கட்டி விடுவார். இதன் பின் அவருக்கு எதுவித கெடுதியும் நேர்வதில்லை.

அம்பலவாணர் சுவாமிகள் தமது இறுதிக்காலம் வரை பல நூற்றுக்கணக்கான பேய்களை விரட்டி அகற்றியும் பில்லிசூனியங் களை நிர்மூலஞ் செய்தும் எம்மக்களுக்குப் பாதுகாப்பளித்தார். இதனால் யாவரும் எதுவித கெடுதியுமின்றி நலமுடன் வாழ்ந்தனர்.

இன்றைய நவீன உலகில் விஞ்ஞானத்தினால் பண்டைய செயற்பாடுகள், வழிமுறைகளை ஏற்காத அஞ்ஞானிகள் அன்று சுவாமிகள் பேய்களை விரட்டினார்; அவர் சமாதியடைந்த பின் எவரும் விரட்டுவாரில்லை; அக்காலத்துப் பேய்கள் எங்கே எனக் கேட்கலாம்.

நாம் உண்மையை உணர வேண்டும். அன்று சுவாமிகள் போன்ற மகான்களின் சொற்கேட்டுப் பணிந்த மக்கள் சேமமாக வாழ்ந்தனர். ஆனால் இன்று சுவாமிகள் போன்ற அருளாளர்கள் அன்றி அறிவால் முதிர்ந்த பெரியார்களின் சொற்கேளாது தீயவழியை நாடிப் போலிச்சுகத்தை அனுபவிக்க விரும்பும் ஒரு சில சமுதாயத்தினரின் செயலை அறிவோம்.

நற்கல்வியைப் பெறாது அடுத்தவரின் சொத்தில் போதை தரும் பொருட் பாவனைக்காக பஞ்சமாபாதகத்தை ஆவலுடன் நுகர்வோர் மேலாளர் எவரதும் சொற்படி நடவாது கத்தி, வாள், கோடரி, கொட்டன் தடிகளுடன் திரியும் திருவிளையாடல்கள் நாடு முழுவதும் மலிந்துள்ளன. அன்றைய பேய்கள் இன்று பஞ்சமா பாதகங்களிடையே தஞ்சமடைந்து பல வன்செயல்களிலும் அலை வதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்காலத்தில் பில்லிசூனியம் செய்து பேயை ஏவிவிட அது எதிரில் தென்படுபவரை அடித்துக் கொன்றுவிடும். அந்த மரபு இன்று மாறிவிட்டது. நெடுஞ்சாலைகள், சிறிய தெருக்கள், சிறு ஒழுங்கைகளிலெல்லாம் இன்று பல்லாயிரக்கணக்கான பலரக வாகனங்கள் பேய் வடிவில் உலாவருகின்றன. அதன் சாரதிகள் இன்று பேயடிக்கும் வேகத்திற் சென்று எதிரில் வரும் மக்களுடன் வாகனங்களையும் அடித்துக் கொல்வதை அறியலாம். இதுவும் பேய்க்கோலத்தின் வெளிப்பாடாகும். எங்கு அன்பும் அமைதியும் அடுத்தவரின் சொத்தைத் தீண்டாத பண்பும் நிலைபெறுகிறதோ அதுவே ஒரு நாட்டின் பேறாக அமையும். நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்கும். இந்த கலியுகத்தில் இன்றைய பேய்க் கோலங்களும், வன்செயலுமற்ற தெய்வீகப் பூமியாக இணுவில் திருவூர் பிரகாசிக்கின்றது.

இறையருள் சித்தர்கள், அருளாளர்களின் ஆசியினால் இம்மண்ணில் எல்லா வீடுகளிலும் நிறைவான வாழ்வாதார வசதிகளும் நிறைவான பல் வளங்களும் அனைத்து இல்லங் களிலும் பெற்றோரின் ஆர்வத்தினால் நற்கல்விப்பயிர் செழிப்புடன் வளர்கின்றது. வேறெங்கும் காணமுடியாதவாறு கல்வியால் உயர்ந்த ஆசிரிய சமூகத்துடன் பல பட்டம் பதவிகள் பெற்ற அரச, அரச சார்பற்ற பணியாளர்கள் இத்திருவூரில் மலிந்துள்ளனர். அன்று விவசாயப் பணியுடன் மந்தை மேய்த்து ஞான உணர்வு பெற்றுப் பல அற்புதங்கள் செய்து உலக சாதனையாக உலகப் பெருமஞ்சம் அமைத்த பெரிய சந்நியாசியாரின் சித்து மகிமையும் அவரின் அருளாசியும் வழிநடத்துகிறது.

சித்தரான பெரிய சந்நியாசியாரின் மரபில் அவதரித்த காரைக்கால் அம்பலவாண சுவாமிகளும் பெரிய சந்நியாசியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுமாறு இறையருள் பாலித்தது. பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நியாசியார் தொட்ட பணியான மந்தை மேய்த்தலில் இருந்து அவரின் போக்கில் வாழ்ந்து சகல பணிகளிலும் சித்தர் மரபைத் துலக்கிய காரைக்கால் சுவாமிகள் இன்று யாவராலும் போற்றப் படுகிறார்.

## 9. சுவாமிகளின் ஆரம்பகால ஆலயப்பணி

இறைவனின் நியதிப்படி காரைக்கால் சிவாலயத்தின் நிர்வாகப் பொறுப்பேற்று அதனோடிணைந்த அறப்பணிகளை வளர்க்க வென்றே அவதரித்தவர் அம்பலவாணர் சுவாமிகள். 15 வயதில் ஞானகுருவிடம் சகல கல்வி கலைகளையும் கற்றுத் தெளிந்து தம் பணியை நாடித் தமது 20ஆம் வயதில் (1940) சிவாலயத்தில் காலடி வைத்தவர்.

குருவான நடராசபிள்ளை காரைக்கால் பதியிலுறைந்த வைரவரின் ஆசீர்வாதத்தை உணர்த்தியதால் முதலில் சிவாலய தரிசனம் முடிந்ததும் வைரவர் சந்நிதியில் மனம் ஒன்றிவிட்டார். அம்பலவாணர் சுவாமிகள் எப்பணியாற்றிலும் முதலில் வைரவரின் சந்நிதியுட் சென்று தியானித்து ஆசீர்வாதம் பெற்றே அன்றாடப் பணிகளைத் தொடர்ந்தார்.

ஆரம்பகாலத்தில் பெரிய சந்நியாசியார் ஆற்றிய பணி களை நோக்கினார். அவர் தொட்டுவளர்த்த ஆலயப்பணிகள், அறப்பணிகள் யாவற்றையும் உணர்ந்தார். ஏற்கனவே ஞான குருவிடம் கற்ற பாடத்தையும் பெரிய சந்நியாசியார் ஆற்றிய பணிகளையும் ஒப்புநோக்கியவருக்கு யாவும் சிவமயமாகவே அமைந்தன. ஆலயப்பணியில் அவசிய திருத்தங்களைச் செய்தார். தொண்டர்களும் பொது மக்களும் கைகொடுத்தனர். சைவாகம ஒழுங்கில் யாவற்றையும் திருத்தியும் புதுப்பித்தும் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரமாகப் பூசைசெய்வதன் பேரில் சிறந்த சிவபக்தரும் ஆசாரசீலரும் பூசைக்கருமங்களைச் சிறப்புடனும் பக்தியுடனும் செய்யவல்லவரும் வீரசைவர் குலத்தவருமான த.சின்னத்துரை அவர்களை நியமனஞ் செய்தார். அவரின் பூசை ஒழுங்குகளுக்காகத் தேவையான ஆயுததளபாடங்களை வழங்கினார். தினமும் மூன்று நேரம் (காலை 7 மணி, மதியம் 12 மணி, மாலை 7 மணி) பூசைகள் கிரமமாகச் செய்யவகை செய்தார். வழிபடுவோர் கூடுதலாக வந்து தரிசித்தனர். பெரியசந்நியாசியாரால் நிறுவப்பட்ட அத்தனை பணிகளையும் நன்கு பராமரித்து ஆலய வளர்ச்சியை மேம்படுத்தினார்.

## 10. சுவாமிகளின் வாழ்வாதாரமும் பணிகளும்

ஆலயப் பொறுப்பேற்று அருட்பணியாற்றவெனக் காரைக் காலை நாடிய அம்பலவாணர் சுவாமிகள் (1940) இருபது வயது வாலிபர். குருவின் அறிவூட்டலில் ஆலயச் சொத்தைத் தீண்டாது பணி யாற்றவும் சித்த மருத்துவத்திற்கெனக் கிரயம் கோராது சேவையாற்றவும் சித்தங்கொண்டவர். தமது வாழ்வாதாரத்திற்கென விவசாயஞ் செய்யவும் கால்நடைகளை வளர்க்கவும் முற்பட்டார். இணுவில் கந்தசுவாமி கோயிலுக்குச் சொந்தமான தோட்டக்காணியில் விவசாயஞ் செய்யவும் ஆலய வளாகத்தில் கால்நடைகளை வளர்க்கும் பணியையும் ஏற்றார்.

அதிகாலையில் எழுந்து ஆசாரசீலராக ஆலயதரிசனஞ் செய்வார். பின்னர் தமது கால்நடைகளுக்குத் தீனிபோடுவார். தோட்டத்திற்குச் செல்வார். கடினவேலைகளைக் கூலியாட்கள் மூலம் செய்விப்பார். பயிர்களுக்கு நீர்பாய்ச்சவென மாடுகளால் இயக்கப்படும் மாட்டுச்சூத்திரத்தை அமைத்தார். தமது பட்டியில் நிற்கும் எருதுகளை நீர்ப்பாய்ச்சலுக்கு உபயோகிப்பார். மாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குத் தீனி போடும் தேவைக்காகப் பனை ஓலைகளை வெட்டிச் சென்று அதனைப் பயன்படுத்தி தேவைக்கேற்ப வழங்குவார். ஓலைகளை ஏற்றவும் வீட்டிலுள்ள மாடுகளின் எருவைத் தோட்டத்திற் சேர்க்கவும் விளைபொருட்களைத் தமது வதிவிடத்திற் சேர்க்கவுமென இரட்டை மாட்டுவண்டியை வைத்திருந்தார். தாமே வண்டியை ஓட்டியும் அரும்பாடுபட்டார்.

இவ்வாலயத்தின் தென்பகுதியில் வெளிவீதிக்குள்ளாகவும் ஏற்கெனவே பெரியசந்நியாசியாரால் கட்டப்பட்ட சுவரின் பின் புறமாகவும் தமக்கென இல்லத்தையும் அமைத்துக் கொண்டார். இவ்விடத்திலேயே மருத்துவப் பணியையும் அமைத்துக் கொண்டார். இச்சமகாலத்தில் சுவாமிகள் பெற்றோரின் ஏகப் புதல்வர். பெற்றோர் இருவரும் மறுமை எய்தினர். தமது ஆலயப்பணி, மருத்துவப்பணி, விவசாயப்பணி கால்நடை பராமரிப்பு யாவற்றிற்கும் மேலாகத் தமது உணவு ஆகிய யாவற்றிற்கும் துணை தேவை ஏற்பட்டது. பெரியோர்களின் ஆலோசனைப்படி இல்லறத்துணையை நாடினார்.

சிவாலய அறங்காவலரான அம்பலவாணர் சுவாமிகளின் இல்லறத் துணையாக அமைந்தவர் தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் கோயில் மற்றும் பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில் அறங்காவலரின் மகளான பரமேஸ்வரி அம்மை யாராவார். நல்லறம் பேணிய இல்லற வாழ்வில் இனிய வரவாக நான்கு மழலைகள் அவதரித்து யாவரையும் மகிழ்வித்தனர்.

## சுவாமிகளின் நாளாந்தப் பணிகள்

சுவாமிகள் இயல்பாகவே இறைசிந்தனை மிக்கவர். அதி காலையில் எழுந்து காலைக்கடனை நிறைவு செய்ததும் ஆலய தரிசனை செய்வார். கால்நடைகளுக்குத் தீவனம் வழங்குவார். பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள்மீது அன்பு பாராட்டுவார். பறவைகளின் பற்றுதியால் பல நூற்றுக் கணக்கான புறாக்களை வளர்த்தவர். பெரிய ஓலைப் பெட்டியில் நிறைய தானியங்களைப் புறாக்களுக்கு வழங்குவார். தாம் வளர்க்கும் சகல பிராணிகளையும் கவனமாகப் பாதுகாப்பார். தொடர்ந்து தோட்டத்திற்குச் செல்வார். வேலை செய்யும் வேலை யாட்களுக்கு உரிய பணிகளைச் செய்யச் சொல்வார்.

ஆலயத்தை நாடியதும் நீராடிவிட்டு மீண்டும் ஆலய தரிசனை நிறைவில் வைரவர் ஆலயத்துட் சென்று வெகுநேரம் தியானிப்பார். வெளியே வந்ததும் தம்மை எதிர்பார்த்திருப் போருக்குத் திருநீறிட்டுத் திருவாக்குரைப்பார். தேவையான நோயாளர்களுக்கு மருந்து வழங்குவார்.

### பொதுவான சேவைகள்

பில்லி சூனியம் முதலான பாதிப்பால் தம்மிடம் தொடர்பு கொண்டவர்களின் இடங்களுக்கு (வீடுகள், தொழில் நிறுவனங் கள்) சென்று உரிய கடமைகளைச் செய்யவென ஏற்கனவே நாள் நேரம் கூறியிருப்பார். இதற்கமைவாக உள்ளூர் வெளியூர் இடங்களுக்குச் சென்று யாக பூசைகள் செய்து அவ்விடத்தில் ஏற்ற சாந்திகள் செய்தும் எதிர்காலத்தில் எதுவித குறைபாடுகளும் அணுகாதவாறு காவல்பண்ணித் தமது சித்து மகிமையை நிலை நாட்டுவார்.

பெரியசந்நியாசியாரால் நாட்டப்பட்ட மரங்களை எதுவித கெடுதிகளும் ஏற்படாதவாறு கவனிப்பார். எவரேனும் சிறு தேவைக்காக சிறு கொப்புகளை வெட்டினாலும் தமது தலையிற் தட்டி “சிவ சிவ” என்று கூறிய வண்ணம் அவர்களை விரட்டி விடுவார். பெரியாரால் பிற்காலத்தில் (வைரவர் சந்நிதிக்குத் தெற்கே) நாட்டிய நெல்லிமரத்தை நன்கு பேணிவந்தார். இந்த நெல்லி மரத்தருகே உள்ள மடத்தில் சுவாமிகள் காலத்தில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத நோயாளிகள் தங்கிச் சுகம் பெற்றனர். இந்த நெல்லி மரத்தின் மகிமையை ஏற்கனவே இவ்வளாகத்தில் கூடிய சித்தரான நயினை முத்துக்குமார சுவாமிகள் தமது திருவாக்கில் "இந்த நெல்லி மரம் தீராத நோய்தீர்க்கும் பணிமையமாக விளங்கும் இதனால் பலர் நன்மையடைவர்" என்னும் சித்துமொழி சுவாமி களின் கால நோயாளிகளின் வரப்பிரசாதமாகவே அமைந்தது. இவையாவும் சித்தர்களின் அனுபவமாகும்.

சுவாமிகள் பெரியசந்நியாசியார் தோண்டிய நீர்நிலை களையும் நன்கு பேணி வந்தார். இதனால் காரைக்காலில் இயல்பாகவே நீர்ச்சுனையும் மரங்களின் பசுமையும் குறிப்பாக தெய்வீக, மூலிகை மரங்கள் மூலம் கிடைக்கும் இதமான காற்றும் நோய்களை விரட்டவல்லன. இக்காலத்தில் யாவரும் ஆலயதரி சனையுடன் பசுமரத்தோப்பின் இளங்காற்றையும் மூலிகை மரங் களின் மருத்துவக்குணங்கள் கொண்ட இயல்பான நிழலையும் அனுபவிக்கவென்றே வருவர். எந்த வேளையிலும் யாவரும் தங்கிச் சுகமடைந்தனர்.

## ஞான குருவுக்கு நன்றிக் கடன்

தம்மை உருவாக்கித் தமது பணிசிறக்க உதவிய ஞானகுரு நடராசபிள்ளை மீது மாறாத பக்தியும் நன்றிக் கடன் செலுத்தும் பண்பும் மிக்கவர். எந்தநேரமும் குருவைத்தியானித்தே தம்பணி யாற்றுவார். ஞானகுரு ஏற்கனவே காரைக்கால் வைரவர் தமது தீராத நோயைக் குணப்படுத்திய காரணத்தால் தமது சமாதியும் இச்சூழலில் அமைய வேண்டுமென எண்ணினார். இவ்வாலய வளாகத்தின் தென்பாலிருந்த காணியொன்றை விலையாக வாங்கித் தமது சமாதி கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்தார். இக்காணியைச் சுவாமிகள் கண்ணெனப் போற்றிப் பாதுகாத்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவின் சமாதி அமையும் இடத்தின் சூழலில் நன்மரங்கள் நாட்டிப் பாதுகாத்தார். நடராசபிள்ளையின் சமாதிக்காலம் வந்ததும் தாமே சமாதிக்கடமைகளைக் கவனித்தார். தொடர்ந்து தினமும் பூசை வழிபாடுகளையும் நடத்தினார். அவர் சமாதியான அவிட்ட நட்சத்திரத்தில் மாதந்தோறும் விசேடபூசைகள் செய்து சமாதியில் அறுசுவை அன்னம் நிவேதனஞ் செய்தார். சமாதி இல்லத்தில் போதிய இடவசதியில்லாததால் வைரவர் சந்நிதியில் தென்பாலுள்ள மண்டபத்தில் நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு அன்னதானம் வழங்கினார். இப்பணி சுவாமிகளின் இறுதிக்காலம் வரை நடைபெற்றது.

**சுவாமிகளின் குணஇயல்பு**

சிவாலயப் பணியுடன் அருட்பணிகளையும் செய்யவென்றே அவதாரம் பெற்ற சுவாமிகளுக்கு இறைவன் சகல நற்பண்புகளை யும் வழங்கியிருந்தார். எவருடனும் அன்புடனும் ஆதரவுடனும் பேசி அரவணைக்கும் பண்பினர். இவர் வயதிற் குறைந்தபோதும் யாவரும் இவரின் சேவை கருதி பெருமதிப்புடன் அன்பாகப் பழகினர். தமது உயர்வான பண்பினால் எவரையும் சினந்தவிர்ந்து இன்சொல்லால் அரவணைப்பார். தமது உயர்வான நிலையிலும் தமக்கு மூத்தோர் எவரையும் பெயர் கூறாது "அண்ணே" என்று அழைப்பார். இதனால் காரைக்கால் ஆலயத்தில் சாந்தியும் சமாதானமும் நிலைகொண்டுள்ளது. வேறிடங்களில் பகைத் தோரும் இவ்விடத்தில் சமாதான நிலையிற் காணப்படுவர்.

பெரிய சந்நியாசியாரும் இச்சமரச நிலையைப் பேணிப் பாதுகாத்தவர். அவ்வாறே இச் சமகாலத்திலும் அமைதி குடி கொண்ட சமரசபதியாகவே இப்பதி விளங்குகிறது. இதனால் தொண்டர்கள் பலர் சுவாமிகளின் இட்ட பணியை நிறைவேற்றக் காத்திருந்தனர். அன்று பெரியசந்நியாசியாரின் தொண்டர் படையிலும் கூடியவர்கள் சுவாமிகளின் பணிக்கு அணி செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளின் தன்னலமற்ற சேவையும், யாவருடனும் பழகும் நற்பண்பும், சிவாலயத்தின் பேரருளும், மக்கள் யாவரையும் கவர்ந்தது. பொதுமக்களும் இச்சிவாலயத்தில் சிறப்பான பெருவிழாக்கள் நடக்கவேண்டுமென விரும்பினர். இறைவனின் திருவிளையாடலும் அன்பர்களின் நிதிவளமும் தொண்டர்களின் ஆர்வமும் சுவாமிகளிடம் பெருவிழாவுக்கான எண்ணம் உதய மானது.

## 11. சுவாமிகளின் அருட்பணியால் வளர்ந்த ஆலயத் திருப்பணி

1940 அளவில் சிவாலயத்திருப்பணிக்கென்றே அவதரித்து இறை யருட் சித்தப்படி ஞானகுருவால் ஆலயப்பணி முதலான சகல பணிகளுக்கான பயிற்சி பெற்றதும் தம்பணியை ஏற்றவர் அம்பலவாணர் சுவாமிகள். பணியை ஏற்றதும் பெரியவர்கள் ஊர் மக்கள் தொண்டர்கள் யாவருடனும் தம்மை அறிமுகஞ் செய்தார். அங்கு கூடிய மக்கள் மீது அன்பு பாராட்டி தமது அருட்பணிகள் மூலம் யாவரையும் கவர்ந்தார். யாவும் சிவன் செயலாக அமைந்ததால் இச்சிவாலய எழுகோலத்தை நோக்கினார்.

பெரியசந்நியாசியார் காலத்திலிருந்த கட்டுமானங்கள் அக்காலச்சுண்ணச் சாந்தினால் அமைந்ததால் யாவும் சிதைந்து காணப்பட்டன. எதிர்காலத்தேவை கருதிப் புனர்நிர்மாணஞ் செய்யமுற்பட்டார். இப்பணிக்கான செலவினம் கைகூடாததால் பத்துவருட காலம் கடந்தது. ஆரம்பகாலப் பணியாகப் புனர் நிர்மாண வேலைகள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகள் காலத்து ஆலயச்சந்நிதிகள்

இறையருட் சித்தியும் சுவாமிகளின் அருட்பணிச்சித்தும் அருட் பணியால் சுகமடைந்தோர் யாவரும் இவ்வாலயத்தைச் சகல சிறப்புகளுடன் அமைக்கவும் ஏற்பாடானது. மேலும் இப்புராதன ஆலயம் பெரியசந்நியாசியார் காலத்தைப் போல பெருவிழாக்கள் செய்யவும் பெருவிழாக்களில் இம்மண்ணின் பாரம்பரிய பல் சுவைக் கலைகளும் விழாக்களை அலங்கரிக்க வேண்டுமெனவும் யாவரும் விரும்பினர்.

சிறப்புகள் மிக்க இப்புராதன சிவாலயம். அம்பலவாணர் சுவாமிகளால் பிரபலமடைய வேண்டிய நியதி இருந்தது. அருட்சித்தரான சுவாமிகள் தமது சித்தப்படி 1960 இல் தொடங்கி கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் அடங்கிய கட்டடத் தொகுதியை ஆகமவிதிப்படி வெள்ளைவைரக் கற்களால் கட்டி முடித்தார். இவ்வமைப்பில் கருவறையில் இலிங்க வடிவமைப்பும் இணைவாக அம்பாள் தெற்கு நோக்கியும் அடுத்து நடேசர் சிவகாமி அம்மனின் சந்நிதியும் வெகுசிறப்பாக அமைந்தன. உள்வீதியில் வசந்த மண்டபம் வடமேற்கில் அமைந்துள்ளது. கொடித்தம்பம் சிவன் வாசலில் 1969இல் நாட்டப்பட்டது. இவ்வமைப்பில் நந்திபலிபீடமும் அமைந்தன. கொடித்தம்பத்தின் வடக்கில் நவக்கிரக சந்நிதி தனியாக அமைந்துள்ளது. உள்வடக்கு வீதியில் வசந்த மண்டபத்தைத் தொடர்ந்து வாகனசாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கிழக்கில் வடக்கு மூலையில் யாக சாலையும் அடுத்து விநாயகர் சந்நிதியும் (பிற்காலத்தில் அமைந்த நந்த கோபாலனும்) முருகன் சந்நிதியும் அமைந்துள்ளன.

கருவறையின் வடபால் அருகே சண்டேஸ்வரர் சந்நிதி யுண்டு. தெற்கில் எதிர்காலத்தேவைகருதி அம்மன் வாசலில் நந்தி (சிம்மம்) பலிபீடம் அமைக்கும் போது கொடித்தம்பம் அமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கான அடித்தளமும் நிறுவப்பட்டது. வடக்கு வெளிவீதியினுட் புறமாக புராதன காலத்திலமைந்த மாரியம்மன் சந்நிதி புதிய அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தென்கிழக்கில் வைரவர் ஆலயம் புதிய வடிவமைப்புடன் திகழ்கிறது. இதன் வடபுறத்தில் சுவாமிகளால் நிறுவப்பட்ட நாகதம்பிரான் சந்நிதி அமைந்துள்ளது.

**சுவாமிகளின் காலத்துச் சந்நிதிகளின் அமைப்பில்**

**11.1 நாகதம்பிரான்**

காரைக்காலில் வீற்றிருக்கும் இறைவன் தாம் மக்களை உய்விக் கும் நோக்கில் அருள்பாலிப்பவர். இதேவேளை தம்முடன் உறவாடி அணிகலனாக அமைந்த பாம்புகளின் உறவாடலுக்கும் பெருமை சேர்ப்பவர். பெரியசந்நியாசியார் ஆலயப் புனர்நிர்மாணஞ் செய்ய ஆரம்பித்தார். அதற்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இறைவனுடன் கூடி வாழ்ந்து இன்ப சுகம் கண்ட பல்லினப்பாம்பு களும் பெரியாரின் வேண்டுதலுக்காக விட்டுவிலகிச் சென்றதை முன்னர் அறிந்தோம்.

பிற்காலத்தில் அப்பாம்புகள் இறைவன் மீதிருந்த தொடர் பால் இடையிலே வந்து உறவாடிச் சென்றன. பெரியாரின் பின் அம்பலவாணர் சுவாமிகளின் காலத்திலும் கூடுதலாக உலாவி வந்தன. வேறு இடங்களில் சில பாம்புகள் தம்மை இடையூறு செய்பவர்களை தீண்டியும் வந்தன. கூடுதலான விஷகடியால் பாதிக்கப்பட்டோர் தம்மை நாடிய போது தவநிலையில் இருந்த சுவாமிகள் இறைவனின் தொடர்பால் வதிய இடமின்றித் திரியும் பாம்புகளின் நிலையையும் உணர்ந்தார்.

இச்சம காலத்தில் பாம்புகளின் தலைமைத்தேவதையான நாகதம் பிரானை ஆதரித்து வழிபடவுஞ் சித்தங் கொண்டார். சுவாமிகளும் சிந்தனையை நிறைவு செய்வதன் பேரில் மூன்றாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியின் உட்புறத்தே வைரவ சந்நிதியின் வடக்காகவும் மூலவரின் கருவறைக்குக் கிழக்காகவும் சந்நியாசியாரால் அன்று நாட்டப்பட்ட இலுப்பை மரமொன்று செழித்து வளர்ந்தது. அந்த இலுப்பை மரத்தின் அண்மையில் ஒரு பாம்புப் புற்று மேலெழுந்து நின்றது. சுவாமிகள் அன்றொருநாள் வைரவர் சந்நிதியில் தியானத்தி லிருந்த போது புதிதாகத் தோன்றிய புற்றினை நோக்க முடிந்தது. தியானத்திலிருந்து எழுந்து குறிப்பிட்ட இடத்தைநோக்கிய போது புற்றினைக் கண்டதும் இறையருளை வியந்தார். அவ்விடத்தில் ஏனைய தெய்வங்களின் சந்நிதிகளின் அளவுக்கமைய நாக தம்பிரானுக்கெனச் சந்நிதி யமைக்கச் சித்தங்கொண்டார்.

**நாகதம்பிரானின் சந்நிதி**

இறையருளின் சித்தப்படி தோன்றிய பாம்பின்புற்றினை மையமாக வைத்து விதிமுறைகளுக்கமைவான சந்நிதியொன்று சுவாமி களால் நிறுவப்பட்டது. இவ்வாலயத்தின் பூசை வேளையில் நாகதம்பிரானுக்கும் பூசை நடைபெற்றது. ஏனைய சந்நிதிகளில் நிவேதனஞ் செய்யும் நைவேத்தியத்திற்குமேலாக நாகதம்பிரான் சந்நிதியில் தினமும் சுத்தமான பால் அமுது செய்யப்படும். தினமும் காலையில் நீரால் அபிசேகஞ்செய்வது போல இப் புற்றுக்கு நீர் ஊற்றுவதில்லை. பூசைகள் நடைபெறும் போது மதியவேளை பால் நிவேதனஞ் செய்வது வழமை.

காலங்கள் செல்லவும் இப்புற்று நன்கு வளர்ந்து கதவு சாத்த முடியாதளவுக்கு சந்நிதி முழுவதையும் நிறைத்துள்ளது. பூசைசெய்வதன் பேரில் பிற்காலத்தில் குறிப்பிட்ட சந்நிதிக்கு மேற்காகச்சில அடிகள் தூரத்தில் புதிய சந்நிதியமைத்துப் பூசிக்கப் படுகிறது. புதிய சந்நிதியில் மேற்குத் திசையில் பால் நிவேதனஞ் செய்யப்படுகிறது. மேற்கு வாசலில் கதவு நீக்கப்பட்டதால் கதவிருந்த இடத்திற்கும் மேலாக மேற்கு நோக்கிய புதிய புற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றடிக்கு மேலாக வளர்ந்து பல புற்றுத்துவாரங்கள் தென்படு கின்றன. இப்புற்றுக்களில் பூசகர் பூக்களால் அர்ச்சிப்பார். பழைய புற்று மிக உயர்ந்தும் சந்நிதியை நிறைவு செய்தும் இரண்டாம் புற்றும் வளர்ந்தும் வரும் அற்புதம் இச்சிவாலயத்திற்கேயுண்டு.

தற்போது இவ்விரு சந்நிதிகளையும் பூசகர் பூசிக்கும் வண்ணம் இதனைச் சூழ்ந்து நிலம் சீமெந்தினால் அமைத்துப் பக்தர்கள் வழிபடவும் வசதியாக அமைந்துள்ளது. இச்சிவாலயத்தில் அமைந்த இலிங்க வடிவமைப்பு, மாரியம்மாள், வைரவர் (சூலம்) ஆதியில் அமைந்தவை. அம்பலவாணர் சுவாமிகளின் காலத்தில் அமைக்கப்பட்ட ஏனைய சந்நிதிகளில் நாகதம்பிரான் சந்நிதியும் அற்புதமும் அருட்சிறப்பும் மிகுந்து காரைக்காலின் பெருமையை உணர்த்துவது இறைவனின் திருவிளையாடலேயாகும்.

## 12. காரைக்கால் சிவாலயத்தின் பூசைகள் விழாக்கள்

அம்பலவாணர் சுவாமிகள் 1940 இல் இவ்வாலயத்தைப் பொறுப் பேற்றதும் நித்திய பூசைகள் காலை 7 மணி, மதியம் 12 மணி, மாலை 7 மணி என மூன்று நேரப் பூசைகள் ஏற்பாடானது. ஆலயச் சிறப்பிற்கேற்பப் பணிவாகவும் பயபக்தியுடன் பூசை செய்யவும் வழிபடுவோரின் திருப்திக்குமாகப் பூசை செய்வதன் பேரில் வீர சைவ மரபினரான சின்னத்துரை ஐயர் நியமனம் பெற்றார். இவர் வழிபட வருபவர்களை அன்புடனும் பண்புடனும் அனுசரித்துச் சிறப்பான பூசைகளைச் செய்தார். நித்திய பூசைகள் சிறப் படைந்தன.

அபிசேகங்கள் விழாக்களை இணுவில் சிவகாமி அம்பாள் ஆலயப் பிரதமகுருவான சிவஸ்ரீ வை.சபாரத்தினக்குருக்கள் மேற் கொண்டார். இவரே முதன் முதல் கொடியேற்றத்துடன் பெரு விழாக்களையுஞ் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிக்கிழமை தோறும் குழைசாதம்

அம்பலவாணர் சுவாமிகள் ஆலயப் பொறுப்பேற்று வரும்போது மருத்துவர் நடராசபிள்ளையின் ஆலோசனைப்படி இ.செல்லப்பா இவ்வூர் சித்தர் (சிற்றம்பலம்) செல்லர் உறுதுணையாகச் செயற் பட்டனர். தம்மாலான திருப்பணிகளையும் செய்தனர். சுவாமி களின் புனர்நிர்மாணத்தின்போது வைரவர் சந்நிதியில் தமது பக்திபூர்வமாகப் பணியேற்று வைரவர் சந்நிதியைச் சிறப்பித்த துடன் இன்றுவரை செல்லரின் பரம்பரையில் குடும்பத்தினர் வருடா வருடம் அதன் விழாவை ஏற்று நடத்துகின்றனர்.

மேலும் அன்றைய சூழல் உலக மகாயுத்தகாலப் பஞ்சம் நிலவிய போதும் வெள்ளிக்கிழமை தோறும் மூன்று கொத்தரிசி யுடன் பல்லின மரக்கறிவகை களையுஞ் சேர்த்து ஆக்கிய குழைசாதம் வழங்க முன்வந்தார். அக்காலத்தில் மாலைவேளைப் பூசை முடிந்ததும் சுவாமிகள் மூலம் திருநீறிடும் தேவைக்காக நூற்றுக்கணக்கானோர் கூடுவர். வைரவர் சந்நிதியில் ஏழு மணிக்குப் பூசை முடிந்ததும் சுவாமிகளின் மேற்பார்வையில் வழிபடுவோரை நிரையில்விட்டு குழைசாதம் வழங்கப்படும். உரிய நேரத்தில் ஆயத்தஞ் செய்த குழைசாதத்தைப் பெரிய கடகத்தில் நிரப்பி இருவர் கடகத்தைத் தாங்கிச் செல்ல செல்லர் இருகை நிறைவாக யாவருக்கும் தாராளமாகப் பிரசாதமாக வழங்குவார். காரைக்கால் சிவாலயத்தின் சிறப்பிற்கு இக்குழைசாதமும் விழாக்கள் பெருவிழாக்களில் வழங்கப்படும் அன்னதானமும் எடுத்துக்காட்டாகும்.

இக்குழைசாதம் வழங்கப்படும் பணி இவ்வாலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் மாலைப்பூசை முடிந்ததும் வழங்கும் நியதி இன்றுவரை தொடர்வது இறையருள்ச் சித்தியாகும். அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிய குழைசாதம் அங்கு வழங்கப்படும் மருந்துக்குச் சமமாகும். திருநீறு இடுவித்துக் குழைசாதமும் வாங்கியுண்ட நோயாளிகள் பூரண சுகமடைந்தனர். இக்குழைசாதத்தினால் காரைக்கால் சிவாலயத்தின் பெருமையும் உயர்ந்தது.

## 12.1 விழாக்கள்

இவ்வாலயத்தில் வருடாவருடம் பெருவிழாக்காலத் தீர்த்தத் திருவிழா ஆடி மாதத் திருவோணத்தில் நடைபெறும் தீர்த்தத் திருவிழாவுக்குப் பின் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் விழாக் களை அறிவோம். ஆவணி மாத மூலத்திருநாளன்று சிவன் பிட்டுக்கு மண்சுமந்த வரலாற்றின் நினைவாக சுவாமி உள்வீதி யால் குதிரை வாகனத்தில் பவனிவந்து ஆவணிமூலத் திருவிழா நடைபெறும். இன்றைய தினம் விழாவைத் தரிசிக்கவரும் யாவருக்கும் பிட்டு பிரசாதமாக வழங்கப்படுகிறது.

புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் விசேட பூசைகள் நடைபெறும். சனிபகவானின் ஆசிவேண்டித் எள் எண்ணெயத்தீபம் ஏற்றப்படும். இவ்வாலயத்தில் சனிக்கிழமை களில் மிகக்கூடுதலான பக்தர்கள் கூடித்தமது நேர்த்தியை நிறைவு செய்வர்.

இதே மாதத்தில் நவராத்திரி விழா ஒன்பது நாட்களும் வெகுசிறப்பாக நடைபெறும். பத்தாம் நாள் விஜயதசமியன்று மானம்பு உற்சவமாகும். அன்று சுவாமி வீதிவலம் வந்து வாழை வெட்டும் வைபவமும் நடைபெறுவது சிறப்பாகும். ஐப்பசி வெள்ளிக் கிழமைகள் தோறும் விசேட விழாக்களாக அமைகிறது. கடைசி வெள்ளிக்கிழமையன்று மாலை இயமசங்காரமும் நடை பெறுகிறது. இயமசங்காரத்திற்கான சகல வாகனங்களும் நான்கு வருடங்களுக்கு முன் செய்து விழா சிறப்பாக ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயமசங்காரம் இச்சூழலினண்மையில் வேறிடங்களில் நடக்காத தால் நிகழ்வினை பலநூற்றுக்கணக்கான அடியார்கள் வந்து கண்டு களிப்பர்.

கார்த்திகை மாதந்தோறும் திங்கட்கிழமைகளில் மாலை இறைவனான சோமசுந்தரக்கடவுளின் பிரியமான சோமவார விழாக்கள் சிறப்பானவை. இதே மாதத்தில் திருக்கார்த்திகை விழாவில் சொக்கப்பானை (மகாதீபம்) ஏற்றும் வைபவமும் நடக்கும். மார்கழி மாதமும் சிவனுக்குரிய சிறப்பான விழாவான திருவெம்பாவை விழாக்கள் காலையில் நடைபெறும். பத்தாம் நாள் நடேசப்பெருமானின் திருநடனவிழாவன்று சிறப்பான அபிசேக மும் நடேசரின் வீதியுலாவும் நடைபெறும். இன்றைய தினம் ஆடல்பிரானின் அதிசிறப்பான பெருநாளாகும்.

தைமாதத்தில் தைப்பொங்கல் விழா, தைப்பூச விழா, தை அமாவாசை விழா யாவும் நடைபெறும். தைமாதத்தில் விசாலாட்சி அம்பாளின் பெருவிழாக்கள் நடைபெறுவதைப் பின்னர் அறிவோம். மாசி மாதம் சிவனுக்குரிய அதிசிறப்பான சிவராத்திரி விழா இவ்வாலயத்தில் பக்திசிரத்தையுடன் நடைபெறுகிறது. விழாவன்று நான்கு சாமப்பூசை வழிபாடுகள் நடைபெறும். அன்று விழித் திருந்து விரதம் காப்போரின் நன்மை கருதிச் சமயச் சொற் பொழிவுகள் பண்ணிசை மற்றும் சமயக் கலைநிகழ்வுகளும் அதிகாலைவரை நடைபெறும்.

இவ்வாலயத்தில் விரதமிருக்கும் அடியார்கள் அதிகாலை யில் கூட்டமாக சிவகாமி அம்பாளின் ஆலயத்தீர்த்தக் கிணற்றில் புனித நீராடியதும் யாவரும் அப்புனித நீரில் சுத்தமான குடங்களை நிறைத்து தலையில் வைத்துப் பவனிவரும் போது யாவரும் பண்ணிசை ஓதியவண்ணம் இச்சிவாலயத்தில் வாசலிலமைந்த சிவலிங்கத் திருமேனிக்கு புனித நீராட்டி இன்புறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து ஆலயத்தில் நிறைவான பூசைகள் முடிந்ததும் இறைவன் வீதியுலாவருவதும் சிறப்பாகும். பங்குனி மாதத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் மாரியம்பாளுக்கு விசேட பொங்கல் பொங்குவதுடன் மோதகம் அவித்தும் நிவேதனஞ் செய்வர். அன்றைய தினம் இவ்வூரிலுள்ள அனேக அடியார்கள் தமது நேர்த்தியை நிறைவு செய்வர். அங்கு கூடி நிற்கும் யாவருக்கும் பொங்கல் பிரசாதம் வழங்கி இன்புறுவர். பங்குனி மாதத்தில் பங்குனி உத்தர விழாவும் நடைபெறும்.

சித்திரை வருடப்பிறப்பன்று ஏராளமான அடியார்கள் ஆசாரசீலராக இங்கு வந்து விழாவிற் கலந்து தமது புதுவருடப் பலன் சிறப்படைய வேண்டுமெனப் பிரார்த்திப்பர். சித்திரை மாதச்சித்திரை அன்று மாரியம்பாளுக்குக் கஞ்சி காய்ச்சி நிவேதனஞ் செய்து அங்கு கூடியுள்ள யாவருக்கும் கஞ்சி வழங்கி மகிழ்வர். வைகாசி மாதத்தில் வைகாசி விசாகத்தன்று விசேட அபிசேகமும் விழாவும் நடைபெறும். ஆனி மாதத்தில் ஆனி உத்தர விழா நடைபெறும்.

இக்காலத்தில் வெள்ளிக்கிழமை தோறும் விசேடமாகச் சக்கரைப் பொங்கல் அடியார்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் இவ்வாலயத்தின் கருவறையிலமைந்துள்ள பஞ்சலிங்கத்தில் தென்புறமாக தெட்சணாமூர்த்தி அமர்ந்துள்ளார். குரு பகவானின் அருள்வேண்டி வியாழக்கிழமைதோறும் மிகக்கூடுதலான பக்தர்கள் வந்து வழிபடுகின்றனர். இவ்வாலயத்தில் வருடத்தில் நடேசப்பெருமானுக்கு ஆறு நாட்களில் விசேட அபிசேகம் நடைபெறுகிறது. இவ்வாலயத்தில் பிரதோச விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. இப்பிரதோச விழாக்களிலும் மிகக்கூடுதலான பக்தர்கள் தரிசிக்கும் திவ்விய ஆலயமாகவே காரைக்காலில் விசாலாட்சி அம்பாள் உடனுறையும் விசுவநாதப் பெருமானின் ஆலயம் திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12.2 விழாக்காலத்தில் சிறப்பித்த அரிய பக்தி நிகழ்ச்சிகள்

தமது வழமையான நிதிவளத்தால் ஆலயப்பணிக்கென உதவிய இவ்வூர் வ.கா.வைரவப்பிள்ளை அவர்கள் பிரபல நாதஸ்வரக் கலைஞரான திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளையின் அரியதோர் நாதஸ்வரக் கச்சேரியை வைரவர் சந்நிதி முன்வாசலில் மேடையமைத்து நடாத்தினர். ஆயிரக்கணக்கான எம்மக்கள் சூழ்ந்து கச்சேரியை கண்டும் கேட்டும் மகிழ்ந்தமை இன்றும் இம்மண்ணின் மகிமையால் பசுமையாகவே அமைந்தது.

### திருமுருக கிருபானந்தவாரியார்

அம்பலவாணர் சுவாமிகளின் பெருவிருப்பின் பேரில் திருமுருக கிருபானந்தவாரியாரின் கதாப்பிரசங்கத்தை அவரது தொண்டர் கள் ஏற்பாடு செய்தனர். அக்காலத்தில் சமயப் பிரசங்கத்தை ஆவலுடன் இரசிக்கும் எம்மவருக்கு வாரியார் சுவாமிகளின் அரியசொற்பொழிவு என்றும் மறக்காத அருள்ஞான ஊற்றாக அமைந்தமை இவ்வூரின் சமயப்பற்றின் தொடர்பைத் துலக்கியது.

## 13. பெருவிழாக்களுக்கான ஏற்பாடுகளும் பெருவிழாக்களும்

இறைவனின் திருவிளையாடலில் முன்னர் பெரிய சந்நியாசியார் காலத்தில் கொடித்தம்பம் நாட்டிப் பெருவிழாக்கள் சிறப் படைந்தன. பெரியாரின் பின் கொடித்தம்பமும் மஞ்சத்தடிக்கு மாற்றப்பட்டது. திருவருளைத் துணையாகக் கொண்டு அப்பலவாணர் சுவாமிகள் 1969இல் கொடித்தம்பம் புதியதாக அமைத்து பெருவிழாக்களைச் சிறப்பாகச் செய்ய முன்வந்தார். சுவாமிகளின் இயல்பான குண இயல்பினாற் கவரப்பட்ட வாலிபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர்கள் பலர் எப்பணியையும் செய்யும் வல்லமை கொண்டவர்கள். சுவாமிகள் ஒருவேலையைச் செய்ய வேண்டு மென நினைத்தவுடன் அப்பணிகளைச் செய்து முடிப்பர்.

தொண்டர்களின் உடல் உழைப்பால் கொடித்தம்பம் நாட்டப்பட்டது. சுவாமி ஊர்வலம் வருவதற்கென்றே எலி, இடபம், மயில் ஆகிய வாகனங்களும் புதிதாக செய்விக்கப்பட்டு ஆலயத் தில் வைக்கப்பட்டிருந்தன. அடுத்து பதினொராந் திருவிழாவில் வலம்வருவதற்கான தேர் அமைய வேண்டியிருந்தது.

## புதிய கட்டுத்தேர்

சுவாமி தேரில் பவனி வருவதற்குப் புதிய வடிவமைப்பிலுள்ள கட்டுத்தேரை நிறுவமுன்வந்தார். இணுவில் தாவடியைச் சேர்ந்த வீரவாகு ஐயாத்துரை என்னும் சிற்பாசாரியாரை வரவழைத்தார். தமது அருட்சித்துப்படி சிவனுக்கு எண் கோணத்திலமைந்த தேரை உருவாக்க எண்ணியதைச் செயல் வடிவமாக்கக் கூறினார். தமது சிந்தனைப்படியே தேர் அமைய வேண்டுமென்பதால் தானே நேரில் நின்று செய்வித்தார். இறைவனின் நியதியும் சுவாமிகளின் பெருமுயற்சியும் ஆசாரியாரின் கை வண்ணமும் ஒருங்கமைந்தன. 1969 ஆடி மாதப் பெருவிழாவில் புதிய எண்கோண வடிவமைப்பில் அழகான கட்டுத்தேர் பவனி வந்தபோது ஊரெல்லாம் கூடித் தேர் இழுத்து இறையருள் பெற்று ஆலயப்பணிகளை வியந்தனர்.

## பெருவிழாக்கள்

விசாலாட்சி அம்பாள் உடன் உறையும் விசுவநாதரின் இவ் ஆலயத்தில் அப்பனுக்கும் அம்மைக்கும் இருவேறு காலங்களில் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13.1 விசுவநாதப் பெருமானின் பெருவிழாக்கள்

நீடியகாலத்தின் பின் இவ்வாலயத்தின் அறங்காவலராகப் பொறுப் பேற்ற அம்பலவாணர் சுவாமிகளின் பேராற்றலால் 1969ஆம் ஆண்டு கொடித்தம்பம் நாட்டப்பட்டு ஆடி மாத்திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தத்திருவிழா அமையவரும் 12 நாட்கள் பெருவிழாக்காலமாக அமையப்பெற்றது.

### உபயகாரர் தேர்வு

இறையருட் சித்தப்படி இச்சிவாலயத்தைப் புனர்நிர்மாணஞ் செய்து சிறப்புடன் யாவரும் வழிபடவும் சைவசமய மேன்மையைத் துலக்கவுமென்றே அவதரித்தவர் அம்பலவாணர் சுவாமிகள். இறையருளால் சித்து ஞானம் பெற்றவர். அவர் கூறுவதெல்லாம் திருவாக்காக அமைந்தன. அவர் நடந்து வந்த பாதை சிவன் போக்கானது. அவர் செய்த செயல் யாவும் சிவப்பணியானது. உண்மை நெறியில் கூறினால் இவர் ஒரு ஆக்கச்சித்தர் காரைக் - காலில் சிவாலயம் முன்னைய நிலையி லிருந்து மீட்சிபெறவும் இணுவை மக்களின் சைவப்பணி நீட்சி பெறவும் முன் னெச்சரிக்கையாகவே சுவாமிகளின் அவதாரம் கட்டியம் கூறியது போலானது.

இம்மண்ணில் நல்லவரொருவர் நடந்து செல்லும் போது அவரின் அடிச்சுவட்டைப் பின் தொடர்ந்து செல்வோரும் அவர் கூறுவதைத் தெளிந்து குருவாக்காக உணர்வோரும் பலர். நற்பணியாம் அறப்பணிக்குத் தம்மால் இயன்றதை உள்ளன்போடு தந்து இன்புறும் பண்புடையோரால் இச்சைவத் தமிழுலகம் பெருமையடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலவாணர் சுவாமிகள் ஆலயப் பொறுப்பேற்ற காலம் உலகமகாயுத்த காலமானதால் நாட்டில் பஞ்சம் பசியுடைய காலம். இறையருளினால் சித்தர்கள் செய்யும் செயல் சகல வளங்களையும் தரவல்லன.

## சித்தர்களின் அருளமுதின் சிறப்பு

பெரிய சந்நியாசியார் தமது காலத்தில் இவ்வாலயத் தொண்டர் களுக்கு ஊர்வழமையாக இடைவேளைப் பசிபோக்க அவித்த மரவள்ளிக்கிழங்கு வழங்கினார்.

பிற்காலத்தில் 1937இல் இருள்சூழ்ந்த காரைக்காலை ஒளியூட்டவந்த சித்தர்கள் தம்பணி சிறக்க இங்கு கூழ்காய்ச்சிப் பகிர்ந்துண்டனர். ஆலயம் விருத்தியானது சித்தர் மரபில் வந்த அமப்லவனாணர் சுவாமிகளும் தமது தொண்டர்களுக்கு அவித்த மரவள்ளிக்கிழங்கை வழங்கியதுடன் தாமும் உண்டு மண்ணுக்கு ஒளியேற்ற உதவினார். யாவரும் தெய்வீகப் பணியை மிக விருப்புடன் செய்தனர். இவ்வாறான காலகட்டத்தில் (1960) யாழ்ப்பாண விவசாய முன்னேற்றம் எம்மக்களை உயர்த்தியது.

## பொருளாதார முன்னேற்றம்

அரசின் தூண்டுதலால் யாழ் மண்ணில் விளைந்த உபஉணவுப் பொருட்கள் கொழும்பு வர்த்தகச் சந்தைக்கு அனுப்பும் பேற்றி னால் இணுவில் கோண்டாவிலும் அதிஉயர் வளர்ச்சியடைந்தது. இதே காலத்தில் இவ்வாலய வளர்ச்சிப் பாதையும் உயர்ந்தது. சுவாமிகளின் திருப்பணிக்குத் தம்மாலானதைத் தொடர்ந்து வழங்கிய பெருமக்களின் ஊக்கமும் ஏனைய பக்தர்களின் தூண்டுதலும் ஆலயம் வளரச்சி பெற்றுப் பெருவிழாக் காணும் பேறுபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் சித்தமும் பொதுமக்களின் இடையறாத அன்பளிப்பும் சுவாமிகளின் சிந்தையிற் பதிவானது. பிற்காலத்திலும் தமது பணியைத் (திருவிழா உபயத்தை) தொடர்ந்து செய்யவல்ல பெரியார்களை அணுகிப் பெருவிழாக்கால உபயத்தைச் செய்யுமாறு சுவாமிகள் கேட்டிருந்தார். அதற்கமைவாகவே யாவரும் தூய சிந்தனையுடன் முன்வந்தனர். இவர்களுள் அன்று முதல் ஆலயத் திருப்பணி, அறப்பணித் தொண்டர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுள் தாமும் ஒருவராகித் தேர்த்திருப் பணியை உபயமாக ஏற்றார். இவ்வாலயப் பெருவிழாக்கள் பன்னிரண்டுடன் நிறைவு நாளான திருக்கல்யாண விழாவுடன் பதின்மூன்று பெரியார்கள் விழாக்களின் உபயகாரராயினர். இவர்களுள் ஒருசில திருவிழா உபயகாரரைவிட வேறெவரும் இன்றில்லை.

இப்பதின்மூன்று உபயகாரரின் குடும்பம் சகல வளங்களையும் பெற்று நல்ல நிலையிலுள்ளனர். இரண்டாம் மூன்றாம் சந்ததியினரும் விழா உபயத்தை ஏற்றவரின் பெயரை நிலை நாட்டத் தாமும் தொடர்ந்து குடும்ப உறவாக விழாச் செய்வது போற்றத்தக்கது. மேற்கூறிய உபயகாரர்களின் குடும்பங்களுக்கு மேலாக மேலும் பலர் திருப்பணியாக வாகனங்களாகவும் ஆலய தளபாடங்களாகவும் மனமுவந்து இன்றுவரை வழங்கி வருதல் இறையருட் சித்தமாகும். அவர்களின் பணிக்கேற்ப அம்மன் வாசலில் பெருவிழாவும் நடைபெறுகிறது இத்னையும் பின்னர் அறிவோம்.

இவ்வாலயத்தில் உள்ளன்போடும் சைவசமயப் பற்றோடும் தம்மை அர்ப்பணித்துப் பல அறப்பணிகளையும் தொண்டுகளையும் செய்த பலர் இவ்வாலயத்தின் இதரவிழாக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து செய்கின்றனர். இணுவில் திருவூரின் சிறப்பின் எதிரொலி யால் காரைக்கால் பிரதேசமடங்கிய இணுவில் கோண்டாவில் மக்கள் யாவரும் பலவகையிலும் தம்மை அர்ப்பணித்தனர்.

இவ்வாலயத்தின் இன்றைய வளர்ச்சிப் பாதையை நெறிப் படுத்தி யாவரையும் சிவப்பணி, அறப்பணி பொதுப்பணியைக் கற்றுத் தந்தவர் அம்பலவாணர் சுவாமிகள். 1969 - 1978 பத்து வருடங் களில் அவர் வாழ்ந்து காட்டிய நெறிமுறை எம்மக்களைத் தொடர வைத்தது. யாவரையும் இந்த நிலைக்கு அழைத்து வந்த சுவாமிகளின் அன்புக்கட்டளை இன்றும் வழிநடத்துகிறது.

## 14. காரைக்கால் அம்பலவாணர் சுவாமிகளின் காலத்துப் பெருவிழாச் சிறப்புக்கள்

மங்கல வாத்தியம் முதலான பல்சுவைக் கலைகளும் சிறப்புடன் வளர்ந்து வரும் இணுவில் திருவூரில் காவடியாட்டம், கரகாட்டம் ஆகிய ஆடல்களும் பாடல்களும் அன்று முதல் பிரகாசிக்கிறது. இந்த ஆர்வத்தினால் தூண்டப்பட்ட எம்மக்கள் இவ்வூர் ஆலயங் களின் பெருவிழாக்களில் கலைஞர்கள் சகல நிகழ்வுகளையும் ஆதரித்து யாவருக்கும் கலை விருந்தளிப்பர். இவ்வெழுகோலம் பூண்ட கலைகளில் மிக்க ஆர்வங்கொண்டவர் அம்பலவாணர் சுவாமிகள்.

சுவாமிகளின் பெருவிருப்பும் தொண்டர்களின் ஊக்கமும் பெருவிழாக்களின் உபயகாரரின் ஒத்துழைப்பும் இணைவதால் பெருவிழாக்காலத்தில் சுவாமி ஊர்வலம் வருதல் கண்கொளாக் காட்சியாகவே அமையும். குறிப்பாக இரவுத் திருவிழாக்களில் இரண்டிற்குக் குறையாத தவில் நாதஸ்வரக் குழுக்கள் சேவிப்பர். சில விழாக்களில் ஐந்துக்கும் மேற்பட்ட குழுவினர் கலை விருந்தளிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969இல் இவ்வாலயத்தில் ஆடிமாதப் பெருவிழாவில் நீடியகாலத்தின் பின் முதன் முதல் புதிதாக அமைக்கப்பெற்ற எண்கோணக்கட்டுத்தேர் பவனிவந்தது. இவ்விழாவின் உபயகாரர் ஆலயபரிபாலகரான சுவாமிகளே. அன்றைய தினம் வெகு சிறப்பாக அமையவேண்டுமென்ற பேரவாக் கொண்டவர்கள் சுவாமிகளின் தொண்டர்கள். அன்றைய விழாவைச் சிறப்பிக்க வென வந்த உள்ளூர் தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் அருட் பணியாற்றிய சுவாமிகளின் தேர்த்திருவிழாவை நன்கு சிறப் பித்தனர். கூடுதலான கலைஞர்கள் தமது கலை அர்ப்பணிப்பிற்கு பணம் ஏதும் வாங்கவில்லை. விழாவின் சிறப்பை வியக்காதா ரில்லை.

அன்றைய தேரில் முதல் பவனி வருவதைத் தொண்டர்கள் ஏற்கனவே துண்டுப்பிரசுரத்தின் மூலம் தெரிவித்தனர். அதனால் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடினர். அன்றைய விழாவை ஆசி கூறி அணிசெய்யவென தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தானத்திலிருந்து சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் தமது தமிழ்ச்சொல்வளத்தால் புகழ்ந்துரைத்தார். அம்மையார் தமதுரையில் ஆயிரம் வருடங்களுக்கு மேலான புராதன ஆலயமான காரைக்கால் சிவாலயம் பெரியசந்நியாசி யாரின் அமைப்பான பசுமரத் தோப்பினுள்ளே அமைந்துள்ளது சிறப்பாகும். மேலும் நாற்புறமும் விவசாயப்பூமி; ஊரெல்லாம் ஆலயங்களின் பொலிவு; வாழும் மக்கள் யாவரும் சைவபக்தர்கள். பல்சுவை கலைகளும் வளர்ந்து வரும் இப்புனிதமான இணுவில் இந்தியாவின் காஞ்சி, தஞ்சாவூருடன் ஒப்புநோக்கும் பெருமைக் குரியது. இவ்வாலயத்தை இயக்கிவரும் அம்பலவாணர் சுவாமி களின் அருட்பொலிவு இவ்வூர் மக்களின் சமய, சமூகப் பணியை மேலோங்கச் செய்கிறது என்று போற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளின் சித்தப்படி விழா நிறைவுற்றதும் வழமை போல நடைபெறும் அன்னதானம்; அன்றைய தினம் வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கும் அறுசுவை அன்னம் வழங்கி எமதூரின் பெருமையை நிலைநாட்டினார்.

**காவடி ஆட்டம்**

அன்றைய தினம் இவ்வூர் மக்களின் பக்தியான கலை ஆர்வம் ஆடலிலும் பாடலிலும் மக்கள் தம்மை மறந்தனர். எண்ணிறந்த காவடிகள் மூன்றுவயது பாலகர் முதல் முதியோர் வரை தமது கலை ஆர்வத்தினால் தாளம் பிசகாத காவடி ஆட்டத்தைத் தமது பக்திக் காணிக்கையாக்கினர்.

**கரகாட்டம்**

தேர்த்திருவிழா பகல் வேளை நடைபெற்றதால் இதர கலை நிகழ்வுகள் இடம்பெறவில்லை. அன்று பெரியசந்நியாசியார் மாரியம்மனால் தடுத்தாட்கொள்ளப்பட்டதால் மாரியம்பாளின் பக்தி மேலீட்டினால் கரகாட்டத்தையும் பெருவிழாக்களில் இணைத்தார். இதனால் உடுக்கடித்து பாடுதலையும் கரகாட்டம் ஆடியும் இச்சிவாலயத்தை எழுச்சி பெறவைத்தார். காலங்கள் கடந்தாலும் சுவாமிகள் காலத்திலும் கரகாட்டம் அறிமுகமானது.

அளவெட்டியைச் சேர்ந்த வீரசைவர் மரபினர் இவ்வாலயத்திற்கு அடிக்கடிவந்து தமது கரகாட்டத்தில் பல நிகழ்வுகளையும் காண்பித்தனர். மாரியம்பாளின் பிரியமான மாரியம்மன் தாலாட்டுப் பாடி உடுக்கு அடிக்கும்போது கலைஞர் பெண் வேடமணிந்து அலங்காரமாகவும் பக்தியுடனும் ஆடிப் பாரம்பரியக் கரகாட்டத்தை அணிசேர்த்தார். இக்கரகாட்ட நிகழ்வினை இவ்வாலயத்தில் இன்றும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்திமீது கரகாட்டம்

கரகாட்டத்தில் பற்பல வியக்க வைக்கும் ஆட்ட வகைகளும் அன்று காரைக்காலில் நடைபெற்றதைக் காண முடிந்தது. மூன்றடி நீளமும் இருமுனைகளிலும் கைப்பிடிக்கக்கூடிய பிடிகளுடன் கூடிய இரு கத்திகளை நால்வர் தாங்கிப்பிடிப்பர். கரகாட்டக்காரர் பெண் வேடமணிந்து முதலில் ஆடிய ஆட்டத்தை நிறைவு செய்ததும் இறைவனை முதல் வணங்கியதும் தலையில் கரகக் காவடியை வைத்துக் கொண்டு கத்திகள் மீது இரு கால்களையும் பதிப்பார்.

இதே சமயம் உடுக்கு வாத்தியம் அடிப்போர் மாரியம்மன் மீதான நாட்டார் பாடல்களைப் பாடுவர். கரகாட்டக்காரர் காலால் தாளத்திற்கேற்ப கால்களை அசைத்து கைகள் வீசியவண்ணம் அபிநயம் செய்தும் தமது உடலையும் தாளத்திற்கேற்ப நெளிந் தாடும் காட்சியைப் பார்க்கவென யாவரும் சூழ்ந்து கொண்டு வியப்படைவர். பாடல் முடிந்ததும் ஆடிய கரகாட்டக்காரர் மாரியம்பாளை மீண்டும் வணங்கிவிட்டே கத்திகளிலிருந்து கீழிறங்குவர். இக்கரகாட்டம் யாவும் அருகிவிட்டன. யாவும் இறை யருளின் புதுமையாகும். இறையருட் சித்திப்பால் கூரிய கத்தி மீது நடனமாடும்போது கரகமாடியவர் பாதிக்கப்படுவதில்லை.

## நொண்டி நடனம்

கரகாட்டம் போல நொண்டி நடனமும் முற்காலத்து ஆட்ட வகை களில் ஒன்றாக இருந்தது. ஆறடிக்கு மேல் உயரமானதும் பலமும் பாரமுமற்ற நேரிய தடியில் கால்பதித்து வைக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கும். ஆட்டக்கலைஞர் அதற்கேற்ற உயரத்தில் நின்று தடிகளில் காலை வைத்து தமக்கேற்றவாறு தடிகளுடன் காலிலும் விலகாது கட்டிக்கொள்வார். இவர் இவ்வாட்டத்தில் தான் பெற்ற அனுபவத்தால் நடப்பது போல தடிகளை அசைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பார். தாளமும் அதற்கேற்ப பாடலும் பாடும்போது இரு கால்களையும் வேகமாக அசைத்து ஆடியும் சுழன்று ஆடியும் தமது வித்தையால் யாவரையும் மகிழ்விப்பார். இதுபோன்ற ஆட்டங்கள் இன்று எம் சமூகத்தில் இல்லை. அக்காலத்தில் இதுபோன்ற அரிய நடனம், கூத்துக்கள் இருந்தவேளை அம்பலவாணர் சுவாமிகள் ஆலயத்தில் அவற்றை அறிமுகஞ்செய்த கலைப்பிரியராவார். இன்று எம்மத்தியில் இதுபோன்ற ஆட்டங்கள் அருகவும் சினிமாக்கோல ஆட்டம் எம்மவரைக் கவர்ந்துள்ளது எனலாம்.

## சீனடி, சிலம்படி, தீப்பந்தம் சுழற்றல்

சாண்டோ செல்லர் என்னும் சிறந்த வீரர் தமது கைவண்ணமான சீனடி, சிலம்படியில் தமது கலையை இவ்வாலயத்தின் பெருவிழாக் காலத்தில் அறிமுகஞ் செய்தார். இவ்விளையாட்டில் எமதூர் இளையோர் பலர் இவ்வாலயத்திலேயே செல்லரிடம் பயிற்சி பெற்றுச் சிறப்படைந்தனர். இவர்கள் பெருவிழாக் காலத்தைத் தமது திறமையால் சிறப்பித்தனர். அன்று விளையாடிய வாலிபர் இன்று முதுமையில் தமது சிறப்பைக் கூறி மகிழ்கின்றனர். ஆனால் இப்பாரம்பரிய விளையாட்டை எம்மவர் எவரும் நாடாததால் இக்கலை அருகி வருகிறது.

## 15. சுவாமிகளின் காலத்துப் பெருவிழாவில் சமய நிகழ்வுகள்

பெருவிழாக்காலம் முழுவதும் சைவசமய எழுச்சிக் காலமே யாகும். சிறுவர்கள் முதல் பெரியார்கள் வரை திருமுறைகளை ஓதியும் விரதமிருந்தும் தமது பக்தியை நிலைநாட்டுவர். முதன் முதல் 1969இல் பெருவிழாத் தொடங்கியது. இதற்கமைவாக சிறுவர்களின் பண்ணிசை, வில்லிசை, பேச்சுப் போன்ற நிகழ்ச்சி கள் நடைபெறும். சமயப் பெரியார்களின் சமயச் சொற்பொழிவுகள் விழாக்களை அலங்கரிக்கும். ஏற்கனவே ஏற்பாடு செய்தபடி பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப் பெரியார்கள் மட்டுமல்ல சிறந்த பேச்சாளர்களான இளை யோர் மற்றும் யுவதிகளும் தம்மை அர்ப்பணித்தனர். பன்னிரு நாட்களும் சிறார்களின் மழலை மொழியில் பண்ணிசை, வில்லிசை மற்றும் சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகளும் நிகழ்வுகளை அலங்கரித்தன.

இளவாலையைச் சேர்ந்த சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் ஏற்கனவே (1965) அம்பலவாணர் சுவாமிகளுடன் ஏற்பட்ட தொடர்பில் இவ்வாலயத்திற்கான திருவூஞ்சற் பாடல்களைப் பாடி வழங்கியவர்.1969 பெருவிழாக் காலங்களிலும் பின்னரும் பல வருடங்களில் கூடுதலான நாட்கள் சொற்பொழிவாற்றித் தாமும் வளர்ந்தார்.

இளவாலையைச் சேர்ந்த திருமதி. சாந்தி திருநாவுக்கரசன் அவர்கள் அக்காலத்தில் பல்கலைக்கழக மாணவியாக இருந்தவர். அவர் சிறந்த ஆன்மிகப் பேச்சாளராக இருந்த காரணத்தால் சைவப்புலவர் அவர்களின் அழைப்பின் பேரில் இவ்வாலயத்திற்குப் பல முறைவந்து சொற்பொழிவாற்றினார். 1973 இல் செல்லத்துரை நாவரசன் என்னும் சிறுவன் ஐந்து வயதில் தமது சக மாணவர் களுடன் "பூம்பாவை" என்னும் புராணக்கதையை வில்லிசையில் நடத்தினார். மேற்கூறிய யாவரும் ஆற்றிய சமய நிகழ்வுகளை அவதானித்த சுவாமிகள் மூவரையும் வாழ்த்தி ஆசிகூறினார். யாவரும் சுவாமிகளின் ஆசியுடன் காரைக்காலில் குடிகொண்ட விசுவநாதப்பெருமானின் பேரருளால் பிற்காலத்தில் பல உயர்வையும் பெற்று யாவராலும் போற்றப்பட்டனர். இன்றுவரை தமது இறையருளின் பெருமையை போற்றிப் பெருமிதமடை கின்றனர். இவர்களின் விபரங்களை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15.1 சமய நிகழ்வுகளைச் சிறப்பித்த பெரியார்கள்

**வரிசையில் சைவப்புலவர் சு.செல்லத்துரை**

இளவாலையைச் சேர்ந்த இவர் சிறந்த சைவச் சொற்பொழிவு சமயக் கலை படைக்கும் சிவபக்தருமாவார். இவர் வேறு சிவாலயங்களைத் தரிசித்த காலத்தில் காரைக்கால் மூலமூர்த்தி யான இலிங்கப் பெருமானையும் வழிபட்டபோது அம்பலவாணர் சுவாமிகளுடன் அறிமுகமானார். 1965 முதல் இவர் அடிக்கடி வந்து தரிசித்த பயனாக இவ்வூரில் 1967இல் திருமணமாகி இவ்வால யத்தை நன்கு போற்றி வந்தவர். இவர் 1969இல் இங்கு வந்தபோது அம்பலவாணர் சுவாமிகள் பெரியசந்நியாசியாரையும் காரைக்கால் சிவாலய வரலாற்றையும் எழுதித்தருமாறு கூறினார். மேலும் இதே ஆண்டில் பெருவிழா நடைபெறுவதால் இவ்வாலயத்தின் மீது ஊஞ்சற்பாடலையும் எழுதுமாறு கேட்டிருந்தார்.

சைவப்புலவர் அதுவரை எவ்வாலயத்தின் மீதும் திரு வூஞ்சற் பாடல் எழுதாததை உணர்ந்தபோது "இது உன்னால் முடியும்" பெருவிழாக்காலத்தில் பாட வேண்டுமெனவும் அருளினார். இறைபணியை ஏற்றவர் காரைக்கால் சிவனை உள்ளன்போடு துதித்தவண்ணம் ஊஞ்சற்பாடலை எழுத ஆரம் பித்தார். இறையருளே சிந்தனையை உருவாக்க பாடல் சிறப்பாக அமைந்தது. பாடிய பாடலைச் சுவாமிகளிடம் சைவப்புலவர் வழங்கினார்.

நீடியகாலத்தின் பின் புதிதாக அமைந்த இவ்வாலயத்தின் பெருவிழாவில் தீர்த்தத்திருநாளன்று இவ்வூர் த.சிதம்பரநாதன் தமது இனியகுரலில் பாடினார். யாவரும் பாராட்டினர். இதே பாடல் அன்றே இலங்கை வானொலியில் பிரபல சங்கீதபூசணம் பத்மலிங்கம் அவர்களால் பாடப்பெற்ற சிறப்பையும் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவரால் எழுதப்பெற்ற காரைக்கால் ஆலய வரலாறும் திருவூஞ்சற்பாடலும் மலராகப் பதித்து இவ்வாலயத்தில் வெளியிடப்பட்டது. இப்பெரியார் 1969 பெருவிழாக்கால மாலை நிகழ்வாக சைவசமயப் சொற்பொழிவாற்றினார். மேலும் தொடர்ந்து பல வருடங்கள் உரையாற்றினார். இத்தூயபணியால் அம்பலவாணர் சுவாமிகள் இவரைப்பெருமைப்படுத்தியதுடன் அருளாசியும் வழங்கினார். யாவற்றையும் நோக்கிய விசுவநாதப் பெருமானின் பெருங்கருணையால் சைவப்புலவர் பிற்காலத்தில் பல வளர்ச்சிகளையும் கண்டுள்ளார்.

இவர் கலாபூசணம் விருது பெற்றார். ஆசிரியப் பணியில் அதிபராகிப் பல்வேறு சிறப்படைந்தார். இவரின் சிவப்பணி அறப்பணியானது ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் பல இடங்களில் சைவ நிகழ்வுகளிற் கலந்து உயர்வடைந்தார். பல்துறைசார்ந்த 25 நூல்களை எழுதிவெளியிட்டார்.

திருவாவடுதுறை ஆதீனம் முதன் முதல் 2010 இல் கொழும்பில் சைவசித்தாந்த பயிற்சிமையமமைத்து முதன்மை விரிவுரையாளராக மூன்று வருடம் பணியேற்றார். மேலும் திருமந்திரவகுப்பையும் தாமாக வேறிடத்தில் நெறிப்படுத்தினார்.

2013 முதல் எம்மவரின் வேண்டுதலை அடுத்து இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் சைவசித்தாந்த வகுப்பைத் தாமே நெறிப்படுத்துகிறார். இப்பயிற்சி வகுப்புகள் ஐந்து நிறைவடைந்து ஆறாம் முறையும் சிறப்பாக இயங்குகிறது. மேலும் இணுவில் மஞ்சத்தடியில் மூன்றாண்டு காலமாகத் திருமந்திர வகுப்பை நடாத்தி வருகிறார். இவர் இவ்விரு வகுப்புகளையும் இலவச போதனைமூலம் அறப்பணிக்கு அணிசெய்கிறார்.

இவரின் சிறப்புக்கள் யாவும் காரைக்கால் பதியில் உறைந்துள்ள விசுவநாதப்பெருமானின் அருட்கடாட்சத்தின் பேரருளேயாகும். அம்பலவாணர் சுவாமிகளின் சித்தமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளாசியும் இவரது உயர்வை நிலைநாட்டியது. இதன் நன்றிக் கடனாக இம்மலருக்கு ஆசியுரையையும் வழங்கியுள்ளார். யாவும் சிவன் செயலேயாகும்.

## 15.2 திருமதி சாந்தி நாவுக்கரசன்

காரைக்கால் சிவாலயத்தில் முதன் முதல் 1965இல் அம்பலவாணர் சுவாமிகளுடன் ஏற்பட்ட தொடர்பால் சைவப்புலவர் 1969இல் நடைபெற்ற பெரு விழாக்கால நிகழ்வாகப் பலமுறை சமயச்சொற் பொழிவால் அலங்கரித்தார். மேலும் இவ்வாலயத்தின் பெருமைக் காகத் தாம் சார்ந்த பலரையும் அறிமுகஞ் செய்தார். இதன் பேறாக இளவாலையின் சைவப் பாரம்பரியங்களுடன் பேச்சு வன்மை யுடனும் திகழ்ந்தவர் சாந்தி என்னும் யுவதியாவார். இவர் தமது கல்வித் திறமையால் பல்கலைக்கழகத்தில் கற்று வந்தார்.

சைவப்புலவரின் அழைப்பை ஏற்றுக் காரைக்காலில் பெரு விழாக்களில் அரிய சொற்பொழிவாற்றினார். தமது நுண்மதி யாலும் பேச்சு வன்மையாலும் பலரை வியக்க வைத்தார். அம்பலவாணர் சுவாமிகளும் இவருக்கு ஆசிகூறினார். சாந்தி இதன் தொடர்பில் பல நாட்கள் பேசியுள்ளார். அன்று இவரின் பேச்சு வன்மையை மட்டும் எம்மால் அறிய முடிந்தது. இங்கு குடிகொண்ட சிவனாரின் பெருங்கருணையும் ஆக்கச்சித்தரான சுவாமிகளின் அரிய அருட்பேறும் ஆசீர்வாதமும் சாந்தியை நன்கு உயர்த்தியது.

சிறப்பான பட்டம் பெற்றார் அரச பதவி ஏற்றார். கூடிய விரைவில் இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாள ரானார். இறைவன் மீது அவர் வைத்த நம்பிக்கை வீண்போக வில்லை. அவரின் பதவிகள் மிக உயர்ந்தன. இலங்கை நிர்வாக சேவையின் அதியுயர் பதவியான நிரந்தரச் செயலாளராகப் பதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தப்பெற்றார். 2012இல் இணுவில் திருவூரின் சிறப்பினால் எம்மில் ஐவர் கலாபூஷணம் விருது பெற்றதால் கொழும்பு தமிழ்ச்சங்கம் பெருமையடைந்தது. எம்மை அழைத்து ஒரு பொன்மாலைப் பொழுதில் பல பேச்சாளர் பொதுமக்கள் மத்தியில் பெருவிழாவெடுத்துப் பெருமைப்படுத்தினர். அவ்விழாவில் அன்றைய சாந்தி பின்னாளில் இலங்கை இந்து சமயக் கலாசார அமைச்சின் பணிப்பாளரான திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் பிரதம விருந்தினராக வந்திருந்தார். அன்று பேசிய அவர் கூறியவை இணுவில் திருவூர் ஆலயங்கள் சமயம், கல்வி, கலையில் சிறப்புடையன. இவ்வூரின் பெருஞ்சிறப்பின் பேறாகவே 2012இல் இலங்கை முழுவதும் தமிழ் முஸ்லிம் சார்பான 60 கலாபூஷண விருது பெற்றோரில் இணுவிலில் மட்டும் ஐந்து பேர் தெரிவு செய்யப்பட்டது பெருமைக்குரியது. தாம் இணுவில் காரைக்கால் சிவாலயப் பெருவிழாக்காலத்தில் 1969 பல்கலைக் கழக மாணவியாக இருந்து சமயச் சொற்பொழிவாற்றியதாகவும் ஆலயத்தின் தர்மகர்த்தாவான அம்பலவாணர் சுவாமிகள் தந்த ஆசீர்வாதமும் சிவனாரின் பெருங்கருணையுமே தம்மை உய் வித்து உயர்பதவிக்கு எட்ட வைத்ததையும் நன்றியுடன் கூறினார்.

சாந்தி நாவுக்கரசன் அவர்களின் நன்றிக்கடன் காலங்கள் பல கடந்தும் தமது உயர்வை தமது பேசும் மேடைகளில் அன்புடனும் பண்புடனும் பேசும் மரபு நிலைத்துள்ளது. இவை சைவத்தமிழ்ப்பாரம்பரிய முறையாகும்.

### வில்லிசைச் செல்வன் செல்லத்துரை நாவரசன்

காரைக்கால் சிவாலயத்தில் நடைபெற்ற திருவிழாக்காலச் சமய நிகழ்ச்சிகள் வருடாவருடம் சிறப்படைந்து ஆலயத்தைப் பிரகாசிக்க வைத்தது. சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் தமது சமய கலைப்பணியின் பேராவலால் பல மாணவர்களை சமயநெறியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லிசையையும் கற்று முன்னேற வைத்தார். சைவ மாணவர்கள் புராணக் கதையான "பூம்பாவை" என்னும் தலைப்பில் வில்லிசைப் பயிற்சிக்காக அரிய நிகழ்வுகளை வெளிப்படுத்தினர். மாணவர் களும் ஆவலுடன் கற்று வந்தனர். இவர்களுள் ஆசிரியரின் மூத்த மகன் நாவரசன் முதன்மையானவர். நாவரசனே வில்லிசை பாடி நிகழ்வை மேம்படுத்தினார். மேலும் சில நண்பர்கள் உதவினர்.

1973 காரைக்கால் சிவாலயப் பெருவிழாவின் போது ஐந்து வயது மாணவன் செ.நாவரசன் அவர்களின் "பூம்பாவை" என்னும் தலைப்பில் வில்லிசை நடைபெற்றது. அமைதியான காரைக்கால் பெருவிழாக்கால ஒன்பதாம் திருவிழாவின் மாலை நிகழ்வாக அமைந்த நாவரசனின் கணீரென்ற மழலை மொழியிலான வில்லிசை பெருவிருந்தானது. காரைக்கால் சுவாமிகள் ஆசி கூறினார். பெரிய கைதட்டல் ஆரவாரத்துடன் யாவரையும் வியக்க வைத்தார். விசுவநாதப் பெருமானும் பேரருள் புரிந்தார். காலங்கள் கடந்தன.

சிலவருடங்களில் எம்மண்ணில் ஏற்பட்ட யுத்தகால அவலம் காரணமாக நாவரசன் புலம்பெயர்ந்து இலண்டன் மாநகரில் தஞ்சமடைந்தார். நாவரசன் பிறந்த தாயின் இணுவில் மண்வாசனையும் தந்தை வழி சைவமும் நற்றமிழும் ஆய கலைகளும் காரைக்கால் சுவாமிகளின் ஆசீர்வாதமும் சிவ பெருமானின் பெருங்கருணையும் நாவரசனின் இன்றைய உயர்வுக்கு வித்திட்டன. இலண்டனில் தஞ்சமடைந்தவர் தாயகத்தில் கற்ற கல்வி கலை பண்பாட்டின் உந்துதலால் நற்பணி களை நாடினார். இலண்டன் ஐ.பி.சி வானொலி நிறுவனத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கான நிகழ்ச்சித் தயாரிப்பாளராக பணி யாற்றிப் பெரும் புகழீட்டினார். அதிசிறப்பான விழாவில் தமது பெருமைக்கு வித்திட்டமை இணுவில் காரைக்காலில் உறைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ள சிவபெருமானின் பேரருளும் காரைக்கால் அம்பலவாணர் சுவாமிகளின் ஆசீர்வாதமும் தமது கவிதையூற்றாக அப்பேறே அமைந்ததென நன்றியுடன் கூறினார்.

புலம்பெயர்ந்த நாடுகளிலிருக்கும் தமிழ்க்கலைஞர்கள் அனைவரையும் வானொலி மூலம் ஒன்றிணைத்து "பிரசவக்களம்" என்னும் கவிதைக் களத்தை நடத்தினார். இக்கவிதைக் களத்தின் ஐநூறாவது நிறைவு விழாவில் காரைக்கால் தந்த கவிதையூற்றுத் திறன் உலகளாவிய வகையில் உயர்த்தியது என நன்றியுடன் கூறினார். இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவாலயத்தின் பெருவிழாக்காலச் சமய நிகழ்வு தந்த புகழ் என்னும் விதை பெருமரமாகி உலகின் பல நாடுகளுக்கும் பரப்பிய கவிதைநயம் இம்மண்ணின் பெருமையையும் காரைக்கால் சுவாமிகள் தந்த அருளாசியைச் சிவனார் காலம் காலமாகப் பிரகாசிக்க வைத்த பேரருளையும் உணர்த்தியது. நாவரசன் சிவாலயத்தில் பெற்ற பேரருளைத் தமது சிவபக்தியை தாம் தோன்றும் சகல மேடைகளிலும் கூறுகிறார்.

மேலும் சமய சமூகப்பணியாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் எம்மவர் பலரைச் சைவப்புலவர்களாகவும் சமய ஆர்வலர்களாகவும் தேர்ச்சி பெறத் தம்மாலான பணியாற்றித் தமது தந்தையின் சைவப்பணிக்கு உதவுகிறார். யாவும் எம்மண்ணின் வரப்பிரசாதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15.4 சுவாமிகளின் பிற்கால நிகழ்வு

### செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்

### நுழைவாயில்

காரைக்கால் சிவாலயத்தின் வளர்ச்சிக்காக அம்பலவாணர் சுவாமிகள் சமயசார்பான சொற்பொழிவுகள், கலைகள் பலவற்றை அறிமுகஞ் செய்து யாவராலும் போற்றப்பட்டார். ஆலய விழாக்கள், விழாக்களுக்கான தொண்டுகள், ஆலய அபிவிருத்திப்பணி, கலை நிகழ்வுகளை அறிமுகஞ் செய்தல், அன்னதானம் போன்ற பல்வேறு பணிகளையும் விருப்புடன் நிறைவு செய்யவல்ல பல தொண்டர்களை உருவாக்கியிருந்தார்.

1969 - 1978 வரை பத்துவருடங்களில் தொண்டர்களின் பணி சுவாமிகளின் சைகை மூலமே நிறைவடைந்த பெருமை இருந்தது. ஏனைய சிறப்புகளுடன் சைவசமயச் சொற்பொழிவு வில்லிசை மூலம் தமது எதிர்கால வாழ்வில் வளர்ந்து பிரகாசித்த மூவரின் சிறப்பை அறிந்தோம். சுவாமிகள் முன்னாளில் காட்டிய நெறிப் படுத்தலால் யாவற்றையும் சிறப்புடன் நிகழ்த்திய தொண்டர்கள் நன்கு பழக்கப்பட்டவர்கள். சுவாமிகள் சமாதியடைந்ததும் அவரின் மகள்மார் சிறப்பாக மூத்த மருமகனின் ஆலோசனையுடன் கூடிய வழி நடத்தல் அமைந்தது. மூத்த மருமகனான சோ.லோகேந்திரனும் ஒரு தொண்டராகவே பணியாற்றினார்.

வருடாவருடம் பலரதும் ஒத்துழைப்புடன் ஆலயப் பெருவிழாக்கள் நன்கு பிரகாசித்தன. முன்னாளில் நடந்த பணிச் சிறப்புகளுக்கும் மேலான நிகழ்ச்சிகளும் அரங்கேறின. தொடர்ந்து சகல பெருவிழாக்களும் தொய்வின்றி நடைபெற்றன. 1992 இன் பெருவிழாவில் இணுவையூர் ஆறு திருமுருகன் அவர்களை சொற்பொழிவாற்றுமாறு எமது தொண்டர்கள் அழைத்தனர். அவர் பூரண விருப்புடன் வரச் சித்தங்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுருகன் அவர்களின் அன்றைய நிலை

எமதூரின் சைவத்தமிழ் மரபில் நல்லறம் காத்த ஆசிரியர் குடும்பத்தில் இளைய மகனாகப் பிறந்து மண்ணின் பெருமையாக நற்கல்விகற்றவர். இடைநிலைக்கல்வி கற்ற போது நாவன்மையால் செந்தமிழைச் சைவத்தொனி சேரச் சொல்நயம் சேர்ந்த சொல் லழகால் செந்தமிழை அலங்கரித்தவர். பின்னாளில் கல்வி யால் உயர்ந்த பட்டதாரியாக உலாவந்தார். 1989இல் எம் மண்ணில் ஏற்பட்ட போர்ச்சூழலில் பாதிப்படைந்தபோது தம்மை இறை வனிடம் ஒப்படைத்தார். தம்மிடம் தஞ்சமடைந்தவரை இறைவன் வழிகாட்டினார்.

இறையருட்பேறாக ஆசிரியர் பதவி ஏற்றார். துர்க்கா தேவியை நாடினார். அன்னையின் பேரருளால் குருவடிவில் அமைந்த சிவத்தமிழ்ச் செல்வியின் வழிகாட்டலில் ஆலயப்பணி, பொதுப்பணி, அறப்பணி, சமயப் பிரசாரப்பணி யாவற்றையும் நன்குணர்ந்தார். அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் வழிகாட்டலில் சக்தியின் இரு ஆலயங்களில் சமயச் சொற்பொழிவாற்றினார்.

## காரைக்காலின் சொற்பொழிவால் பெற்ற பட்டமும் புகழும்

காரைக்கால் சிவாலயத்தில் 1992 ஆடிமாதப் பெருவிழாவில் 12 நாட்கள் ஆறுதிருமுருகன் அவர்கள் பேசுவதாக ஆலயத்தின் துண்டுப்பிரசுரங்களும் எல்லா நாளேடுகளிலும் ஏற்கனவே அறிவித்ததால் ஆரம்ப நாளே பக்தர் கூட்டம் பெரிதாக ஆலயத்தில் கூடியது.

சமய பேச்சு, கலைகள் நிகழ்வதற்கெனத் தொண்டர்களால் நிறுவப்பட்ட அம்பலவாணர் சுவாமிகளின் கலையரங்கில் சொற் பொழிவு நடைபெற்றது. சைவசமயநெறி பற்றி பல கோணங் களிலும் சிறப்பான தகவல்கள் பரிமாறப்பட்டன. அவரின் பேச்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தமிழ்நடை, பாரம்பரிய அணுகுமுறை, சொல்நயம், பொருள் நயம், செந்தமிழின் அழகுநடை பிரகாசிக்க இனிய சொல்வரிசையால் யாவரும் கட்டுண்டனர். தெவிட்டாத தெள் ளமுது கேட்போரை மெய்மறக்கச் செய்தது. யாவரும் வியந்தனர். பேச்சின் சிறப்பு எல்லா நாளேடுகளிலும் தலையங்கமாகவே வெளிவந்தன. தொலைதொடர்புச் சாதனங்கள் பாரெங்கும் பரவ உதவின.

பன்னிரு நாட்களின் நிறைவில் யாவரும் வியக்க ஆலயத்தின் சார்பாக தொண்டர்களின் ஒரே சிந்தனையாக உருவான "செஞ்சொற்செல்வர்" எனும் பட்டமும் பணமுடிப்பும் வழங்கிப் பொன்னாடை, மாலைகள் அணிவித்தும் பெரு மதிப்பளித்தனர்.

பட்டத்தைத் தனதாக்கி அதனை மட்டும் தன் பெயருடன் இணைத்துக் கொண்டார். தமக்குக் கிடைத்த பொன்முடிப்பை இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையினரிடம் கொடுத்து அதற்கொரு பெரிய கிடாரம் வாங்கவென அறப் பணியாக்கினார். திருமுருகனின் முதலாவது அறப்பணியும் இதுவேயாகும்.

## திருமுருகன் அவர்களின் அறப்பணிகள்

திருமுருகன் அவர்கள் உள்ளூர் அயலூர் பிற மாவட்டங்கள், வெளிநாடுகள் யாவும் விடுக்கும் அழைப்பை ஏற்று அங்கெல்லாம் சென்று தம் பணியை அழகுறச் செய்தார். கிரயம் ஏதும் வாங்க மறுத்தார். இதனால் எம்மண்ணில் தேவையான அறப்பணிகள் வளர்ந்தன. திருமுருகன் அவர்கள் நலிவுற்றவர்களை மேம்படுத்த எண்ணினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதல் இளந்தொண்டர் சபைக்கான அறப்பணி வளர்ந்தது. தமது ஞானகுருவான சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்த நாள் நிதிய அறக்கட்டளை மூலம் குருவின் நன்றிக்கடன் பெருகியது. பிறந்த மண்ணின் அறிவு வளர்ச்சிக்கான இணுவில் அறிவாலயம், மனஅபிவிருத்தி குன்றிய சிறுவர்களுக்கான சிவபூமிப் பாடசாலை முதன் முதல் கோண்டாவிலில் 2005இல் அமைந்தது. அவ்விடத்தையே தமது அறப்பணி மையமாக அமைத்து சிவபூமி அறக்கட்டளை உருவாக்கினார்.

சிவபூமி அறக்கட்டளை மூலம் சுழிபுரம் முதியோர் இல்லம், கீரிமலையில் புனித தீர்த்தமாடுவோருக்கான சிவபூமி மடம், குப்பிளானில் ஞானாச்சிரமம் மேலும்பல விடயங்களிலும் வெவ் வேறு அறப்பணி மையங்கள் உருவாக்கின. நாவற்குழி திரு வாசகப் பாடல்களனைத்தையும் கருங்கல்லிற் பதித்த திருவாசக அரண்மனையின் காவலராக சிவதெட்சணாமூர்த்தியும் சூழ வர 108 சிவலிங்க வடிவங்களும் அருள் பாலிக்கும் அரிய பெரிய ஆலய மாக உருவாகியுள்ளது. திருமுருகன் அவர்களின் அறப்பணிகளுள் இதுவே கனதியான பணியெனப் பலராலும் போற்றப்படுகிறது. இயல்பாகவே இவரின் இரக்க சிந்தனையால் அலைந்து திரியும் நாய்களுக்கோர் சரணாலயத்தை இயக்கச்சியில் நிறுவினார். யாவரும் போற்றினர். இறைவனே யாவற்றையும் செய்கிறார்.

எமது இன்றைய நவீன வாழ்வில் எம்முன்னோர் வாழ்ந்த வாழ்வு, உபயோகத்த பொருட்கள், தேடிய தேட்டம், முன்னோரின் அரசியலை நெறிப்படுத்திய மன்னர்கள், கல்வி பண்பாட்டின் ஆரம்ப காலச் சிறப்பு போன்ற பலவற்றையும் யாவரும் காணும் வகையில் காட்சிப்படுத்தி சிவபூமி அரும்பொருட் காட்சியகம் ஒன்றை 15.01.2020 அன்று நாவற்குழியில் திறந்து வைத்தார். இக்காட்சியகம் மூன்று மாடி கொண்ட அரண்மனையில் அமைந்தமை இன்றைய காலத்தின் தேவையாகும். இவை யாவும் எம்மண்ணின் பேறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவரின் பொதுப்பணியாகக் கல்வி, மருத்துவம், சமய வளர்ச்சி ஆகியவற்றின் பழைமையையும் புதுமையாக்கி யாவற்றையும் பேணிவளர உதவுகிறார். மனிதவலுவுக்கு மேலாக சித்தர்கள் சிந்திப்பது போல அரும்பணிகளைச் செய்யும் பேறு பெற்றவர். ஆறுதிருமுருகன் அவர்களின் நற்பண்பின் பேறாகத் தம்மை இப்பணிக்கு முன்செல்ல உதவியவர்களை நெஞ்சில் நிறுத்தி யுள்ளார். மண்ணின் அமைதியை நாடினார்.

முதன் முதல் தமக்கெனப் பேச்சுக்களமமைத்து உரை யாற்ற வைத்த காரைக்கால் சிவனாரையும் ஆலய பிரமுகர் களையும் தொண்டர்களையும் வணங்குகிறார். இவ்வாலயத்தில் ஏற்ற பணிச்சிறப்பால் இன்று பாரெல்லாம் புகழைத்தேடித்தந்த இறையருளை வியந்து தமது பேச்சின்போது எல்லா மேடை களிலும் காரைக்கால் சிவனாரை மனமுருகி நின்று நன்றியுடன் பிரார்த்திக்கிறார்.

மனிதநேயமும், இனிய நெஞ்சமும், சொல்லழகும், செயல்திறனும் கொண்ட ஆக்கச் சித்தராக இம்மண்ணின் நல்ல பணிகளனைத்தையும் தொட்டுத் துலக்கும் மாந்தருள் மாணிக்க மாகத் திகழ்வது எம் மண்ணின் வரப்பிரசாதமாகும்.

"அன்பே சிவம்"

## 16. அம்பலவாணர் சுவாமிகளின் இணுவில் கந்தசுவாமி கோயிற்பணி

அம்பலவாணர் சுவாமிகளின் தந்தையார் அ.கதிரித்தம்பி அவர்கள் இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தாவாக இருந்தவர். ஆலய நிர்வாக உரிமை சார்பில் நீதிமன்றில் வழக்குப் பதிவானது. இதனால் தமது சகோதரரை நியமித்ததும் விலகி விட்டார். குறுகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் மறுமை எய்தினார். இவரின் மகன் அம்பலவாணர் சிறுவனாக இருந்தார். இதுபற்றி எதுவும் தெரியா தவர். தாயாரின் ஏக புத்திரராக இருந்தவர் காரைக்கால் சிவாலயப் பரிபாலகராக 20 வயதில் நியமனம் பெற்றார். கந்தசுவாமி கோயில் பரிபாலன உரிமை பற்றி அறிந்திலர்.

இணுவில் கந்தசுவாமி கோயில் வழக்கின் ஆரம்பத்தில் இவரின் தந்தையின் பெயரை எதிரிகள் குறிப்பிட்டதால் தந்தையின் வாரிசாக இவர் பங்கு கொள்ளும் நிலை ஏற்பட்டது. நீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின் படி ஐந்து பேர் கொண்ட அறங்காவலர் சபையின் பொருளாளராக 21.09.1965இல் நியமனம் பெற்றார். நீதிமன்ற நீடிய வழக்குக் காலத்தில் ஆலய பரிபாலனம் மந்த கதியால் சேதமடைந்தது. புதிய சபை பொறுப்பேற்றதும் புனர் நிர்மாணஞ் செய்து பூசைகள், விழாக்கள் நடைபெற்றன.

இப்புனர் நிர்மாணத்தின்போது ஆறுமுகநாவலர் ஏற் கெனவே குறிப்பிட்டது போல் கருவறையில் வேல் வைத்துப் பூசிப்பதைத் தவிர்த்து முத்துக்குமார சுவாமியும் இருதேவியரையும் நிறுவ ஏற்பாடானது. வேல் அப்புறப்படுத்தும்போது வழமை யாகவே உலோகத்திலான தகடு காணப்படவில்லை. இதனால் அம்பலவாணர் சுவாமிகளுக்கு மனக்கவலை தென்பட்டது. அன்று சுவாமிகள் இறைவனை வேண்டித் தியானித்தவாறு யோக நிலையில் இருந்தார். அச்சமயம் கனவில் தோன்றிய இறைவன் உலோகத்தினாலான வேலின் கீழ் உலோகத்தினாலான தகடு வைக்காது வைரமான கல்லில் இயந்திரத்தைப் பொறித்து வைக்கும் மரபு இருந்தது. ஏற்கனவே இவ்வாலயத்தின் பொறுப் பானவர்கள் அக்கல்லினை அகற்றி மறைத்துள்ளனர் என்று தெரிவித்ததுடன் மறைத்து வைத்த யந்திரம் எழுதிய கல் இருக்கு மிடத்தையும் குறிப்பிட்டு மறைந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாட்காலை சுவாமிகள் அதனைக் கண்டெடுத்து மறு சீரமமைக்க முன்வந்தார். அக்கல்லுடன் தமது சித்து மகிமையால் உரிய யந்திரத்தையும் கீறி உரிய விதிப்படி உலோகத் தட்டில் பதித்து அனுப்புமாறு இந்தியாவிலுள்ள வேத விற்பன்னர்களிடம் அனுப்பினார். ஏற்ற முறையில் யந்திரத்தகடு வந்ததும் அவ் விடத்தில் அதனை நிறுவியதுடன் முத்துக்குமார சுவாமியின் உருவச்சிலையும் 26.08.1966இல் பிரதிஷ்டை செய்து 02.09.1966 இல் குடமுழுக்கு நன்னீராட்டு விழாவையும் நிறைவு செய்வித்தார். தொடர்ந்து மண்டலாபிசேகம் யாவும் செய்தபின் 1967 ஆனி உத்தரத்தன்று தீர்த்த விழாவும் அமைய பெருவிழாக்கள் நடை பெற்றன.

## மஞ்சத்தின் அச்சு முறிந்தது

அன்று பத்தாம் திருவிழாவில் பவனி வந்த பெருமஞ்சம் இவ் வாலயத்தின் தென்மேற்கு வீதியில் அச்சு முறிந்து தடைப்பட்டது. இதனால் யாவரும் வருந்தினர். சுவாமிகள் இணுவில் தாவடி வீ.ஐயாத்துரை ஆசாரியாரை அழைத்து வந்தார். ஆசாரியார் நன்கு பரிசீலித்ததும் வைரமான முழுப்பனையைச் செதுக்கி மஞ்சத்தின் அச்சுடன் இணைத்து வேறு சில்லுப் பூட்டி அதனை இழுத்து வந்தனர். பாதுகாப்பின் பேரில் கோபுரத்தின் வடக்கில் உள்ள பலா மரத்தடியில் நிறுத்தினர். இப்பணியில் சுவாமிகளின் வலுவுள்ள தொண்டர்கள் பலருடன் பிரபல சமய கூட்டுறவாளரும் தமிழரசுக் கட்சிப் பிரமுகருமான ச.முத்துலிங்கம் முன்னின்று சிறப்பித்தார்.

## புதிய இரும்பு அச்சு நிறுவுதல்

சுவாமிகளின் சித்தப்படி முத்துலிங்கம் அவர்கள் இவ்வூர் வர்த்தகப் பிரமுகர் சின்னத்துரை அவர்களின் அனுசரணையுடன் தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி அமைச்சர் மு.திருச்செல்வம் அவர்களின் சிபார்சின் பேரில் இலண்டனிலிருந்து உரிய அச்சு தருவிக்கப்பட்டு பெருமஞ்சத்தில் இணைக்கப்பட்டது. இவ்வச்சு ஏற்றும் பணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்த மனத்துடன் உள்ளூராட்சி அமைச்சர் மு.திருச்செல்வம் அவர்களே ஏற்று நிறுவியதும் தமது ஆசியையும் வழங்கினார். அடுத்த வருடம் இதே மஞ்சத்தில் சுவாமி வீதி வலம் வரவும் இறையருள் பாலித்தது. ஆனால் நெடிதுயர்ந்த மஞ்சம் கூடுதலான ஆட்டங் கண்டதால் அதனைப் புதுக்குவிக்கும் நிலை ஏற்பட்டது.

## மஞ்சப் புனர்நிர்மாணமும் மஞ்ச வீடு அமைத்தலும்

மஞ்சப் புனர்நிர்மாணப் பணியை ஐயாத்துரை ஆசாரியின் அனுசரணையுடன் திருநெல்வேலி கந்தசுவாமி ஆச்சாரி என்பவர் மேற்கொண்டார். மஞ்சத்தை நிறுத்தவென நிரந்தரமான கட்டடம் அமைக்க வசதியான இடம் தேவைப்பட்டது. இதனை உணர்ந்த சுவாமிகளின் நெருங்கிய உறவினரான முத்துகணேசு என்பவர் தற்போதுள்ள மஞ்சத்தரிப்பிடம் அமைந்த காணியை உவந் தளித்தார். இக்காணியில் புதிய கட்டடம் உதயமானதும் மஞ்சப் பணி தொடங்கியது.

## மஞ்சத்தில் ஏற்பட்ட மாற்றம்

ஏற்கனவே சுவாமிகளின் தீர்மானப்படி ஆசாரியார் யாவற்றையும் மதிநுட்பமாகக் களற்றினார். பெரியசந்நியாசியாரின் முற்கால அமைப்பில் மாற்றமேதுமின்றி மேலதிகமாகவும் ஆட்டம் அசை வின்றியும் பவனி வரக்கூடிய முறையில் அமைக்க ஏற்பாடானது. நெடிதுயர்ந்த பழைய மஞ்சத்தின் அடித்தளம் சிறப்பாக அமைத்து பீடத்தளவில் சுற்றிவர மூன்றடி அகலமாக விசாலித்து பீடம் அமைக்கவும் அச்சிலிருந்து நாற்புறமும் இரும்பினாலான மொத்தக் கம்பிகளும் மரங்களும் வளைவாக மேலெழுந்து பீடத்தில் அமைந்தது. சுவாமி ஏற்றும் பீடம் நாற்புறமும் விசாலிக்கப் பெற்ற நீளப்பலகைகளால் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வமைப்பு கோழிமுட்டையின் வடிவில் (இன்றைய அமைப்பு) அமைந்தது. இதற்கமைவாக மேல்மட்டத்தில் ஒடுக்கமாக இருந்த பகுதி சற்று அகன்று இன்றைய புது அமைப்பின் பேரழகைக் கொடுக்கிறது. பெரியசந்நியாசியாரின் அமைப்பின்படி உயரம் 39½ அடியில் மாற்றமில்லை. ஆட்டம் அசைவை நீக்குவதன் பேரில் அடித்தளத்தில் மேலதிக இணைப்புச் செய்யப்பட்டு வலுவூட்டப்பட்டது. இவ்வமைப்பை யாவரும் பாராட்டினர். அச்சு நிறுவவும் மஞ்சவீடு அமைக்கவும் புனரமைப்புச் செய்யவும் பிரபலவர்த்தகர் சி.சின்னத்துரை அவர்களுடன் இராசநாயகம் அவர்களும் இணைந்து நிறைவு செய்தனர். பெருவிழாக்காலப் பன்னிரண்டாம் விழாவை சின்னத்துரை அவர்களும் தைப்பூச விழா உபயத்தை இராசநாயகம் அவர்களும் செய்ய அறங்காவலர்கள் உதவினர்.

சகல சிறப்புகளும் அமைந்த புதுப்பொலிவுடன் இப் பெருமஞ்சம் 1983 இல் பவனி வந்தது. இப்பணியை முன்னின்று ஊக்குவித்து சகல ஏற்பாடுகளையும் தமது சித்துமகிமையால் நிறைவு செய்த சுவாமிகள் புதுக்கி மெருகூட்டப்பட்ட பெரு மஞ்சப் பவனியைக் காணாது 1979இல் சமாதியடைந்தார். யாவும் இறையருட் சித்தமாகும்.

## 17. சுவாமிகளின் இறுதிக்காலம்

இறைவனின் நியதிப்படி தமது இறுதிக்காலத்தையும் தமது முக் காலத்தையும் உணர்ந்த பேறாகத் தாம் சமாதியடையும் நேர காலத்தை உணர்ந்தார். நோயின் தாக்கத்தால் படுக்கையில் இருந்தவர் உரிய நேரம் வந்ததும் தியான நிலையில் சமாதி யடைந்தார். அன்றைய நட்சத்திரம் திருவாதிரையாகும். ஏற் கெனவே யாவரும் இவரின் சமாதி காரைக்காலில் அமைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென தீர்மானித்தனர். சுவாமிகள் ஏற்கனவே தமது சமாதியை காரைக்கால் வளாகத்தில் வைரவர் சந்நிதியின் கிழக்கே அமைக்குமாறு கூறியிருந்தார்.

சுவாமிகள் மகாசமாதியடைந்ததும் காரைக்காலில் உரிய இடம் தேர்வானது. சமாதிக்கிடங்கு தோண்டி சமாதிக்குத் தேவையான பொருட்களைத் தேடியும் சகல பணிகளையும் ஆயத்தம் செய்யப்பட்டது. சுவாமிகளின் மகாசமாதி 1979 தை பூசத்தன்று நடைபெறுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. நாளேடுகள் தொலைத்தொடர்புகள் மூலம் அறிவிக்கப்பட்டது. அன்றைய சமாதிச்சடங்கில் கலந்து கொள்வதன் பேரில் பற்பல இடங்களி லிருந்தும் அன்பர்கள், அனுதாபிகள் உறவினர்கள் ஏற்கனவே தமது உடல் உளப்பிணிக்காக உதவிகள் பெற்றோர் என ஆயிரக்கணக்கில் வந்து கூடினர்.

தைப்பூசத்தன்று காலை அவரின் இல்லத்தில் நடைபெற வேண்டிய சடங்குகள் யாவும் நிறைவடைந்ததும் திருவுடலை சமாதிக்கோலத்தில் பூந்தேரில் இருத்தி மலர்மாலைகளால் அலங்கரித்துத் தூப தீபாராதனையுடன் காரைக்கால் பதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின்பாகத் திருமுறைகளை ஓதிய பண்ணிசையாளர்களைத் தொடர்ந்து மிகப் பெருங்கூட்டத்தினர் தொடர்ந்தனர். அவரின் ஊர்வலம் வீட்டிலிருந்து பிரதான வீதி தாண்டி காரைக்கால் அம்பலவாணர் வீதிவழியே காரைக்காலை வந்தடைய வெகுநேரம் சென்றது.

சுவாமிகளின் மீதிருந்த பற்றுறுதியினால் யாவரும் வீதியோரம் இருமருங்கும் அமைந்த வீடுகளின் முன்னால் பூமாலைகள் போட்டும் சொரிப் பூக்களால் அர்ப்பணித்தும் தமது அன்பை வெளிப்படுத்தி அஞ்சலி செலுத்தினர். காரைக்காலில் நிறைந்த சனக்கூட்டத்தின் மத்தியில் சகல மரியாதைகளுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசமாதி வைக்கப்பட்டது. கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை பிரபல சமயப் பிரமுகர்கள் கல்விமான்கள் எனப்பலர் சுவாமிகளின் சேவைகளை வியந்து சொற்பொழிவாற்றினர். இச்சமயமத்தில் மில்க்வைற் தொழிலதிபர் கலாநிதி கனகராசா அவர்கள் சுவாமிகளின் நினைவாக மருதமரக் கன்றொன்றைக் கொண்டு வந்து உதவினார். அக்கன்று சுவாமிகளின் சமாதிக் கோயிலின் தென்கீழ் திசையில் நாட்டப்பட்டது. இன்று அக்கன்று வளர்ந்து பெரிய மருதமரமாக நன்நிழல் தருவதைக் காணலாம்.

சுவாமிகளின் சமாதியைக் கருவறையாகக் கொண்டு சமாதிக் கோயிலொன்று சுவாமிகளின் பிள்ளைகளால் நிறுவப் பட்டுள்ளது. சுவாமிகளின் பின் காரைக்கால் சிவாலயத்தில் ஆலயப்பணியாற்றும் சுவாமிகளின் மூத்த மருமகன் திரு. சோ.லோகேந்திரன் அவர்கள் இன்றுவரை சுவாமிகளின் மடாலயத் தில் விளக்கேற்றிப் பூசை செய்து வருகிறார். காரைக்கால் சிவாலய தரிசனத்திற்காக வரும் பக்தர்கள் இவரின் மடாலயத்திலும் வழிபடுவது சுவாமிகளின் மீது வைத்துள்ள பெருநம்பிக்கையை உறுதிசெய்கிறது.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

திருக்குறள் 294

## 18. பெரியசந்நியாசியாரும் அம்பலவாணர் சுவாமிகளும் ஒரே நோக்கில்....

உலகத்தை உய்விக்கவென்றே அவதரித்தவர்கள் சித்தர்கள். சித்தர்கள் போக்கு சிவன் போக்காகும். இறைவனருளால் அவதரித்த பதினெண் சித்தர்களிற் பலர் இரண்டிற்கும் மேலான இடங்களிற் சமாதியடைந்துள்ளனர். இறைவன் காட்டிய பாதையிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று இறைவனிட்ட பணிகளை நிறைவு செய்ததும் ஒரு புண்ணிய பூமியில் சமாதியடைவர். இறைவனின் நியதிப்படி சமாதியிலிருந்து அருவமாகி வேறிடத்தில் குறிப்பிட்ட இடத்தில் அவதரித்து வெவ்வேறு பணிகளை ஆற்றும் சக்தி பெற்றவர்கள் அவர்கள். முக்காலத்தையும் உணர்ந்து அதற்கமைய வாழ்ந்தவர் களென 18 சித்தர்கள் வரலாற்றில் அறியலாம்.

## பெரியசந்நியாசியார்

இதற்கமைவாகவே சிவபூமியாகிய எம்மண்ணின் பெருமையைத் துலக்கவும் எம்மண்ணிலுள்ளோரை நலமுடன் வாழவும் இம் மண்ணைப் பலவாறாகவும் வளப்படுத்தவுமே முற்காலச் சித்தர் பரம்பரையின் அங்கமாகவே பெரிய சந்நியாசியார் 1860இல் அவதரித்தார். விவசாயக் குடும்பத்திற் பிறந்து பெற்றோரின் வாழ்வுநிலையை உயர்த்தவென்றே அவதரித்தவர். இயல்பான சமய பக்தியைப் போற்றி வாழ்ந்தவர். பள்ளிப்படிப்பை நாடாது சிறுவயதிலேயே பால் என்னும் அருள்பொழியும் ஆநிரைகளை அன்புடன் மேய்க்கும் பணி ஏற்றார்.

இறையருளின் நாட்டப்படி 15 வயதில் உலகமாதாவால் தடுத்தாட் கொள்ளப்பட்டுச் சித்தரானார். இவரின் அவதாரம் சிதைந்த ஆலயப் புனர்நிர்மாணமும் வழிபட வருவோரின் பல்வகை நோய் பிணிகளை அகற்றி யாவரையும் உய்விப்பதுவுமே யாகும். இதற்காகப் பல சித்திகளையும் செய்தார். காரைக்காலில் 1008 மரங்கள் நாட்டி இம்மண்ணில் சகல பயிரினங்களும் வளம் பெறும் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தினார். ஏழுநீர்நிலைகளைத் தோற்றுவித்து எம்மண்ணில் உவர்க்கலப்பற்ற வற்றாத நன்னீர் வளத்தை ஏற்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் மண்ணின் கலை வாசனையால் பலகலைகளை யும் ஆர்வத்துடன் பயின்று கலைகள் யாவும் வளர உந்தினார். கலையின் உயர்வான சித்திரகூடமான உலகப்பெருமஞ்சத்தை உருவாக்கினார். இதன் பேறாக எம்மண்ணில் கல்வி, கலைகள், தொழில்நுட்பம் சைவப்பணி, சமுதாயப்பணி யாவும் பெருகவும் வாழ்வாதாரம் பல்வகையிலும் உயர்ந்து ஏனைய ஊர்களுடன் ஒப்பிடும்போது இணையில்லாத பெருமதிப்பைப் பெற்று "இணையிலி" என்னும் திருப்பெயரை இத்திருவூர் பெற உதவினார்.

இறையருட் சக்தியால் இம்மண்ணில் மேற்கு நோக்கிய காரைக்கால் சிவாலயத்தின் நேராக மேற்கில் சிவகாமி அம்மன் ஆலயமும் இதே நேர்கோட்டில் இணுவில் கந்தசுவாமி கோயிலும் அமைந்தன. நான்காவது ஆலயமாக மஞ்சத்தடி முருகன் ஆலயம் அமைவதற்காகவே இதன்நேர் கோட்டில் தமது சமாதியையும் தோற்றச் செய்தார். இவையாவும் இறையருட்சித்தமாகும்.

பெரியசந்நியாசியார் தாம் தோற்றுவித்த சகல பணிகளை யும் பாதுகாக்கவும் தம்பணி நிலைத்திருந்து எம்மக்களை உய்விப்பதன்பேரில் இறையருட் சித்தத்தை நாடினார் என உணரும் வகையில் தமது சகல பணிகளையும் பேணும் வகையில் மீண்டும் (சமாதியடைந்த மூன்று வருடங்களின் பின்) 1920இல் அம்பலவாணர் என்ற பெயரில் மறுஅவதாரம் பெற்றார் என்பதை யாவரும் உணரும் வகையில் அம்பலவாணர் சுவாமிகள் வாழ்ந்து காட்டினார் என்பதையும் அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய சந்நியாசியாரும் அம்பலவாணர் சுவாமிகளும்

இணுவில் கிழக்கு மஞ்சத்தடி கப்பனைப் பிள்ளையார் கோயிலின் தென்பகுதியில் பெரிய சந்நியாசியார் அவதரித்தார். அம்பலவாணர் சுவாமிகள் பிள்ளையார் கோயிலின் வடதிசையில் 03.11.1920இல் அவதரித்தார். இருவரும் அறப்பணிபோற்றும் சைவாசாரக் குடும்பத்தின் குலவிருதுகளாவர்.

அம்பலவாணர் சுவாமிகளும் ஏட்டுக்கல்வியை நாடாது ஆநிரை மேய்க்கும் பணியைத் தமது சிறுவயதில் ஏற்றவர். 15 வயதில் இறையருட் தூண்டலால் ஞானகுருவாற் தடுத்தாட் கொள்ளப்பட்டார். இறையருளும் குருவருளும் திருவருளாகி பல்கலைகளையும் பணியின் சார்பில் கற்றறிந்தார். தமது 20 ஆம் வயதில் காரைக்காலை நாடிவருவோரின் உடல் உளப்பிணி களைத் தெய்வீக உணர்வாலும் சித்த மருத்துவத்தாலும் குணப் படுத்தினார்.

பெரியசந்நியாசியாரிடம் விவசாயிகள் பலர் தொண்டர் களானது போல அம்பலவாணரிடம் வாலிபத் தொண்டர்கள் இணைந்து சிறப்பித்தனர். பெரியவர் நாட்டிய மரங்கள் நிறுவிய நீர்நிலைகளைப் பாதுகாத்தார். அவர் செய்த சகலபணிகளையும் தவறாது செய்து காட்டினார். இதனால் அருள்வாக்கும் சித்த மருத்துவமும் காரைக்காலில் நிலை கொண்டன. இருவரும் நாட்டில் சாந்தி சமாதானத்தை நிலைநாட்டிக் காரைக்காலைச் சமரசபதியாக்கினர். இருவரும் பஞ்சகாலத்திலும் அன்னதானப் பணியை வளர்த்தனர். இருவரும் சிதைவடைந்த காரைக்கால் சிவாலயத்தை புனர்நிர்மாணஞ் செய்து வழிபடவகை செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம்தவறாது பூசை, விழாக்களை உயர்வடையச் செய்தனர். இவ்வாலயத்தில் கொடித்தம்பம் நாட்டிப் பெருவிழாக் களை வளர்த்தனர். இருவரும் சமய நெறியிலும் கலைகளிலும் ஆர்வமுடையவர்கள். இருவரின் காலத்திலும் மங்கலஇசை, கரகாட்டம், காவடியாட்டம் மற்றும் இதர கலைகளும் சிறப்புடன் நடைபெற்றன. பெரியசந்நியாசியார் இணுவில் கந்தசுவாமி கோயில் பெருமஞ்சத்தை உருவாக்கினார். இதனால் யாவராலும் போற்றப்பட்டார். இப்பெருமஞ்சம் 50 வருடங்களின் பின் அச்சு உடைந்து வீதியில் தடைப்பட்டது. அம்பலவாணர் சுவாமிகள் தந்தையின் உரிமையாக கந்தசுவாமிகோயிலில் பணியாற்றினார். சிதைவடைந்த கந்தசுவாமி கோயிலைப் புனர்நிர்மாணஞ் செய்து பிரகாசிக்க வைத்தார். இச்சமகாலத்தில் பழுதடைந்த பெரு மஞ்சத்தை புதுமெருகூட்டி வடிவமைக்க வகைசெய்தார். (இப் பெருமஞ்சம் மீண்டும் பவனி வருமுன் சமாதியடைந்தார்) இப் பெருமஞ்சம் இன்றைய வடிவமைப்பில் இருப்பதை நோக்குவோம்.

இவற்றின் மூல அமைப்பில் மாற்றமில்லை. புற அமைப் பால் அழகுப் பொலிவைத்தருகிறது. இப்பணியில் சுவாமிகள் தமது உடல்பொருள் யாவற்றையும் அர்ப்பணித்த பின்பே சமாதி யடைந்தார். சுவாமிகள் சகல பணிகளையும் நிறைவு செய்வதற்கு வாழ்க்கைத் துணையை நாடினார். இதனால் சுவாமிகளின் பணி மேலும் உயர்ந்தது.

இருவரும் இயல்பால் செந்தண்மையும் யாவரிடத்தும் அன்பும் பரிவும் மிக்கவர்கள். இம்மண்ணில் யாவரும் சாந்தியும் சமாதானமும் அடைவதன் பேரிலமைந்த சமரசவாதிகள். இருவரும் இனமத பேதமின்றியே அருட்பணியாற்றி யாவரையும் உய்வித்தனர். உருவத்தால் குறுகியவர்கள் தாடியும் தலை வளர்த்துக் குடுமி கட்டியவர்கள். இருவரும் எவ்வுயிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்குநேராது அரவணைத்து வாழ்ந்து காட்டியவர்கள். முன்னவரின் குடுமி முன்வலது பக்கமும் பின்னவரின் குடுமி பின் பக்கமும் அமைந்தன. இருவரையும் யாவரும் பெருமதிப்பளித்து தெய்வம் போல் போற்றி வாழ்ந்தனர். இருவரும் சமாதியடைந்து பல்லாண்டு கள் சென்றும் எவரும் இருவர் மீதும் குறை குற்றம் காணாது புகழ்ந்து பேசும் பேறு பெற்றனர். இருவரும் வாழ்ந்து காட்டிய வாழ்க்கைநெறியால் இன்று இணுவை மண்ணை யாவரும் போற்றும் பேறு பெற்றனர். இருவரும் எம்மண்ணின் பெருமையை நிலைநாட்டிய தவசீலர்களாவர்.

முன்னவர் மஞ்சத்தடியில் சமாதியடைந்தார். பின்னவர் தம்மை நெறிப்படுத்தி உய்வித்த ஞானகுருவின் சமாதிக் கண்மையிலேயே தமது சமாதியையும் நிறுவவைத்தார். முன்ன வரால் இன்று மஞ்சத்தடிச் சூழல் எழுகோலம்பூண்ட புண்ணிய பூமியாகப் பிரகாசிக்கிறது. அம்பலவாணர் சுவாமிகள் பெரிய சந்நியாசியாரின் அடிச்சுவட்டில் வாழ்ந்து காட்டி காரைக்காலில் சமாதிவைக்கப்பட்டதால் இன்று காரைக்கால் பலவளங்களும் நிறைந்த சிவபூமி என்னும் புண்ணியபதியாகவே பிரகாசிக்கிறது. சுவாமிகள் ஏற்கெனவே பலரைத் தொண்டர்களாக அமையச் செய்தார். தொண்டர்கள் சிலர் மாறினாலும் புதிய உற்சாகமான தொண்டர்கள் தொண்டு செய்கிறார்கள். சுவாமிகள் சமாதியடைந் தாலும் யாவரையும் நெறிப்படுத்தியதால் அவர் மறைந்து 42 வருடங்கள் சென்றும் அவரால் நிறுவப்பட்ட சகல பணிகளும் சிறப்புடன் இயங்குகின்றன.

சுவாமிகளின் ஆத்மசக்தியால் ஆலயம் பெருவளர்ச்சி யடைந்து கட்டடப் பணி அன்னதானப் பணி பெருவிழாக்களுக்கான தேர், சப்பறம், கைலாயவாகனம், மஞ்சம் மற்றும் வாகனங்கள் பூசை முறைகள் யாவும் பிரகாசிப்பதை நாம் காண்பதும் இறையருளின் திருவிளையாடலேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. அம்பலவாணர் சுவாமிகளின் காலத்திலிருந்து பூசைகள் விழாக்களை அலங்கரித்த பூசகர்கள், சிவாச்சாரியார்கள்

### த.சின்னத்துரை ஐயர் (1940 - 1995)

1940இல் காரைக்கால் சிவாலயம் சிறப்படையாத போதும் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சந்நிதிகளின் நித்திய பூசைப் பணியை வீரசைவகுலத்தவரான த.சின்னத்துரை ஐயர் ஏற்றார். இவர் சிறந்த ஆசாரசீலரும் நற்பண்பும் மிக்கவர். சிவன் முதலான சந்நிதிகளில் மிக்க பணிவுடன் பூசை செய்தார். இதனால் வழிபடுவோரும் ஐயருடன் பயபக்தியுடன் உறவாடினர். இதனால் வழிபடுவோரின் அர்ச்சனை பூசைக்கான நைவேத்தியம் அர்ச்சனைப் பொருட்களையும் சிறப்பாக வழங்கினார். 1945 வரை நித்திய பூசை மட்டும் நடைபெற்றது. 1945 வரை அபிஷேகங்கள் விழாக்கள் நடைபெறவில்லை. 1945 தொடக்கம் நைமித்திய பூசைகளும் நடைபெறத் தொடங்கியது. சின்னத்துரை ஐயரின் பணிச்சிறப்பு 1995 வரை நீடித்தது. இக்காலத்தில் தம்மை வாழ வைத்த சிவாலயப் புனர்நிர்மாண வேலைகளுக்கு பொது மக்களிடம் ஆலயம் சார்பான தொண்டர்களுடன் தாமும் சென்று நிதி சேகரிக்க உதவினார். இவர் தமது 55 வருடத்தொடர் பூசைப் பணியால் இச்சூழல் அடியவர்களின் நெஞ்சில் நிறைந்துள்ளார்.

### சிவஸ்ரீ வை.சபாரத்தினக் குருக்கள் (1945 - 1994)

1945இல் காரைக்கால் சிவாலயம் வளர்ச்சி பெற்றதும் அபிசேகங்கள், விழாக்கள் செய்யும் நியதியும் கிடைத்தது. இதனால் கருணாகரப்பிள்ளையார் கோயில் பூசகராக இருந்த சிவஸ்ரீ வை.சபாரத்தினக் குருக்கள் 23 வயதில் (1945) இவ்வாலய விழாக்களைச் செய்யும் பணியை ஏற்றார். இவர் தமது தந்தையிடம் கற்ற சகல பணிகளிலும் சிறப்பாகச் செய்தார். இவரின் பண்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை விதிமுறைகளும் வயதுக்கேற்ற சிறப்புடன் அலங்காரமாக அமைந்தது. இதனால் இவர் பொதுமக்களால் நன்கு கவரப்பட்டார். வயது குறைந்ததால் இவரை யாவரும் "மைனர் ஐயர்" என அன்பு பாராட்டினர். இவர் ஆலயத்தின் அபிசேகங்கள் விழாக்களைச் சிறப்புடன் செய்தார். மேலும் இச்சூழலில் பொதுமக்களின் இல்லங்களில் நடைபெறும் சகல சமயச் சடங்குகளையும் கிரம மாகச் செய்தார். இதனால் யாவராலும் நன்கு பாராட்டப்பட்டார்.

இவ்வாலயத்தில் 1969இல் கொடித்தம்பம் நிறுவப்பட்டுப் பெருவிழாக்கள் நடைபெற்றன. யாவற்றையும் ஆகம விதிமுறை களுக்கமைய வெகுசிறப்பாக நடாத்தினார். 1948 சிவகாமி அம்மன் கோயிலின் பிரதம சிவாச்சாரியாராகவும் அரும்பணியாற்றிய இவர் குடும்ப உரிமையான கருணாகரப் பிள்ளையார் கோயிலின் ஆதீனகர்த்தராக 1960இல் பொறுப்பேற்றார். அக்காலத்திலும் இவ்வாலயப் பணியைச் சிறப்புடன் செய்தார். 1989இல் நடைபெற்ற கும்பாபிசேகத்தையும் வெகு சிறப்பாகச் செய்தார். 1945இலிருந்து 50 வருட காலம் ஆலயப் பணியைச் சிறப்பித்த குருக்களுக்கு 1994 இல் இவ்வாலயத் தொண்டர்களின் பெருமுயற்சியால் இவ்வூர்ப் பொதுமக்களின் கூட்டான சிறப்பு விழா ஏற்பாடு செய்தனர். இப்பாராட்டு விழாவில் ஆலயம் சார்பாக தங்க விருது வழங்கிப் பெருமைப்படுத்தினர். இச்சம காலத்தில் குருக்கள் ஐயா தமது 73 வயதையடைந்ததால் இவ்வாலயப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

## பிரம்மஸ்ரீ கிருஸ்ணமூர்த்தி ஐயர்

1995 யாழ் மக்களின் கூட்டாக இடம் பெயர்வால் 1996 இன் பின்பே இவ்வாலயத்தின் பூசைகள் விழாக்கள் ஆரம்பமாகின. 1996 இல் நித்திய பூசைக்கென பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐயர் நியமனம் பெற்றார். 1996 பிற்பகுதியில் நாட்டு நிலைமை சீரில்லாததால் பெருவிழாக்கால ஆடி மாதம் தவிர ஏனைய 11 மாதங்களுக்கும் வருடாந்த உதவியாக பதினோராயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. இவர் பூசைகள் மட்டும் செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராசாக் குருக்கள்

1995 முதல் 10 வருடங்கள் தொடர்ந்து அபிஷேகங்கள் விழாக்கள் செய்த பிரதம குருவாக அரும்பணியாற்றினார். இவர் பூசை விதிமுறைகள் ஆகம விதிமுறைகள் மந்திர உச்சாடனம் செய்தல் ஆகிய சிறப்பினால் யாவரையும் கவர்ந்தார். பொதுமக்களும் பெருமதிப்புடன் பழகினர். இவரின் காலில் ஏற்பட்ட வாதநோய் காரணமாக ஆலயப் பணியிலிருந்து விலகினார். இவரின் பூசைகள் மந்திரம் ஓதும் சிறப்பு தனித்துவமானது. யாவருடனும் இனிய சுபாவத்துடன் பழகியவர்.

## சிவஸ்ரீ குமாரசரவணபவக் குருக்கள்

சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்களின் பேரனாகிய சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் இளமையிலிருந்தே ஆலய ஆகம முறை கள் யாவற்றையும் சிறப்புடன் கற்றுத் தேர்ந்த குருக்களானார். இளம் வயதான போதும் இவரின் பணிச்சிறப்பால் இவரை 2005 முதல் பிரதம சிவாச்சாரியாராக இணைத்தனர். நித்திய பூசைகளை கிருஷ்ணமூர்த்தி ஐயர் செய்கிறார். சரவணபவக் குருக்கள் அபிஷேகம் விழாக்கள் பெருவிழாக்கள் யாவற்றையும் சிறப்புடன் செய்கிறார்.

சரவணபவக் குருக்கள் 2005இல் விசுவநாதர் ஆலயப் பெருவிழாக்களைச் செய்தார். இவ்வாலயத்தின் வளர்ச்சியில் விசாலாட்சி அம்மனுக்கும் திருவிழா நடைபெற ஏற்பாடானது. இதன்பேறாக அம்மன் பகுதியில் 14.12.2011 அன்று கொடிமரம் நாட்டப்பட்டது. தை அமாவாசையைத் தீர்த்த தினமாகக் கொண்ட பத்து நாள் பெருவிழாக்காலத்து கொடியேற்று வைபவம் 13.01.2012 அன்று முதன் முதல் விழா ஆரம்பமானது. சிவனின் ஆடிப்பெரு விழாவும் அம்பாளின் தை மாதப் பெருவிழாவும் இன்றுவரை தொடர்கிறது. வருடம் முழுவதும் நடைபெறும் விசேட மற்றும் பெரு விழாக்கள் யாவற்றையும் மிகச் சிறப்புடன் ஆற்றிவரும் சரவண பவக் குருக்கள் இவ்வூர் மக்கள் யாவராலும் கவரப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயச் சிறப்பில் கிருஷ்ணமூர்த்தி ஐயரின் சேவை

தற்போது இச்சிவாலய விழாக்கள் யாவும் சிறப்படைந்துள்ளன. இணுவில் கோண்டாவில் பதியில் புராதனமாக அமைந்ததால் இன்று சிறப்புடன் திகழ்ந்து யாவராலும் போற்றப்படுகிறது. இவ்வாலயத்தின் இன்றைய சிறப்பிற்கு மூர்த்தி ஐயர் பல அர்ப்பணிப்புகளையுஞ் செய்கிறார். பொதுமக்களின் வழிபாட்டு மேம்பாட்டிற்காக இவ்வாலயத்தில் வீர ஆஞ்சநேயரின் சந்நிதியை அமைக்க முன்வந்தனர். நீடிய காலம் பூசைப் பணியை ஏற்ற ஐயர் ஆஞ்சநேயர் சந்நிதி அமைக்கும் பொறுப்பை ஏற்று நிறுவியுள்ளார். இதனால் இவ்வாலயம் ஆஞ்சநேயர் வழிபாட்டிற்குப் பெருமதிப் பளிக்கிறது.

இச்சிவாலயத்தில் பிரதோச விழாக்கள் சிறப்பாக நடை பெறுகின்றன. பிரதோச மூர்த்தி பார்வதி சமேதராக உள்வீதி வலம் வருவார். மற்றும் ஒவ்வோர் வியாழக்கிழமையன்றும் தெட்சணா மூர்த்திக்கும் குரு பகவானுக்கும் விசேட பூசை நடைபெறுவதனால் வியாழன் தோறும் நூற்றுக்கணக்கான அடியார்கள் வருகை தந்து வழிபடுகின்றனர். புரட்டாதிச் சனிக்கிழமைகளிலும் நூற்றுக் கணக்கான அடியார்கள் வருகை தந்து எள் எண்ணெயத் தீபம் ஏற்றி சனீஸ்வர பகவானை வழிபடுகின்றனர். அடியார்களின் மனம் மகிழும்படியாக மூர்த்தி ஐயா அவர்கள் பூசை அர்ச்சனை என்ப வற்றைச் செய்து வருகின்றார்.

மேலும் இவ்வாலயத்தில் 1996ஆம் ஆண்டு தொடக்கம் மகோற்சவ காலத்தில் காலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை திருமுறை பாராயணம் நடைபெற்று வருவதுடன் தேர்த்திரு விழாவன்று தேர் புறப்பட்டு இருப்புக்கு வரும்வரை பன்னிரு திரு முறைப் பாடல்கள் ஓதப்படுவதும் சிறப்பம்சமாகும். இத்திருமுறைப் பாராயணத்தை கெ.தவராசா அவர்கள் நெறிப்படுத்தி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் 1940 முதல் இன்று வரை பூசைகள் விழாக்கள் யாவற்றையும் சிறப்புடன் செய்விக்கும் விசுவநாதப் பெருமானின் திருமேனி தழுவிப்பணி செய்யும் சிவாச்சாரியார் களின் அரியபணியை எம்பெருமானும் ஏற்றுள்ளார்.

## 20. காரைக்கால் சிவாலயத்தின் தொண்டர்கள்

பெரியசந்நியாசியார் ஆலயப் பணிகளை ஏற்றதும் தமது உடல் உளப் பிணி சார்புடன் இணைந்த பலர் பெரியார் தொடங்கும் அத்தனை பணிகளையுஞ் செய்தனர். இதனால் ஆலயப் பணிகளான வெளிச்சுற்று யாவற்றையும் மிகச்சிறப்பாகப் பூர்த்தி செய்தனர். 1008 மரம் நடுகை, ஏழுநீர்நிலை தோண்டல் பெருமஞ்சத்திற்கான மரங்களைத் தறித்து மஞ்சத்தடியில் சேர்த்தல் போன்ற பல கடினமான வேலைகளையுஞ் செய்தனர். பெரியார் யாவரையும் அரவணைத்து உளமார வாழ்த்தினார். யாவரும் நற்பேறு பெற்றனர். இத்தொண்டர்கள் யாவரும் விவசாயிகள். இவர்கள் செய்த அறப்பணியால் இச்சமூகமே இன்று வரை சிறப்புடன் வாழ்கின்றது.

அம்பலவாணர் சுவாமிகள் 1940இல் ஆலயப் பணி ஏற்றதும் கோண்டாவில் இளையவர் செல்லப்பா சித்தர் (சிற்றம்பலம்) செல்லர் ஆகியோர் முதுமையாக இருந்தபோதும் வேண்டிய திருப்பணிக்காக உதவியும் சகல ஏற்பாடுகளுக்கும் ஆலோசகர் களாகவும் இருந்தனர். சுவாமிகள் பத்து வருட காலமாக ஆலயப் பணிகளுடன் சகல பிணிகளுக்குமான சிகிச்சையை மேற் கொண்டார். இவர் தமது பணிசார்பாக வேறிடஞ் செல்ல வேண்டி எண்ணியவேளை இவ்வூர் ம.மகாலிங்கம் (மகான்) என்பவரின் வாடகைக்கார் மூலம் சென்று வந்தார். இதே தொடரில் வாலிபரான மகாலிங்கம் ஆலயப் பணிகளிலும் இணைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 வரையில் ஆலயப் பணிதொடங்கிய போது மகாலிங்கத்துடன் செ.இலகுநாதன் (புண்ணியம்), பொ.தியாகராசா (அழகர்), மூ.பரமலிங்கம், பரமநாதன், நாகையா, க.வேதநாயகம் உட்பட இளையோர் பலர் ஒன்றிணைந்து சகல பணிகளையுஞ் செய்தனர். ஆலயம் சிறப்படைந்தது. 1969இல் பெருவிழாத் தொடங்கியபோது விழாக்காலம் 12 நாட்களும் அன்னதானம் வழங்கவும் ஏற்பாடானது. வைரவர் கோயிலின் வாசலில் நீளமான பந்தல் அமைத்துத் தாமே சமையலையுஞ் செய்து அன்னதானப் பணியைச் சிறப்பித்தனர்.

அம்பலவாணர் சுவாமிகள் இணுவில் கந்தசுவாமி கோயிற்பணி ஏற்றதும் இத்தொண்டர் குழுவினருடன் மேலும் பலர் கூடி அப்பணிகளைச் செய்தமை யாவராலும் போற்றப்பட்டது. இதனால் சுவாமிகளின் பணி உயர்ந்தது.

சுவாமிகளின் சித்தப்படி பெருவிழா ஆரம்பிக்கப்பட்ட போது இத்தொண்டர்கள் விழாக்களின் நிறைவாகப் பூங்காவனத் திருவிழாவை மேற்கொண்டனர். இவர்கள் கூடிய செலவில் ஆடம்பரமாகச் செய்தனர். சுவாமிகளின் கோரிக்கையின் பேரில் விழாச் செய்யாது உள்வீதிக்கூரை வேலை செய்ய முற்பட்டனர். அக்காலத்தில் யாவருக்கும் தூண்டுதலாக இருந்த செ.மதியாபரணம் தாமும் கூடுதலாக உதவினார். மேலும் பலர் சகல திருப்பணி களுக்கும் தாராளமாக உதவினார். மதியாபரணம் தொடர்ந்து பூங்காவனத் திருவிழாவைச் செய்தார். இன்று இவரின் குடும்பத்தினர் செய்து வருகின்றனர்.

சுவாமிகள் சமாதியடைந்தபின் சுவாமிகளின் மருகர் சோ.லோகேந்திரனுடன் இணைந்த தொண்டர்கள் 2005 வரை சகல பணிகளையுஞ் செய்தனர். 2006 இல் அன்னதானம் வழங்கும் பந்தலின் அசௌகரியத்தினை உணர்ந்த இத்தொண்டர்கள் புதியதோர் மணிமண்டபத்தை உருவாக்க எண்ணினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.இலகுநாதன், மூ.பரமலிங்கம் ஆகியோர் டாக்டர் மூ.பஞ்ச-லிங்கம் அவர்கள் மூலம் திருமணம் மற்றும் வைபவங்களையுஞ் செய்யக் கூடிய திருமண மண்டபமொன்றை 80 இலட்சம் ரூபா செலவில் பெற்றோரான மூத்ததம்பி இரத்தினம்மா தம்பதியினரின் நினைவாக நிறுவினர். இம்மண்டபம் 17.08.2008 அன்று திறந்து வைக்கப்பட்டது. இம்மண்டபத்தில் தேரிலிருந்து இறங்கிவரும் விசாலாட்சி சமேத விஸ்வநாதரை எழுந்தருள வைத்துப் பூசைகள் ஆராதனை செய்யப்படும். இம்மண்டபத்தில் 2008 பெருவிழாக் காலம் முதல் வருடா வருட அன்னதானமும் நடைபெறுகிறது. மேலும் திருமணம் மற்றும் சமய சமூக வைபவங்களும் நடைபெறுகின்றன.

## 20.1 அனுமன் கல்லும் தொண்டரின் விளக்கேற்றலும்

பெரிய சந்நியாசியாரின் ஆரம்ப காலப் பிரதம தொண்டர் காசிநாதர் இவர் தமது சிவபக்தியால் இச்சிவாலய வெளி வாசலருகே (தற்போது ஆஞ்சநேயர் சந்நிதி அமைந்துள்ள இடத்தில்) மாலை வேளையில் தினமும் விளக்கேற்றி வைத்தவர். இதற்காக ஆறு அடி உயரமான கம்பத்தின் மீது கண்ணாடிக் கூடு அமைத்தவர். அதனுள் வைத்து விளக்கேற்ற உயரம் போதாமை யால் அருகேயிருந்த நீளமான (அனுமன்) கல்லின் மீதேறியே விளக்கேற்றுவார். தினமும் விடியும் வரை விளக்கு எரிவதற்கான தேங்காய் எண்ணெய் விட்டு விளக்கேற்றி வந்தார். இவரின் பணியால் இரவு வேளையில் இவ்வழி வருவோர் ஆலயத்தை வழிபடவும் முடிந்தது.

இவ்வரிய பணியைக் காசிநாதர் தமது இறுதிக்காலம் வரை தவறாது செய்தார். இவரின் பின் இவரின் மூத்தமகன் செல்லத்துரை இப்பணியை நாள் தவறாது செய்து வந்தார். இவர் புத்திரரில்லாதவர். இவர் மறுமையெய்தியதும் தந்தை காசிநாதர் ஆரம்பித்த பணியை அடுத்த மகன் சிவக்கொழுந்து தொடர்ந்தார். பிற்காலத்தில் இவ்வாலயத்தைத் தொல்பொருள் ஆய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்த போது இக்கல்லையும் கண்டு அதன் அற்புதத்தைக் கூறி இதனை அனுமான் கல்லெனக் கூறியதுடன் அதன் பெருமைக்காக அதன் மீது கால்படக் கூடாதெனவும் உணர்த்தினர். இதன் பின் சிவக்கொழுந்து அக்கல்லின் மீது கால்பதிக்காது வேறு உயரமான கல்லையே உபயோகித்தார்.

இதே காலத்தில் தற்போதைய பூசகர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் அனுமனுக்கு இதே இடத்தில் சந்நிதியை நிறுவினார். குறிப்பிட்ட விளக்கேற்றும் தீபக்கம்பம் சற்றுமேற்கில் ஐந்தடி உயரத்தில் அமைந்தது. சிவக்கொழுந்துவின் பின் மகன் கணேசு தொடர்ந்து பரம்பரை மாறாது ஏற்றி வந்தார். இவர் விளக்கேற்றச் செல்ல முடியாத வேளைகளில் இவரின் மகன் பவன் மாணவனாக இருந்தபோது ஏற்றிவந்தார். பெற்றோர் செய்யும் நற்பணிகளின் பயன் பிள்ளைகளையும் சந்ததி சந்ததியாகத் தொடரும் என்ற நம்பிக்கை உறுதியானதை அறிவோம். பவன் மாணவனாக இருந்தபோது சிவகாமி அறநெறிப்பாடசாலையிற் கற்றவர். அக்காலத்தில் ஏனைய பாடங்களுடன் நடனமும் கற்பிக்கப்பட்டது. பவன் ஒரு வருட காலம் சிவகாமி அறநெறிப் பாடசாலையில் நடனத்தையும் கற்றார். இவர் பிற்காலத்தில் இணுவில் மேற்கில் பெரிய தந்தையுடன் வசித்தபோது இணுவில் இளந் தொண்டர்சபை அறநெறிப் பாடசாலையிற் கற்ற காலத்தில் அங்கு தமது நடன வகுப்பைத் தொடர்ந்தார். அவ்விடத்து நடன ஆசிரியரான ந.குமரவேள் அவர்களிடம் மேலும் தொடர்ந்து நடனப் பயிற்சி பெற்றுச் சிறப்படைந்தார்.

இவரின் திறமை பல மேடைகளிற் பிரகாசித்தது. அக்காலத்தில் யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற நாட்டியமயில் போட்டியில் முதன்மை விருதையும் பரிசில்களையும் வென்றார். இச்சிறப்புடன் தமது கல்வி உயர்வால் யாழ்பல்கலைக்கழக (மருதனார்மடம்) நுண்கலைப் பீடத்தில் நடனமாணிப்பட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். இவரின் நடனக்கலையின் சிறப்பு இவரை இதே பல்கலைக்கழக நுண்கலைப்பீட நடன விரிவுரையாளர் பதவியில் இணைத்தது. இவர் மேலும் பல இலங்கை இந்திய மேடைகளிலும் பங்கேற்றுத் தமது திறமையால் பல விருதுகளையும் பரிசில்களை யும் பெற்றார். இவை யாவும் காரைக்கால் மண்ணின் சிறப்பாகும்.

இணுவில் கிழக்கைச் சேர்ந்த காசிநாதர் ஏழை விவசாயி. பெரியசந்நியாசியாரின் தொண்டர். உள்ளன்போடு இச்சிவாலயத் தில் இரவில் பிரகாசிக்கும் விளக்கேற்றிய பேறு பெற்றவர். இவரின் பிற்சந்ததியில் மூவர் வறிய நிலையிலும் காசிநாதரின் பணியைத் தொடர்ந்து வளர்த்தவர்கள். காசிநாதரின் நாலாம் சந்ததியான பவனும் விளக்கேற்றினார். தற்போது பவனின் நண்பர்களான வாலிபர்கள் இப்பணியைச் செய்கின்றனர்.

காசிநாதர் மட்டுமன்றி பரம்பரையினர் செய்த விளக் கேற்றும் நற்பணியின் பயனும் பவனின் இறைபக்தியும் நடனக் கலையின் ஊக்கமும் இத்திருவூரில் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராக கடமையாற்றிய பேறும் பெற்றார். இதனால் இக் குடும்பமே இறைவனின் பேரருளுக்கு வசமானது. இவ்வூரின் மக்கள் பலரும் அன்று முதல் வெவ்வேறு திருப்பணிசெய்தனர். யாவரும் இன்று இறையருட் சித்தத்தினால் நற்பேறு பெற்றனர். இவை யாவும் இவ்வாலயத்தின் தொண்டினால் பெற்ற பெரும் பேறாகும்.

## 21. நாதர்முடி மேலிருக்கும் நல்ல பாம்பு

இறைவனின் பிரதானமான அணிகலனாக அமைந்தது நாகாபரணம் என்பர். பாம்பு இனங்கள் யாவும் இறைவனால் அன்புடன் அரவணைக்கப்படும் பாம்புகள் யாவும் நற்பேறு பெற்றவை. ஒரு சமயம் எம்பெருமானின் சடாமுடிமீது அமைந்திருந்த ஆதி சேடனுக்கு அதன் அறியாமையால் கர்வம் ஏற்பட்டது. தேவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்கள் யாவருமே தாம் இறைவனின் முடி மீதிருப்பதைக் கண்டு பலவாறு வணங்கிச் செல்கின்றனரென மமதை ஏற்பட்டது. இதனை உணர்ந்த இறைவன் ஆதிசேடனைத் தமது கரத்தினால் வலிந்தெடுத்துத் தூர வீசி எறிந்தார். இதனால் ஆதிசேடன் வெள்ளியங்கிரியில் விழுந்ததும் அதன் தலை ஆயிரம் பிளவுகளாகச் சிதைந்தது. இதனால் பெருங்கவலையும் அவமான மும் தாங்காது ஏங்கியிருந்தான்.

அச்சமயம் அவ்வழியே வந்த நாரதர் மூவுலகையும் தாங்கும் ஆதிசேடனே ஏன் கவலையுற்றாய் என்றார். ஆதிசேடன் நடந்ததைக் கூறினான். நாரதரின் ஆலோசனைப்படி விநாயகரை விரதமிருந்து வழிபட்டான். விநாயகப் பெருமான் ஆதிசேடனின் முன் காட்சி தந்து உனது தலை ஆயிரம் பிளவுகளும் ஆயிரம் தலைகளாகப் பிரகாசிக்கும். ஐந்து தலைகளுடன் சிவனாரின் முடிமீதிருந்து அலங்கரிப்பாய் என்றருளினார். அச்சமயம் விநாயகப் பெருமான் விஸ்வரூபமெடுத்து தமது வயிற்றைக் கட்டும் உதார பந்தனமாகக் கடவாய் என்று அதனை எடுத்துத் தமது வயிற்றைக் கட்டினார் என்பதை விநாயக புராணம் தெளிவாக்கு கிறது.

பாம்பின் இனங்களின் அரசனான ஆதிசேடன் இறை வனின் முடிமீது ஐந்து தலைகளுடன் பாதுகாவலனாகவும் ஒரு தலை கொண்ட பலவடிவில் அணிகலனாகவும் அமைந்துள்ளான். விநாயகப் பெருமானின் பெருவயிற்றின் உதார பந்தனமாகவும் அமைந்ததைப் புராணங்கள் கூறுகின்றன.

சிவனுக்கும் பாம்புகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை காரைக்கால் சிவாலயத்தில் காணும் அற்புதத்தை அறிவோம். நீடிய காலமாக சிதைவடைந்திருந்த காரைக்கால் சிவாலயத்தைப் புனரமைத்து வழிபாட்டிற்கு உதவப் பெரிய சந்நியாசியார் சித்தங்கொண்டார். சுற்றுச்சூழலைத் தூய்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கச் சென்ற தொண்டர்களை இறைவனின் காவலர்கள் போன்ற பாம்பினங்கள் விரட்டின. சந்நியாசியார் இறைவனைத் தியானித்து அவற்றை அகலச் செய்ய இரு வாரங்கள் சென்றன. யாவும் சிறப்பாக அமைந்து ஆலய வழிபாடு நடைபெற்றது என்பதை முன்னர் அறிந்தோம். அக்காலத்தில் அவ்வாறு அகன்று வேறிடஞ் சென்றாலும் மூல இலிங்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தியிருந்தன. அக்காலத்திலும் இவ்வாலயத்தில் வழிபடுவோரெவருக்கும் தீங்கு களேதும் செய்யாது.

இதே பாம்பினங்கள் காரைக்கால் சூழல் தவிர்ந்த பிற இடங்களில் தம்மைத் துன்புறுத்துவோரைத் தீண்டி வந்தன. அன்று பெரியசந்நியாசியார் தம்மிடம் வருவோரின் விஷகடியை மாற்றினார். அதுபோலவே அம்பலவாணர் சுவாமிகள் வெளியிடங்களிலிருந்து வரும் விஷகடி நோயாளிகளைக் குணமாக்கினார். மேலும் சுவாமிகள் தமது ஞான நோக்கில் அறிந்தே நாகதம்பிரானுக்கெனக் கோயில் கட்டுவித்தார். அதன் பெருக்கம் இரண்டாவது அமைவிடமும் கட்டி வழிபாடு நடைபெறுகிறது.

இறைவனுக்கும் அரவுகளுக்குமிடையிலுள்ள உறவும் நட்பின் உறவாடலும் இன்று அற்புதமாகவே அறிய முடிகிறது. இன்றைய சிவாச்சாரியாரான கிருஷ்ணமூர்த்தி ஐயர் வந்த காலம் (1996) முதல் இது வரை இத்தொடர்பைப் பலமுறை அறிந்ததாகக் கூறுவர். தமது பூசை வேளை தினமும் பூசை செய்வதுடன் மதியவேளை பால் அமுது வழங்கும் நியதியுடையவர். இதனால் அரவுகளுக்கும் தமக்கும் உறவு தொடர்வதாகவே கூறுகிறார். பகல் வேளையில் மூல இலிங்கப் பெருமானுக்குப் பூசையின் போது மாலைகள் அணிந்து விடுவார். மாலை நேரப் பூசைக்கு வரும் போது மாலைகள் கீழே விழுந்திருக்கும் மாலை அணிந்த இடங்களில் அரவம் சூழ்ந்திருக்கும் இலிங்கத்தின் மேல் பகுதியிலும் அவை காட்சியளிக்கும். தாம் அவற்றை விலக்கி விட்டே பூசை செய்வாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை முடிந்ததும் வழமைபோல திரை போட்டிருப்பார். மாலையில் அத்திரையை அகற்றினால் அரவங்கள் கீழே விழும் உட்புறக் கதவுகளிலும் தொங்கி நிற்குமாம். தாம் தமது கடமைகளைச் செய்யும் போது தமக்கு தீங்குகளோ இடை யூறுகளோ செய்யாததால் யாவற்றையும் நோக்காது விடுவர். மூர்த்தி ஐயர் தினமும் பால் வாங்குவதற்காக வடக்கிலுள்ள வீடொன்றிற்குச் செல்வார். இடையிடையே மூன்றடி நீளமுடைய குறுகிய பாம்பு வந்து வாசலில் நின்று படமெடுத்துச் சென்றதாம். வாரமொரு முறையேனும் அயல் ஒழுங்கையால் சாதாரணமாகச் செல்லும். அயலவர்கள் மற்றும் ஆலய வழிபாட்டிற்கென வருவோர் எவரும் இதனால் அச்சமடைவதுமில்லை. அவற்றுக்குத் தீங்கு செய்வதுமில்லை.

அண்மையில் ஒரு நாள் இவ்வாலயத்தின் தென்பாலுள்ள ஒரு தோட்டத்தில் விவசாயி வேலை செய்யும் போது ஒரு குறுகிய பாம்பு உலாவியது. அவ்விவசாயி இறைவனை வேண்டிய வண்ணம் உரப்பையொன்றை அருகே வைத்ததும் அது பையினுள் நுழைந்தது. அதனை அவர் எடுத்துச் சென்று நாகதம்பிரான் சந்நிதியில் ஒரு புற்றருகே விட்டதும் அது புற்றினுட் புகுந்து விட்டது.

பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்ற முதுமொழி இருந்தது. காரைக்கால் சிவாலயத்தின் அற்புதத்தையும் இங்கு குடி கொண்ட இறைவனின் அணிகலனான அரவங்களையும் நோக் கினால் யாவும் வழிபடுவோர் மற்றும் இச்சூழல் மக்களின் உறுதுணை என்றே கூறலாம். யாழ் மண்ணில் எங்குமே காண முடியாத படி காரைக்காலில் இரு சந்நிதிகளில் நிறைவான புற்றுக் கோயிலில் அவை உறைந்துள்ளன. யாவும் பரமாத்மாவான காரைக்கால் விசுவநாதப் பெருமானின் சீவாத்மாக்கள் இப் பாம்புகள். அடுத்தவர்களின் பார்வைக்குக் கொடிய விஷப்பாம்பு களாகத் தோன்றினாலும் யாவும் பக்தர்கள் எவருக்கும் தீங்கு செய்யாத நல்ல பாம்புகளேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிட்டது போல ஆதிசேடன் தமது அறியாமை யால் மமதை கொண்டாலும் விநாயகப் பெருமானால் ஆசீர்வதிக் கப்பட்டதால் இறைவனின் அணிகலனானார். நாதர்முடி மீது ஐந்து தலைகளுடன் படம் விரித்தாடினாலும் இறைவனருளால் யாவும் நல்லனவையே. இறைவன் தமது பெருங்கருணையால் மனிதர் முதல் விலங்குகள் ஊர்வன, பறப்பன முதலான பல்லினங் கொண்ட யாவும் சீவாத்மாக்களே. ஆண்டவன் படைப்பில் யாவும் எதுவித மன வேற்றுமையின்றி உலகமாதாவின் பிள்ளைகளாக ஒரு மனத்துடன் பழகுவதை இங்கு நோக்கலாம். இவ்வற்புதங்கள் நிறைந்த காரைக்கால் சூழலில் வாழும் எவரையோ வெளியிடங் களிலிருந்து வருபவர்களையோ நாதர் முடிமேலிருக்கும் நல்ல பாம்பு தீண்டுவதில்லை. இவை யாவும் பெரியசந்நியாசியாரின் சேவைக்காலம் முதல் இன்று வரை இவற்றினால் எவரும் பாதிக்கப்படவில்லை என்பதை இவ்வாலயச் சிவாச்சாரியாரின் சான்றுடன் பதிவு செய்யலாம். இங்குள்ள யாவரும் மன நிறைவுடனும் இறைபக்தியு டனும் வாழ்வது சிவன் செயலாகும்.

## 23. நிறைவாக

காரைக்கால் சிவாலயம் மிகப்புராதனமான திருத்தலமாகும். இவ்வாலயத்தின் வடக்கு, கிழக்கு, தெற்குப் புறங்களில் ஊர் எல்லையின் சிறு வீதிகள் அமைந்துள்ளன. மேற்கில் இவ் வாலயத்திற்கும் தேரின் தரிப்பிடத்திற்கும் இடையே பிரதேச சபையின் வீதியொன்று ஊடறுத்துச் செல்கிறது. இவை யாவும் உட்பட 62 பரப்புக்காணி ஆலயத்தின் உடைமையாகும். பெரிய சந்நியாசியார் காலத்தில் மூலலிங்க அமைப்பும் விசாலாட்சி அம்மன் சந்நிதியும் நந்திபலிபீடம், கொடிமர அமைப்புடன் புறத்தே மாரியம்மன் மற்றும் வைரவர் சந்நிதிகள் மட்டும் அமைந்திருந்தன. ஆலய சிவாச்சாரியாரின் வதிவிடமும் மடப்பள்ளியும் இவ்வாலயத் தின் தென்மேற்கில் அமைந்த முற்கால அமைப்புகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலவாணர் சுவாமிகளின் ஆலய புனரமைப்பில் விநாயகர், முருகன், நவக்கிரக சந்நிதிகளுடன் தெற்கில் அம்மன் வாசல் நந்தி பலிபீடம், கொடிமரம் நாட்டும் இடமும் அமைந்தது. சுவாமிகள் நாகதம்பிரானுக்கும் புதிய சந்நிதி எழுப்பினார். சுவாமிகளின் பிற்காலத்தில் நந்தகோபாலர் சந்நிதியும் வீர ஆஞ்சநேயர் சந்நிதியும் ஆரம்பிக்கப்பட்டன. அம்மன் வாசலில் கொடிமரம் நாட்டிப் பெருவிழா 13.01.2012 முதல் நடைபெறுகிறது. பெரிய சந்நியாசியாரின் மடப்பள்ளி தொடர்ந்து பாவிக்கப்பட்டது.

இவ்வாலயத்தில் ஆடித் திருவோணத்தன்று தீர்த்த விழா அமையத்தக்கதாக 12 நாட்கள் மகோற்சவம் நீடியகாலமாக நடைபெறுகிறது. 2012 முதல் தை அமாவாசையில் தீர்த்த விழாவாக அமையும் பத்து நாள் மகோற்சவம் அம்பாளுக்கு நடைபெறுகின்றது.

அம்பலவாணர் சுவாமிகள் 1969 முதல் கட்டுத்தேரில் சுவாமியை எழுந்தருளச் செய்தார். தொண்டர்களின் ஆர்வமும் பொதுமக்களின் உதவியும் சிறக்க 2010 புதிய சித்திரத்தேர் பவனி வந்தது. இவ்வாலயத்தின் உபயகாரர்களான அப்பையா குடும்பத்தினர் பெரிய சப்பறத்தை 2012இலும், கதிரவேலு அசுவதி குடும்பத்தினர் கயிலாய வாகனத்தை 2012இலும், செல்லத்துரை குடும்பத்தினர் அம்மன் வீதியுலாவுக்கான மஞ்சத்தையும் 2019இலும் இயம சங்காரத்திற்கான வாகனங்களை 2016இலும் செய்து வழங்கினர். மேலும் எலி, இடபம், மயில், குதிரைகள், மூன்று சிங்கம், புலி, அன்னம், இடும்பன், இரு சர்ப்ப வாகனங் களையும் பக்தர்கள் உபயமாகச் செய்துள்ளனர்.

பெரியசந்நியாசியாரால் ஆரம்பிக்கப்பட்ட குழைசாதமும் அன்னதானமும் அம்பலவாணர் சுவாமிகளின் காலத்திலும் நடை பெற்றது. சுவாமிகளின் காலத்தில் வைரவர் கோயில் வாசலில் நீளமான தட்டிப் பந்தல் அமைத்து 1969 - 2007 வரை அன்னதானம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளின் காலத்திலேயே ஆலயத்தின் இன்றைய உள் அமைப்புகள் சிறப்பாக அமைந்தன. அன்று முதல் தொண்டர் களின் பெருமுயற்சியாலும் பக்தர்கள் விழா உபயகாரரின் பேருதவியாலும் ஆலயம் முழுவதும் இன்றைய நிலைக்குத் திருத்தியமைக்கப்பட்டது.

பெரிசந்நியாசியாரினால் அமைக்கப்பட்ட மடப்பள்ளி இன்று பாவனையில் இல்லை. 2007 வரை பெருவிழாக்கால அன்னதானத்திற்கான சமையல் இங்கு நடைபெற்றது. 2008 முதல் மாரியம்மன் ஆலயத்தினருகே இப்பணி நடைபெறுகிறது. சுவாமிகளின் காலத்தில் அவரின் பாவனையிலிருந்த மருந்துச் சாலை அவரின் தங்குமிடம் மற்றும் மருத்துவமனையின் நீட்சியான 40 அடி நீள மான மண்டபமும் அகற்றப்பட்டுள்ளன. பெரிய சந்நியாசியாரால் நாட்டப்பட்ட 1008 மரங்களில் 120 மரங்களே எஞ்சியுள்ளன. இம் மரங்களும் பாதுகாப்பின்றியே காணப்படு கின்றன. இன்றைய பராமரிப்பாளர் புராதனமான இவ்வாலயத்தின் எதிர்காலத்தைச் சிந்தித்துச் செயற்படவேண்டியது அவசியமாகும்.

இவ்வாலயத்தில் அமைந்துள்ள மூலலிங்கத்தின் மகிமை யால் தற்போது கூடுதலான மக்கள் வந்து வழிபடுகின்றனர். இவ்வூரிலமைந்த ஏனைய கோயில்களிலும் கூடுதலான மக்களின் வரவால் பிரதி வியாழக்கிழமைகள், பிரதோசகாலம் மிகச் சிறப்படைகின்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் வீர ஆஞ்சநேயர் புதுமையானவர். பல அடியார்களை ஈர்க்கிறார்.

இவ்வாலயத்திலுள்ள நாகதம்பிரான் (புற்று) ஆலயம் மிக அற்புதமானது. இப்பாம்புகள் எந்தநேரமும் மூலலிங்கத்தைத் தழுவிச் செல்வதை சிவாச்சாரியார் தெரிவித்தார். மூன்றடி நீள மான குறுகிய பாம்புகள் இச்சூழலில் உலாவருகின்றன. இவை இச் சூழலில் எவரையும் தீண்டுவதில்லை. இவையாவும் இறைவனின் சித்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புராதன சிவாலயத்தைப் புனர்நிர்மாணஞ் செய்து எம் மக்களின் வழிபாட்டிற்கு உதவவும் எம்மவரின் உடல் உளப் பிணியகற்றி எம்மை வளப்படுத்தவே அவதரித்தவர் பெரிய சந்நியாசியார். 15 வயது வரை மாடுகளை மேய்த்தவர் மாரியம்ம னால் தடுத்தாட் கொள்ளப்பட்டார். சிவாலயத்தை புனர்நிர்மாணஞ் செய்தார். சித்துமகிமையால் ஆலய வழிபாட்டை ஆரம்பித்ததால் இணுவில் திருவூரில் அமைந்த 21 ஆலயங்களும் கோண்டாவி லிலும் பல ஆலயங்களும் இன்று சிறப்படைந்துள்ளன.

பெரியசந்நியாசியார் ஆரம்பகாலத்தில் மாடுகளை மேய்த் தார். காரைக்கால்ச் சூழலை நிலம் திருத்தி 1008 மரங்கள் நாட்டி னார். ஏழு நீர்நிலைகளைத் தோண்டினார். மக்களுக்குத் திரு நீறிட்டும் மூலிகை மருந்து மூலமும் பிணியகற்றினார். கலை ஆர்வமிகுதியால் நாட்டார் பாடல் காவடி ஆட்டத்தைப் பயின்று ஆலயங்களில் ஆடியும் பாடியும் இன்புற்றார். உலகப் பெரு மஞ்சத்தை நிறுவினார். மக்களை பாவச்செய்கைகளை நாட விடாது அன்பு என்னும் நற்பண்பை நிலைநாட்டினார். சிறார் களைக் கல்வி கற்குமாறு ஊக்குவித்தார். இதன்பேறாக இணுவில் வடிவேற் சுவாமிகள் பெரியாரின் தூண்டுதலால் உத்தம புத்திர ராகப் பிரகாசித்தார்.

பெரிய சந்நியாசியார் சமாதியடைந்த மூன்று வருடங்களின் பின் அவதரித்த அம்பலவாணர் சுவாமிகள் பெரியாரின் மரபினர். அயலவர் அவரின் சகல பணிகளையும் நன்கு கேட்டறிந்தவர். இவர் பெரியார் புரிந்த சகல பணிகளையும் அடியொற்றிச் சித்தர் பரம்பரையைத் துலக்கியவர். ஆரம்பகாலம் முதல் இணைந்த தன்னார்வத் தொண்டர் பரம்பரையை வளர்த்தவர். ஆரம்பகாலத் தொண்டர்கள் சிலர் விலகியபோது பல இளைய சமுதாயம் இறை பணியை அணி செய்தனர். அம்பலவாணர் சுவாமிகள் 1979இல் சமாதியானபோது உடனிருந்த தொண்டர்கள் அவரின் பணியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலக்கினர். சுவாமிகளின் சித்தப்படி அன்னதானப்பணி ஆலயப் பணி மேலோங்கியது. இவர்களுட் சிலர் முதுமை காரணமாக விலகினாலும் ஆனந்தன், தயானந்தன் ஆகியோரின் அரவணைப் பில் இளந்தலைமுறையினர் இன்றுவரை சகல பணிகளையும் தொய்ய விடாது செயற்படுகின்றனர்.

சுவாமிகளின் சித்தப்படி மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டிய நியதியைச் சுவாமிகளின் பிற்காலத்தில் பல சிறப்புகள் நடைபெற்றன. அன்னதானத்துடன் திருமணம் போன்ற நிகழ்விற் கான நவீன மண்டபம், புதிய சித்திரத்தேர், கயிலாய வாகனம், சப்பறம் மற்றும் வாகனங்கள் வேண்டிய தளபாட வசதிகள், ஆலயப் புனர்நிர்மாண வேலைகள் யாவும் அமைந்தன. சுவாமி களின் சித்தப்படி அம்மன் வாசல் கொடித்தம்பம் நாட்டி தை மாதத்தில் 10 நாட் பெருவிழாக்கள் நடைபெற்றன. இதன் பேரில் இறையருட் சித்தமும் சித்தர்களின் ஆசீர்வாதமும் பொதுமக்களின் நிலையான பக்தி மார்க்கமும் அன்றைய, இன்றைய சுறுசுறுப்பான தொண்டர்களின் சிறப்பான பணியாய் அமைந்தன.

இதன் பேறாக இவ்வாலயத்தில் இன்று வருடம் முழுவதும் பூசைகள், விழாக்கள், பெருவிழாக்கள், சமய நிகழ்வுகள் இவ்வூர் ஏனைய ஆலயங்களிலும் சிறப்பாக நடைபெறுவது விசுவநாதப் பெருமானின் பேரருளாகும்.

இன்றைய அகால நோய்த் தாக்கத்தால் விழாக்கள் நன்கு பிரகாசிக்காவிட்டாலும் இவ்வருடம் பக்தர்கள் வழமைபோல் பக்தி பூர்வமாகச் சகல பெருவிழாக்களிலும் அமைதியாகவும் சிறப் பாகவும் கொண்டாட வகை செய்த இறையருளைப் போற்றுவோம்.

பெரியசந்நியாசியார் வாழ்ந்து காட்டிய பாதையில் இன்று இணுவில் கோண்டாவில் மற்றும் அயற்கிராமங்கள் கால்நடை வளம், நிலவளம், நீர்வளம், பயிர்வளம், இதர தாவரவளம், சுகவாழ்க்கை வளம், நிதிவளம், இறைபக்தி வளம், கல்வி கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம் யாவும் சிறப்படைந்ததை யாவரும் அறிவர். இம்மண்ணில் சித்தரின் அவதாரத்தால் இன்று என்ன இல்லை என்று கூறும் வண்ணம் யாவும் வளப்பெருக்கத்தால் நிறைந்துள்ளன. இச் சூழலில் பெரியாரின் பணியான விவசாயத்தில் எமது மக்கள் அயராதுபணி செய்து தமது வாழ்வைப் பெருக்கியுள்ளனர்.

சைவமும், தமிழும் ஆயகலைகளும், வாழ்வாதாரப் பணிகளும், சிறார்கள் நற்கல்வியுடன் பல்சுவைக் கலைகளும் கற்பதில் ஆர்வம் காட்டியதால் இவ்வூர் யாவரும் போற்றும் வண்ணம் பிரகாசிப்பது பெரியசந்நியாசியார் என்னும் சித்தரின் மகிமையால் எனலாம். இப்பெரியாரின் அற்புதங்களை நோக்கிய இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தினர் இவர் சமாதியடைந்த நூற்றாண்டு விழா நிறைவான 2017 முதல் 2018, 2019, 2020, 2021 ஆகிய ஐந்து வருடங்களாக (2021 வரை) தொடர்ந்து பெரியாரின் சாதனைகளுடன் தொடர்புடைய நூல்களை வெளியிட்டுச் சிறப்பான விழா எடுக்க இறையருள் பாலித்தது. 104ஆம் விழாவாகிய இவ்வருடம் 2021 சித்திரைத் திருவோணத்தில் பெரியசந்நியாசியார் 15 வயதில் மாரியம்மனால் ஆட்கொள்ளப் பட்டதையும் புனர்நிர்மாணஞ் செய்த புராதன சிவாலயத்தின் வரலாற்றையும் எழுதி வெளியிட உந்திய இறையருளின் சார்பாகப் பெரியசந்நியாசியாருக்கும் அம்பலவாண சுவாமிகளுக்கும் இம் மலரைச் சமர்ப்பணஞ் செய்வதில் மனநிறைவடைகிறேன்.

என் கடன் பணி செய்து கிடப்பதே.

**நூலாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழாக் காட்சிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவிழாக்காட்சிகள்



தேர்த்திருவிழா




யமசங்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசலில் அமைந்த மரத்தடி லிங்கம்



ஆஞ்சநேயர் சந்நிதி




அனுமன் கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் ஆலயம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் சந்நிதி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் ஆலயம்







நாகதம்பிரான்
(புற்றுக்கோயில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சந்நியாசியாரால் நிறுவப்பட்ட மடைப்பள்ளியும்
சிவாச்சாரியாரின் வதிவிடமும் (இன்றைய தோற்றம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பலவாணர் சமாதி



## அம்பலவாணர் அரங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. இணுவில் - கோண்டாவில்

## காரைக்கால் விஸ்வநாதசிவன்

## திருவூஞ்சல்

**(ஆக்கம் : கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை)**

காப்பு

சிவநெறியும் செந்தமிழும் செழித்தே வாழும்
திருவிடமாம் ஈழவள நாட்டில் மேலோர்
தவவிரத சாதனையில் தலைமை பூணத்
தகுமிணுவில் கோண்டாவில் சார்ந்தே யார்க்கும்
பவமகற்றும் காரைக்கால் பதியில் தொண்டர்
பரவுவிஸ்வ நாதர்மேல் ஊஞ்சல் பாடக்
கவளமத கடகளிற்று ஞான பானு
கணபதியின் இணையடிகள் காப்பதாமே.

**நூல்**

இருக்குயசுர் சாமவதர் வணநூல் வேதம்
இயைந்திடுநல் வைரமணித் தூண்கள் நாட்டி
திருத்தகுசீர் உபநிடத விட்டம் பூட்டிச்
சிந்தைமகிழ் கலைஞானக் கயிறு மாட்டிப்
பெருகுமருட் பிரணவமாம் பீட மேறி
பிரபைவிசா லாட்சியருட் சக்தி யோடு
விருதுதரு காரைக்கால் பதியில் மேவும்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 1

விரிபுவன மீதிலருள் வாழ்வு காண
விரும்புமடி யாருளமாம் கோயில் தன்னில்
சரியைகிரி யாயோக ஞான மார்க்கம்
சார்த்திடுநாற் பாதமென்னும் கால்க ளாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியமறை யாகமத்தை விட்ட மாக்கி
அன்புவடம் மாட்டியருட் பீட மேறி
விரிமலர்சேர் காரைக்கால் பதியில் மேவும்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 2

தும்புருநா ரதர்சாம கானம் பாடத்
தூபமிகு தீபமுடன் முனிவர் கூட
நம்பனருள் நந்திபெரு முழவு கொட்ட
நாற்றிசையும் போற்றியிசை நாத மெட்ட
உம்பரொடு அரியயனும் வடந்தொட் டாட்ட
உமைவிசா லாட்சியருட் பார்வை கூட்ட
வெம்புவினை தீர்காரைக் காலில் மேவும்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 3

ஆலமுண்டு தேவர்களுக் கமுத மூட்டி
அடியவரின் மிடியகற்றும் பாங்கு காட்டி
நீலகண்டத் தோடுமணிப் பீட மேறி
நினையுமடி யவர்துயரக் கடலை நீக்கிக்
கோலமயில் ஆடிடுமாஞ் சோலை யூடே
கொலுவிருந்தே குயில்களிசை பாட ஆடும்
வாலறிவன் காரைக்கால் பதியில் மேவும்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 4

பங்கயத்தோன் முதற்றேவர் வடந் தொட்டாட்ட
பாரளந்த மால் முதலோர் ஆல வட்டம்
செங்கரத்தி லேந்தஇரு மருங்கும் நின்றே
திருமகளும் கலைமகளும் கவரி வீச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிதமாய்க் கின்னரர்ஏழ் இசைகள் பாட
இந்திரனார் வெண்கொற்றக் குடை கவிக்க
வெங்கொடிய பிணிபோக்கும் காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 5

சடையாடப் பிறையாடக் கங்கை ஆடக்
செங்கரத்தி லக்கினியும் சேர்ந்தே யாட
இடையாட மான்மழுவும் இசைந்தே யாட
எழில்மார்பில் முப்புரிநூல் இலங்கி யாட
அடையாத அருளமுதை அள்ளி யுண்ணும்
அன்பருள ஊஞ்சலிலே அசைந்தே யாடி
விடையேறி நடமாடும் காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 6

ஐம்பூத முதல்யாவும் ஆட ஆட
ஐந்தொழிற்கும் காரணர்கள் அவரு மாட
தும்பிமுக னோடுதம்பி முருக னாடத்
துடியிடையாள் விசாலாட்சி அம்மை யாட
நம்புமடி யவர்மிடியும் வினையு மோட
நல்லடியார் மனவூஞ்சல் மீதி லாடி
வம்புநற மலர்ச்சோலைக் காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 7

அம்மாவென் றழுமடியார் துயர்கள் தீர்க்கும்
அன்னைசிவ சக்தியருள் மாரி ஓர்பால்
இம்மைவினை வலிதீர்த்து ஞானம் நல்கும்
ஐங்கரனோ டறுமுகனாம் முருகனோர் பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்புபவர் பிணிதீர்க்கச் சூல மேந்தும்
வித்தகனாம் ஞானவயி ரவரும் ஓர் பால்
வெம்பகைகள் வெகுண்டோடும் காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 8

அந்தணர்கள் வேதஇசை பாடி ஏத்த
அடியவர்கள் கீதஇசை கூடி யாட
சிந்தையெலாம் சிவப்பொலிவுச் செம்மை தேக்கி
செய்வதெலாம் சிவனுக்கே சேவை யாக்கிச்
செந்தமிழ்ப்பா வலர்நிறைசொற் கவிதை பாட
தெய்வமணங் கமழிணுவைப் பதியின் கீழ்பால்
வந்தவினை வெந்துமடி காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 9

முக்கண்ணுடைப் பிரானாரே ஆடீர் ஊஞ்சல்
முழுமுதலாய் உள்ளவரே ஆடீர் ஊஞ்சல்
தக்கன்மகம் தகர்த்தவரே ஆடீர் ஊஞ்சல்
சர்வவினை தீர்ப்பவரே ஆடீர் ஊஞ்சல்
அக்கமணி மாலையினீர் ஆடீர் ஊஞ்சல்
அன்னைவிசா லாட்சியுடன் ஆடீர் ஊஞ்சல்
விக்கினங்கள் தீர்த்தருளும் காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல். 10

**"வாழி"**

அந்தணரும் அருமறையா கமமும் வாழி
ஐந்தெழுத்தும் அருணூலும் வாழி வாழி
சிந்தை நிறை மங்கையர்கள் கற்பும் வாழி
சிவனடியார் திருக்கூட்டம் வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழும் சிவநெறியும் சேர்ந்து வாழி
செம்மைதரு வான்மழையும் வாழி வாழி
விந்தைவிசா லாட்சியுடன் காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரும் வாழி வாழி.

## "எச்சரிக்கை"

தில்லையிலே நடமாடும் தேவ எச்சரிக்கை
செம்பவளத் திருமேனிச் செல்வா எச்சரிக்கை
எல்லையில்லா வல்லமையே எந்தாய் எச்சரிக்கை
இருவினைப் பிறப்பறுக்கும் மருந்தே எச்சரிக்கை
நல்லருட்பே ரின்பமய ரூபா எச்சரிக்கை
ஞானமய மானகண நாதா எச்சரிக்கை
வல்லபை யருள்பெருகு காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே எச்சரிக்கை.

## பராக்கு

திருமருவு மிணுவை நகர்த் தேவே பராக்கு
சித்தியொடு முத்திதரு செல்வா பராக்கு
அருவுருவ மாகியருள் அமலா பராக்கு
அம்மையுமை யாளின்மண வாளா பராக்கு
அருமறை ஐம்பூதமுத லானாய் பராக்கு
அப்பனென எப்பரமும் ஈவாய் பராக்கு
விருதருறை காரைக்கால் பதியில் மேவும்
விஸ்வ நாத சிவனாரே பராக்கு.

## "லாலி"

சொற்பதங் கடந்தவற்கு லாலி சுபலாலி
துரியாதீத மானவர்க்கு லாலி சுபலாலி
கற்பனைக் கெட்டாதவற்கு லாலி சுபலாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜமுகனைத் தந்தவற்கு லாலி சுபலாலி
சற்குருவாய் வந்தவற்கு லாலி சுபலாலி
சகலலோக நாயகற்கு லாலி சுபலாலி
வெற்றிதரு சித்தருறை காரைக் காலில்
விஸ்வநாத சிவனார்க்கு லாலி சுபலாலி.

**"மங்களம்"**

தேவ தேவ சங்கரற்கு மங்களம்
தேவியுமை பாகருக்கு மங்களம்
பாவவினை அறுப்பவற்கு மங்களம்
பரமஞான சிற்பரற்கு மங்களம்
ஆலம் உகந்தவற்கு மங்களம்
அம்பல வாணருக்கு மங்களம்
சூலம் தரித்தவற்கு மங்களம்
சோதி மயமானவற்கு மங்களம்
விண்ணோர்க்கரியவற்கு மங்களம்
விரும்புமன்பர்க் கெளியற்கு மங்களம்
கண்மூன்று டையவர்க்கு மங்களம்
காரைக் கால் நாதருக்கு மங்களம்
வெண்ணீறணிந் தவற்கு மங்களம்
விசாலாட்சி நாதருக்கு மங்களம்
விண்ணோர் தலைவருக்கு மங்களம்
விஸ்வநாத சிவனார்க்கு மங்களம்

வணக்கம்

**இணுவில் - கோண்டாவில்**
**காரைக்கால் விஸ்வநாதசிவன்**
**திருவூஞ்சல் முற்றிற்று.**

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த நூலாக்கத்திற்கு உதவிய சான்றுகள்

1. இணுவை அப்பர் (பண்டிதர் கா.செ.நடராசா)
2. சீரிணுவைத் திருவூர் (2004) இணுவில் சைவத்திருநெறிக்கழக வெளியீடு)
3. இணையிலி (2013) மேலது
4. காரைக்கால் வரலாறு சார்பான கட்டுரை (1998) கலாபூஷணம் செல்லப்பா நடராசா
5. பஞ்சவர்ணத்தூது (2007) தொகுப்பு - தமிழவேள் இ.க.கந்தசுவாமி
6. பேராசிரியர் செ.கிருஷ்ணராசா எழுதிய ஆய்வு அறிக்கை - வீரகேசரி வெளியீடு 23.01.1994
7. விக்கிபீடியா - காரைக்கால் (இணையதளம் www.karaikal )
8. காரைக்கால் விசுவநாதர் சிவன்கோயில் வரலாறும் திருவூஞ்சலும் (08.03.1979) சைவப்புலவர் சு.செல்லத்துரை
9. பேராசிரியர் சபா.ஜெயராசா வழங்கிய முக்கிய தகவற் குறிப்புகள்
10. சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள் வழங்கிய ஆலய மூர்த்தி களின் அமைப்பு
11. பிரம்மஸ்ரீ ம.கிருஷ்ணமூர்த்தி சர்மா (ஐயா) வழங்கிய ஆலயத்தில் உலாவரும் பாம்புகள் பற்றிய விடயம்
12. சி.கணேசு வழங்கிய தகவல் (அனுமன் கல்லும் விளக்கேற்றலும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் முன்னைய ஆக்கங்கள்


1. அறநெறிக்களஞ்சியம் .................... 2003
2. சீரிணுவைத் திருவூர் .................... 2004
3. திருமுறைத் தோத்திரப் பாடல்கள் .................... 2005
4. இல்லஞ் சிறந்திட வாழ்க! .................... 2007
5. இறையருட் செல்வர்கள் .................... 2007
6. சிவகாமி அறநெறிப்பாடசாலை 10ஆம் ஆண்டு
மலர் .................... 2007
7. மழலைச் செல்வங்கள் .................... 2008
8. ஈழத்துச் சக்தியின் அற்புதங்கள் .................... 2009
9. ஐயப்பன் வழிபாடு .................... 2009
10. பிள்ளைக்கனி அமுது .................... 2010
11. தேவிபாகவதக் கதைகள் .................... 2011
12. யாழ் மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த
சான்றோர்கள் .................... 2012
13. கலைஞானசுரபி .................... 2012
14. திருமுறைப் பாடல்கள் .................... 2012
15. அருள்ஞானதீபம் .................... 2013
16. இணையிலி .................... 2013
17. உதயதாரகை .................... 2014
18. இறையருள் அமுதம் .................... 2014
19. நல்லூர் கந்தசுவாமி கோயில் .................... 2016
20. கிராமிய மண்ணில்
முருகன் ஆலயங்கள் மூன்று .................... 2016
21. வித்தக விநாயகர் .................... 2017
22. ஔவைமொழி .................... 2017
23. ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் .................... 2017
24. பெண் எனும் மகாசக்தி .................... 2017
25. உலகப்பெருமஞ்சம் நிறுவிய இணுவில்
பெரியசந்நியாசியாரின் 101ஆம் ஆண்டு மலர் .................... 2018
26. பஜனைப்பாவலர் - தியாகராஜ சுவாமிகள் .................... 2018
27. தமிழ்வேதத்தின் வித்தான நால்வர் நற்றமிழ் (சம்பந்தர்)...... 2018
28. தமிழ்வேதத்தின் வித்தான நால்வர் நற்றமிழ் (நாவுக்கரசர்).. 2018
29. சித்தர்களும் சிவபூமி மண்ணின் எழுகோலமும் .................... 2019
30. எம் முன்னோரின் வாழ்வாதாரமும் மருத்துவமும் .................... 2020
31. இறைபணி துலக்கும் ஆன்மீகக் கதைகள் .................... 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்**
**2020ஆம் ஆண்டின் சிறந்த நூற் பரிசுத் தேர்வில்**
**(ஆன்மீகம்)**
**நூலாசிரியர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்**
**அவர்களுக்கு**
**"சித்தர்களும் சிவபூமி மண்ணின் எழுகோலமும்"**
**என்ற நூலுக்காக வழங்கப்பெற்ற விருது**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைக்கால் சிவன் மணிமண்டபம்



பெரியசந்நியாசியாரால் உருவாக்கப்பெற்ற மஞ்ச அமைப்பு



அம்பலவாணர் சுவாமிகள் காலத்தில் புனரமைப்புச்செய்யப்பெற்ற மஞ்ச அமைப்பு

சுடர்நிலை. இறையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org